பக்கங்கள்: 22 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 30 ஞாயிற்றுக்கிழமை 17.10.2021 கதிர் 346

## இனி இது ரகசியம் அல்ல!

சுமந்திரன் அறிவித்த போராட்டம் என்னவோ மீனவர்களுக்கானது, விவசாயிகளுக்கானது என்று சொன்னாலும், மீனவர்கள், விவசாயிகள் பிரச்சினைகளை ஒதுக்கிவிட்டு சுமந்திரனைத் தோற்கடிப்பதற்காக அந்தப் போராட்டத்தையும் ☞ 2

## திருக்கேதீஸ்வரநாதரை வழிபட்டார் புதிய ஜீவன்



(ந.லோகதயாளன்)

வரலாற்றுச் சிறப்புமிக்க மாந்தை திருக்கேதீஸ்வரத்தில் வடக்கு மாகாண ☞ 2

## ராஜபக்ஷ அரசை விரட்டியடிக்க சகல மக்களும் தயார்நிலையில்

### எதிர்ப்புப் போராட்டத்தில் மனோ முழக்கம்



இயலாமையுடன் செயற்படும் ராஜபக்ஷ அரசை விரட்டியடிப்பதற்கு மக்கள் அனைவரும் தயாராகிவிட்டனர்.

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. குற்றஞ்சாட்டினார்.

பொருள்களின் விலை உயர்வுக்கு எதிராக தலவாக்கலை நகரில் நேற்று நடைபெற்ற போராட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- ☞ 2

## முல்லைத்தீவிலிருந்து பருத்தித்துறை வரை

# மீனவர்களுக்கு நீதி வேண்டி கடல் வழியாக இன்று பேரணி

### மாவை, சிறிதரன், சுமந்திரன் கூட்டாக அழைப்பு

மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு நீதி கோரி இன்று முல்லைத்தீவிலிருந்து பருத்தித்துறை வரை கடல் வழியாகக் கவனயீர்ப்புப் பேரணி முன்னெடுக்கப்படவுள்ளது.

முல்லைத்தீவு – கள்ளப்பாடு கடற்கரையில் காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும் பேரணி, முற்பகல் பருத்தித்துறை கடற்கரையை வந்தடையும்.

எமது மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கான இன்றைய போராட்டத்தில் அனைவரையும் பங்கெடுக்குமாறு அன்புரிமையோடு அழைக்கின்றோம் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதி ராஜா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறிதரன் ஆகியோர் கூட்டாக அழைப்பு விடுத்துள்ளனர். ☞ 2

## எதிர்வரும் காலங்களில் அதிரடித் தீர்மானங்கள்

### மைத்திரி பரபரப்பு கருத்து



மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என அரசிடம் வலியுறுத்தியுள்ளோம். மாகாண சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவோமா அல்லது கூட்டணியாகப் போட்டியிடுவோமா என்பதை எதிர்வரும் காலங்களில் அறிவிப்போம். எமது அதிரடித் தீர்மானங்களை இப்போது அறிவிக்க முடியாது.

– இவ்வாறு ஸ்ரீலங்கா ☞ 2

## 23 இந்திய மீனவர்கள் மீதும் தலா மூன்று குற்றச்சாட்டுகள்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஒக்.17

இலங்கையின் பருத்தித்துறைக் கடற்பரப்பிற்குள் கடந்த 13ஆம் திகதி ஊடுருவிய சமயம் கைது செய்யப்பட்ட 23 இந்திய மீனவர்களிற்கும் 3 குற்றச் சாட்டுக்களின் கீழ் 'பி' அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மீனவர்கள் கொரோனா அச்சம் கரணமாக இடைத்தங்கல் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் விவரங்களை கடற்படையினர் யாழ் மாவட்ட நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

இந்த மீனவர்களிற்கு எதிராக 1979ஆண்டின் 59 இலக்க வெளிநாட்டு மீன்பிடிச் சட்டத்தின் கீழ்,

கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி இன்றி எல்லை தாண்டி மீன்பிடித்தமை –

இழுவை மடி வலையை மீன் பிடிக்க தயாராக வைத்திருந்தமை –

ஆகியவற்றுடன் 1996ஆண்டின் 2 ஆம் இலக்க சட்டத்தை 2017ஆம் ஆண்டு திருத்தம் செய்த இழுவை மடிச் சட்டத்தை மீறியமை – என மூன்று குற்றச் சாட்டுகள் அறிக்கையிடப்பட்டுள்ளன.

இவற்றை ஆராய்ந்த ☞ 2

## நேற்று தொற்று 649

இலங்கையில் நேற்று 649 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய நாட்டில் ☞ 2

## புதிய வைரஸ் பரவும் அபாயம்!

### சுகாதார அமைச்சர் எச்சரிக்கை



புதிய கொரோனா வைரஸ் வகைகள் எப்போதும் நாட்டுக்குள் நுழைவதற் கான சாத்தியம் உள்ளது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன நேற்று ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு இப்போது சுற்றுலாப் பயணிகளுக்காகத் திறக்கப்பட்டுள்ளது. துறைமுகங்கள் மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளன. எனவே, புதிய வைரஸ் வகைகள் நாட்டுக்குள் நுழைந்தால் கணிக்க முடியாததாக ஆபத்துக்களை ஏற்படுத்தும். ☞ 2

## மேலும் 23 பேர் மரணம்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 23 பேர் சாவடைந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் நேற்றுமுன்தினம் குறித்த மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன ☞ 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
எப்படியும் மண்கவ்வ வைத்துவிட வேண்டும் என்று முனைப்புக் காட்டப்படுவதாகத் தெரிகின்றது. ஆனாலும் அதையும் மீறி இன்றைய போராட்டத்துக்குச் சரியான ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று சுமந்திரன் தரப்பு நம்புகின்றது.

மக்களும், அரசியலும் சுமந்திரன் பக்கமோ என்னவோ, ஆனால், இயற்கையும் காலநிலையும் சுமந்திரன் தரப்புக்கு ஆதரவு இல்லைப் போல்தான் தெரிகின்றது.

போராட்டத்தின் முதல் கட்டமாக இன்று காலை முல்லைத்தீவுக்கு அருகே கள்ளப்பாட்டில் இருந்து இந்து, கிறிஸ்தவ மதத் தலைவர்களின் ஆசீர்வாதத்தோடு கடலில் ஏறிப் புறப்பட்டு பருத்தித்துறையை வந்தடைவதாக ஏற்பாடு.

இன்று காலை 6.30 மணிக்கு கள்ளப்பாட்டில் ஒன்று கூட்டும்போதுதான் கிழக்குக் கடலை ஒட்டி ஏற்பட்டுள்ள தா ழமுக்கம் சுமந்திரன் அணியின் கடல் பவனிக்கு இடமளிக்குமா என்பது தெரியவரும்.

நேற்றிரவு வரை கடல் கொந்தளிப்பாக இல்லை என்று தகவல் கிடைத்தது. இன்று காலை நிலைமை என்னவென்று தெரியவில்லை. எது, எப்படியென்றாலும் கடல் கரையிலிருந்து சுமார் ஐம்பது தொடக்கம் நூறு மீற்றர் தொலைவிலேயே படகுகள் பவனி இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சில டசின் படகுகளுடன் பவனி சுருங்குமா, அல்லது சில நூறாக அது பருக்குமா என்பது இன்று காலை தெரியும்.

சிறிதரன் எம்.பியும், சாணக்கியன் எம்.பியும் இன்று போராட்டத்தில் கலந்து கொள்வர் என்று கூறப்படுகின்றது. சாள்ஸ் நிமலநாதன் எம்.பி. குறித்து எதுவும் தெரியவில்லை.

இந்தப் போராட்டத்துக்கு மேயர் மணிவண்ணன் தரப்பு ஆதரவு தெரிவித்திருப்பதாகவும் தெரிகின்றது.

தமிழரசுக் கட்சிக்குள்ளேயே எதிர்பாராத தரப்புகளிடமிருந்து கடைசி நேரத்தில் ஆதரவு கிட்டினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

சுமந்திரன் எம்.பி. அழைப்பு விடுத்த போராட்டம் தம் தலைமையில் நடப்பதாகச் செய்திகள் வெளியானமை குறித்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு அதிருப்தி என்று தகவல்.

அந்தச் செய்தி காலைக்கதிரில்தான் வெளியாகி இருந்தது. எனினும், நேற்றிரவு வரை அது தொடர்பில் அவரிடமிருந்து எந்த மறுப்பும் கிட்டவில்லை.

ஆனால், மீனவர் மற்றும் விவசாயிகள் சம்பந்தப்பட்ட போராட்டம் என்பதால் அதில் தாம் கலந்து கொள்ள வேண்டும் என்று நேற்றிரவு வரை அவர் மிக உறுதியாக இருந்தார் என்று அறிய வந்தது. சிறிது சுகவீனமுற்றிருக்கின்றமையால் இன்றைய போராட்டம் ஆரம்பிக்கும் முல்லைத்தீவுக்கு அவரால் செல்ல முடியாமல் இருக்கக்கூடும். ஆனால் முல்லைத்தீவில் படகில ஏறும் போராட்டக்காரர்கள் பருத்தித்துறையை வந்தடையும் போது அவர்களை அங்கு வரவேற்று அந்த இடத்தில் மாவை சேனாதிராசாவும் பேராட்டத்தில் இணைவார் எனத் தெரிகின்றது.

போராட்டம் என்னவோ, சுமந்திரன் அறிவித்தது. அதற்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்தமையால் பங்காளிக் கட்சித் தலைவர்களுடனும், தமிழரசின் வேறு சில பிரமுகர்களுடன் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா தாமே போராட்டம் நடத்த வேண்டியிருந்ததார் எனவும் தகவல். மத்தளம் என்றால் வேறு. மேளம் என்றால் இரண்டு பக்கங்களிலும் அடி வாங்கித்தானாக வேண்டும். அந்த நிலைமை தமிழரசுத் தலைவருக்கு...!

வடக்கு, கிழக்கில்தான் விவசாயிகள் போராட்டத்தை 'சுமந்திரனின் போராட்டமாக' பார்க்கும் நிலைமை.

தெற்கில் அப்படியல்ல. அங்கு விவசாயிகள் எல்லோரும் அரசுக்கு எதிராக கெம்பி நிற்கின்றார்கள். உரத்துக்கு உரிய மாற்றீடு – மாற்று ஏற்பாடு – செய்யாமல் இரசாயன உரங்களுக்குத் தடை விதித்தமையால் விவசாயிகள்பாடு பெரும் திண்டாட்டம். விவசாய செய்கை எல்லாம் பெரும் நட்டம். அரசுக்கும், ஜனாதிபதி க்கும் எதிராக அவர்கள் கொதித்துப் போய் நிற்கின்றார்கள்.

அதிகாரத்துக்கு மிக வலிமையான ஆதரவோடு வந்து, குறுகிய காலத்தில் அந்தச் செல்வாக்கை இழந்து, மக்கள் எதிர்ப்பை பெருமளவில் சம்பாதித்த ஒரே அரசு என்ற பெருமையை கோட்டாவின் இந்த அதிகாரம் பதிவு செய்கின்றது என தெற்கு ஊடகவியலாளர்கள் உறுதிபடக் கூறுகின்றார்கள்.

விவசாயிகள் பிரச்சினை, பொருளாதார நெருக்கடி போன்ற சிக்கல்களில் இருந்த இந்த அரசு மீளுவதற்கான வாய்ப்பு அடியோடு இல்லை என்பதுதான் களநிலைமை.

– மின்னல் –

## மீனவர்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
எமது கடல் வளத்தையும் நீரியல் வளத்தையும் மிக மோசமாக அழிக்கும் இழுவைப்படகுகள், 2017ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்டுள்ளன. ஆனாலும், கடற்றொழில், நீரியல் அதிகாரிகள் இந்தத் தடையை அமுல்படுத்தாத காரணத்தால் உள்ளூர், வெளிப்பிரதேச மற்றும் வெளிநாட்டு இழுவைப்படகுகள் தொடர்ச்சியாக எமது கடல் வளத்தை முற்றாக சூறையாடுகின்றன.

இந்தநிலை தொடருமாக இருந்தால் அடுத்த தலைமுறைக்கே கடல் வளம் இல்லாது போய்விடும்.

இந்தச் சட்டத்தை முறையாக அமுல்படுத்தக் கோரி இன்று முல்லைத்தீவிலிருந்து பருத்தித்துறை வரை கடல் வழியான எதிர்ப்புப் பேரணி இடம்பெறும்.

இழுவைப் படகு தடைச் சட்டத்தை முறையாக அமுல்படுத்துமாறு கடற்தொழில் நீரியல்துறை அமைச்சரைக் கோருவதே இந்தப் பேரணியின் நோக்கமாகும். அனைத்து மக்களும் இந்த எதிர்ப்புப் பேரணிக்கு ஆதரவு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்று அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## ராஜபக்ஷ அரசை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தோட்டத் தொழிலாளர்கள், ஆசிரியர்கள், மீனவர்கள், விவசாயிகள் என அனைவரையும் ராஜபக்ஷ அரசு நடுவீதிக்கு கொண்டுவந்துவிட்டது. ஏற்கனவே பொருளாதார பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ள தோட்டத் தொழிலாளர்களே தற்போதைய விலை உயர்விலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்காக எவரும் குரல் எழுப்புவதில்லை. தமிழ் முற்போக்கு கூட்டணியே குரல் எழுப்புகின்றது.

இன்று தலவாக்கலையில் நடைபெறும் போராட்டம் மலையகம் எங்கும் முன்னெடுக்கப்படும். தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா வழங்கப்படும் எனக்கூறி ஏமாற்றியுள்ளனர். இன்று தோட்டங்கள் கம்பனிகளிடம் அடகு வைக்கப்பட்டுள்ளன.

இந்த அரசால் முடியாது. முடியாதவர்கள் வீட்டுக்குச் செல்வதே நல்லது – என்றார்.

## நேற்று தொற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 31 ஆயிரத்து 70 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் மேலும் 347 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி நாட்டில் இதுவரை 4 இலட்சத்து 92 ஆயிரத்து 305 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர்.

## எதிர்வரும் காலங்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சுதந்திரக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்துள்ளார்கள்.

மக்கள் மத்தியில் ஏழ்மை உருவாகியுள்ளது. இந்தப் பிரச்சினைகளுக்குக் குறுகிய காலத்தில் தீர்வு காண முடியாது.

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் நீண்டகாலத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு தேசிய திட்டம் வகுக்கப்பட வேண்டும்.

அரசு மாறும்போது அபிவிருத்திக் கொள்கைகள் மாற்றமடைந்தால் நாட்டை முன்னேற்ற முடியாது. இதுவரையில் இவ்வாறான தன்மையே காணப்பட்டது.

தேசிய கொள்கைத் திட்டத்தின் ஊடாகவே நாட்டை முன்னேற்ற முடியும் என்பதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுதியாகவுள்ளது.

நீண்டநாள் திட்டத்தை உள்ளடக்கிய தேசிய கொள்கையைத் தயார்படுத்த அவதானம் செலுத்தியுள்ளோம் – என்றார்.

## 23 இந்திய மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பருத்தித்துறை மாவட்ட நீதிபதி பி.கிருசாந்தன் 23 மீனவர்களையும் எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டமையோடு அந்தக் காலத்தை காரைநகர் கடற்படைத் தளத்தில் தனிமைப்படுத்தலில் வைத்து, 25 ஆம் திகதி பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தவும் கட்டளையிட்டார்.

இந்த மீனவர்களுக்கு எதிரான குற்றப் பத்திரம் இதுவரை தாக்கல் செய்யப்படவில்லை.

## திருக்கேதீஸ்வர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஆளுநர் ஜீவன் தியாகராஜா வழிபாடுகளில் ஈடுபட்டார்.

வடக்கு மாகாண ஆளுநராகப் பதவியேற்றுள்ள அவர் நேற்று பாலாவியில் நீராடி திருக்கேதீஸ்வரநாதரை வழிபட்டார்.

## நாவலப்பிட்டி இளைஞர் விபத்தில் பரிதாபச் சாவு

வட்டவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரோ லினா பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இளை ஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நாவலப்பிட்டி பகுதியைச் சேர்ந்த 24 வயது டைய எந்தனி டொமினிக் என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று வட்டவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹற்றன் – கொழும்பு பிரதான வீதியில் வட்டவளை கரோலினா பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் வீதியில் வழுக்கி விபத்துக்குள் ளாகியுள்ளது.

வட்டவளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த உயிரிழந்தவரின் சடலம், பிரேத பரிசோதனைக்காக நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு நேற்று கொண்டு செல்லப்பட்டது.

## புதிய வைரஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
முழுமையாகக் கொரோனாத் தடுப்பூசி போடப்பட்ட போதிலும் மக்கள் சுகாதார வழிகாட்டுதல்கள் மற்றும் நடைமுறைகளைக் கண்டிப்பாகப் பின்பற்றுவது அவசியம்.

தற்போதைய நிலவரப்படி, மொத்த மக்கள் தொகையில் சுமார் 67 சதவிகிதம் பேர் கொரோனாத் தடுப்பூசியின் ஒற்றை டோஸைப் பெற்றுள்ளனர். அதேநேரத்தில் 58 சதவிகிதம் பேருக்கு இரண்டு அளவுகளும் வழங்கப்பட்டுள்ளன.

நாம் திருப்திகரமான நிலையை அடைய வேண்டுமானால், மொத்த மக்கள் தொகையில் 70 முதல் 80 சதவிகிதம் வரை தடுப்பூசி போடுவது முக்கியம் – என்றார்.

## மேலும் 23 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
என்று அரச தகவல் திணைக்களத்தால் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 17 ஆண்களும், 6 பெண்களும் அடங்குவர். இவர்களில், 30 தொடக்கம் 59 வயதுக்கு இடைப்பட்ட 5 பேரும், 60 வயதுக்கு மேற்பட்ட 18 பேரும் உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய, நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 472 ஆக அதிகரித்துள்ளது.



# மட்டு. மாவட்டத்திலுள்ள வளங்களைப் பயன்படுத்தி பொருளாதார மேம்பாட்டை கொண்டு வரவேண்டும்

## சந்திரகாந்தன் கருத்து

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கும் வளங்களை பயன்படுத்தி பொருளாதார மேம்பாட்டை கொண்டு வரவேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவரும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு வாகரைப்பகுதியில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருக்கும் நீரியல் பூங்கா தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவரும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் இடம்பெற்ற போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

குறிப்பாக எங்கள் மாவட்டத்தில் இருக்கும் மீன், நண்டு, இறால் வளர்க்கக்கூடிய இடங்களை சரியாக அடையாளப்படுத்தி, முயற்சியுள்ள மக்களுக்கு பகிர்ந்தளித்து, அதேபோன்று வெளிநாட்டு முதலீட்டாளர்களையும் வரவழைத்து முதலீட்டை அதிகரித்து, இதன் ஊடாக வேலைவாய்ப்பை அதிகரிக்க திட்டமிட்டுள்ளோம்.

அடுத்த வருட இறுதிக்குள் இவற்றை இடம்பெறச் செய்வது என்றும் அதிலும் விசேடமாக அதிகூடிய வெளிநாட்டு வருமானத்தை ஈட்டுவதோடு உள்நாட்டிலுள்ள குடும்பங்கள் மற்றும் தனிநபர் வருமானத்தை அதிகரிக்க கூடிய திட்டங்களுக்கு முன்னுரிமை அளிப்பது என்றும் அதற்கான ஆரம்ப பூர்வாங்க வேலைகளை எப்படி செய்வது என்றும் தேவையான துறை சார்ந்த அனுமதிகளையும் அல்லது சட்ட ரீதியாக உள்ள நடைமுறைகளை பின்பற்றி விரைவுபடுத்தி அதற்கான ஆவணங்களை அபிவிருத்திக் குழுவிற்கு சமர்ப்பிக்க தீர்மானித்துள்ளோம். – என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் உள்ளிட்ட துறைசார் திணைக்களங்களின் அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.


Personal English Classes

K Ganesh (BA.Pera)
இந்த தனி வகுப்புகளில் படிக்கும் போது பேச்சு பயிற்சிகளும் இடம்பெறும்.
Grade 7-
GCE OL AL
பட்டதாரிகள் ,
தொழில்புரிவோர்
Spoken Grammar
கற்கமுடியும்.
077 766 8725
நீராவியடி, யாழ்ப்பாணம்

மணமகள் தேவை
யாழ். இந்து வேளாளர் குடும்பம், 1985 ஆம் ஆண்டு பிறந்த நற்குணமுள்ள உத்தரட்டாதி நட்சத்திரம் சு/ செவ்.4இல், பாவம் 19 1/2 உள்ள, இலண்டனில் வசிக்கும் பட்டதாரி மணமகனுக்கு தகுதியான 1990 ஆம் ஆண்டிற்கு மேற்பட்ட மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு:- 0779147318
Viber - 0766688199

Australian Skilled - Recognised Graduate visa for Engineers
Civil, Mechanical, Electrical, Telecommunication, Chemical Engineers
(Graduated within the last 2 years)
18 months visa to work in any states and cities in Australia
Requirements:
✓ Age – below 31
✓ BSc.Engg from University of Moratuwa, University of Peradeniya, University of Jaffna, and University of Ruhuna
✓ IELTS overall 6
BOOK FREE CONSULTANT ADVICE FOR:
Student Visa / Partner Migration Visa / Parents Visa / Business Visa / Visitor Visa /
HOTLINE: 0766228891

0766228891
Contact us:
Australian Migration Consultants
41 1/2, George R De Silva Mw,
Colombo 13
0112437285, Email: sl.austvisa@gmail.com

இறைச்சிக் கோழி விற்பனை
புறோயிலர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

## தென்னம்பிள்ளைகள் முகமாலையில் திருட்டு!



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஒக்.17

முகமாலைவடக்குப்பகுதியில் நடுகை செய்யப்பட்டிருந்த நூற்றுக்கும் அதிகமான தென்னம் பிள்ளைகள் 14.10.2021 அன்று இரவு திருடர்களால் பிடுங்கி செல்லப்பட்டுள்ளன.

யுத்தத்தால் அனைத்து தென்னைகளும் அழிவடைந்த நிலையில் காணப்பட்டு இருந்த காணியில் உரிமையாளரின் முயற்சியால் தென்னம் பிள்ளைகள் மீள் நடுகை செய்யப்பட்டன. இவ்வாறு நாட்டப்பட்ட நிலையில் அனைத்து தென்னம் பிள்ளைகளும் இரவோடு இரவாகத் திருடர்களால் பிடுங்கி எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

மேற்படி கிராமத்தில் அண்மை நாள்களாக பல திருட்டுகள் இடம்பெற்று வருகின்றமையுடன்பாடசாலையை உடைத்து திருட்டு நடைபெற்றிருக்கின்றது. கால்நடைகள் திருடப்பட்டு இருக்கின்றன. சட்டவிரோத மண் அகழ்வு நடைபெற்று வருகின்றது. இதன் தொடர்ச்சியாகவே தற்பொழுது தென்னம் பிள்ளைகள் பிடுங்கி எடுக்கப்படிருக்கின்றன. இதேநேரம் இந்தக் கிராமத்தில் அண்மை நாள்களாக வெளி ஆள்களின் பிரசன்னம் அதிகரித்துக் காணப்படுகின்றது. ஆகவே, தொடர்ச்சியாக இந்தச் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்ற நிலையை தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

Jaffna College Institute of Technology
Calls for the following courses
Computer Certificate Courses ( 3 – 4 months Part time)
➢ Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
➢ Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
➢ Computer Hardware Technician
➢ Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
➢ Java, C++ Programming
Commencement in November 2021
At Our Jaffna Centre along
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road
Jaffna.
For further details contact
Tel no: 0212250975/0212223382
Email: ejcit@sltnet.lk.

MIGRATE TO AUSTRALIA
Engineering Degree Holders: Civil, Mechanical, Aeronautical, Chemical, Telecommunication, Electrical & Electronics, Land Surveyor, Quantity Surveyors
Diploma Holders (HNDE, NDT, NDES, C+G Advanced Diploma, OUSL Diploma in Technologist): Civil Engineering Associates, Mechanical Engineering Associates, Telecommunications Engineering Associates
Certificate Holders (CGTTI, AETI, ATI, Jaffna Technical College, C+G Technician Diploma or 5 years Work experience with evidence): Motor / Diesel Mechanics, Auto Electricians, Machinists, Fitters, Welders, Carpenter, Chef, Cook
Requirements: Age below 35 + Work experience
AUSTRALIAN STUDENT VISA FOR REGISTERED NURSES
Diploma/ BSc Nursing qualified nurses with Nursing Council Registration
Minimum 1 year experience and IELTS 6.5 with Sufficient Funds
Contact us:
Australian Migration Consultants
411/2, George R De Silva Mw,
Colombo 13
0112437285,
Email: sl.austvisa@gmail.com
HOTLINE: 0766228891


காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பிரித்தாளும் தந்திரம்

**ஆட்சியாளர்களின் பிரதான தந்திரோபாயங்களில் ஒன்று பிரித்தாளுவது. அரசாட்சியில் மட்டுமல்ல, சாதாரண கம்பனி நிர்வாகத்திலும் கூட இந்த முறைமை வழமைதான்.**

**பொதுவாக விடயங்களைக் கையாள்வதற்கான சாணக்கிய முறைகளாக உபதேசிக்கப்படும் பஞ்ச தந்திரங்களில் பிரித்துக் கையாள்வது நேரடியாக அடங்காவிட்டாலும், இதுவும் மெச்சத்தக்க ஒரு தந்திரோபாயம்தான் – யுக்திதான். ஒரு வகையில் இது மித்ரபேதம் ரகத்தைச் சேர்ந்தது.**

**இலங்கைத் தீவின் ஆட்சி அதிகாரத்தை வன்கவர்ந்த அந்நியர் – குறிப்பாக ஆங்கிலேயர் – இந்தத் தந்திரோபாயத்தைத்தான் தமது ஆட்சிமுறையில் கையாண்டார்கள். தமிழர்களையும் சிங்களவர்களையும் வேறு வேறு விதமாகக் கையாண்டு, இரு தரப்பினர்களையும் முரண்பட வைத்து, அதன் மூலம் தங்கள் பிடியை இறுக்கிக் கொண்டனர். ஆளப்படும் தரப்புகள் தங்களுக்குள் மோதிக் கொண்டிருந்தால், அழுத்தம் ஆட்சியாளர்களாகிய தங்கள் பக்கம் திரும்பாது என்பது இந்தத் தந்திரோபாயத்தின் பிரதான கருப் பொருள்.**

**அதனையே வெள்ளைக்காரர்கள் செய்தார்கள். இப்போது ஆட்சி அதிகாரத்தை அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட பௌத்த, சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்கள் அதையே தாம் மேலாதிக்கம் செலுத்தி ஆளும் தமிழர்கள் விடயத்தில் கையாளுகின்றனர்.**

**தமிழர்கள் தரப்பை மோதவிட்டு, அவர்களைப் பலவீனப்படுத்தினால் தங்களின் ஆட்சியதிகாரம் சவால்களுக்கு உட்படுத்தப்படாமல் உறுதியாக இருக்கும் என்பது ஆட்சியாளர்களின் நம்பிக்கை.**

**சர்வதேச அழுத்தங்கள் மற்றும் நெருக்குவாரங்கள் காரணமாக தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு நீதி, நியாயமான தீர்வு ஒன்றை முன்வைக்க அல்லது அதற்கான முயற்சிகளை எடுப்பதாகக் காட்ட வேண்டிய இக்கட்டும் கட்டாயமும் கொழும்புக்கு உள்ளது.**

**தமிழர்கள் தரப்பை பிரித்து, முரண்பட வைத்துக் கையாள்வதன் மூலம், அவர்களைப் பலவீனப்படுத்தித் தமது முடிவை ஒரு தீர்வாக அவர்கள் மீது திணிக்கலாம் எனத் திட்டமிடுகின்றது கொழும்பு ஆட்சிப்பீடம்.**

**தீர்வுக்கான முயற்சியில் தமிழர் பக்கத்தில் சம்பந்தப்பட வேண்டிய தரப்புகள் இரண்டு. ஒன்று – களத்தில் (வடக்கு – கிழக்கில்) வாழும் தமிழர்கள். அடுத்தது – புலம்பெயர் வாழும் தமிழர்கள்.**

**புலம்பெயர் தமிழர்களின் பிரதான – முக்கிய – தரப்புகள் பலவற்றையும் கோட்டாபய ராஜபக்ஷ அரசு தடை செய்துள்ளது. அத்தரப்புகளுடன் பேச்சு இல்லை என்று நாட்டின் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அறிவித்து விட்டார்.**

**அப்படியானால், தமது எடுபிடிகளான – செம்புகாவிகளான – சில புலம்பெயர் தமிழர்களை அழைத்து வந்து அவர்களைப் புலம்பெயர் தமிழர் பிரதிநிதிகளாகக் காட்டி, தன் இழுப்புக்கு ஆடும் அத்தரப்புகள் மூலம் தன் விருப்பத்தை – முடிவை – தமிழர் தரப்பில் கட்டியடிக்க கொழும்பு திட்டமிடுகின்றது.**

**இதேபோன்று வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்கள் சார்பான அரசியல் பிரதிநிதிகளான தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்குப் போட்டியாக மற்றைய தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளையும் பேச்சுக்கு அழைத்துக் குழப்பத்தை ஏற்படுத்த கொழும்பு வியூகம் வகுப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.**

**பிரித்தாளும் கொழும்பின் இந்தத் தந்திரோபாயத்துக்கு நமது தமிழர் தரப்புகளின் போக்கும் நன்கு உதவும் என்பது கண்கூடு. தமிழர்கள் பிரிந்து நிற்பதே பௌத்த, சிங்களப் பேரினவாத அரசுகளுக்கு பெரும் வரப்பிரசாதம்.**

## பயங்கரவாதத் தடைச்சட்ட 13 ஆவது பிரிவின் கீழ் ஆலோசனைச் சபை உறுப்பினர்கள் தெரிவாகினர்!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால், பயங்கரவாத தடைச் சட்டத்தின் 13 ஆவது பிரிவுக்கமைய, ஆலோசனைச் சபை உறுப்பினர்கள் பெயரிடப்பட்டுள்ளார்கள். முன்னாள் பிரதம நீதியரசர் அசோக டி சில்வா தலைமையிலான இந்த ஆலோசனைச் சபையில் ஓய்வு நிலை மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஆர்.ஹெய்யந்துடுவ மற்றும் ஓய்வு பெற்ற சொலிஸிட்டர் ஜெனரல் சுஹத கம்லத் ஆகியோர் உறுப்பினர்களாக நியமனம் பெற்றுள்ளனர். இந்தச் சபை, பயங்கரவாத நடவடிக்கைகள் சம்பந்தமாக சிறைத்தண்டனையை அனுபவித்து வருகின்றவர்கள், தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் ஆராய்ந்து, இவர்களுக்கான விடுதலைப் பொறிமுறையைக் கண்டறிந்து, ஜனாதிபதிக்கான பரிந்துரை ஆலோசனையைச் செய்யுமென்று தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக, நீண்டகாலமாக ஆலோசனைச்சபை ஒன்று நியமிக்கப்படாத காரணத்தால், கைதிகள் தங்களது பிரச்சினைகளை இந்தச் சபையிடம் முன்வைக்க சந்தர்ப்பம் கிடைக்கும் என்று, ஜனாதிபதியின் சட்டத்துறை பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இந்த முன்னேற்ற முன்னெடுப்பை பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் 'குரலற்றவர்களின் குரல் அமைப்பு' வரவேற்கின்றது. மேலும், ஆலோசனைச் சபையின் செயற்கருமங்கள் எப்போதும் போல் காலத்தால் அள்ளுண்டு போகாது, 'தமிழ் அரசியல் கைதிகளின் நீண்ட கொடுஞ்சிறை வாழ்வுக்கு முழுமையான தீர்வினைப் பெற்றுத் தர வேண்டும்' என்று இந்த அமைப்பு எதிர்பார்க்கின்றது.

கடந்த 2020 பெப்ரவரியில் கொழும்பு புதிய மகஸின் சிறைச்சாலைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி, அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளிடம் 'விரைவில் ஆணைக்குழுவொன்றை அமைத்து அரசியல் கைதிகளின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்' என்று கூறியிருந்தார்.

கடந்த காலத்தில் ஜே.வி.பி. கைதிகள் தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கு அன்றைய ஜனாதிபதியால் 'நீதி அதிகாரம் கொண்ட ஆணைக் குழு' ஒன்று நிறுவப்பட்டது.

இந்நிலையில் தற்போது, வர்த்தமானியிடப்படாத 'ஆலோசனைச் சபை' ஒன்றையே தற்போதைய ஜனாதிபதி நியமித்துள்ளார்.

எவ்வாறாயினும் பெயரிடப்பட்டுள்ள, சட்டம் மற்றும் நீதித்துறை சார்ந்த உறுப்பினர்களின் தெரிவானது, எமக்கு நம்பிக்கையைத் தருகின்றது.

குறிப்பாக, கடந்த காலத்தில் பதில் சட்ட மா அதிபராக கடமையாற்றிய சிரேஷ்ட சொலிஸிட்டர் ஜெனரல் சுஹத கம்லத், தமிழ் அரசியல் கைதிகளுக்கெதிரான பயங்கரவாதத் தடைச் சட்ட வழக்குகள் தொடர்பில் நன்கு பரிச்சயம் கொண்டவராக விளங்கியிருந்தார். அது மட்டுமன்றி, கொழும்பு - மகஸின் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை கோரி உணவு தவிர்ப்பில் ஈடுபட்டிருந்தபோது, 2015 /10/15 அன்று அவர் சிறைச்சாலைக்கு நேரில் சென்று, நீதிஅமைச்சருக்கு முன்னால், பல தீர்வுப்பொறிமுறைகளை செயற்படுத்துவதாக கூறியிருந்தமை, நினைவு மீட்டத்தக்கது.

நியமிக்கப்பட்டுள்ள ஆலோசனைக் குழு, முடிந்தளவுக்கு சிறைச்சாலைக்குச் சென்று தமிழ் அரசியல் கைதிகளை நேரில் சந்தித்து, சூழ்நிலைக்கைதிகளான அவர்களது உண்மை நிலையை அறிந்து, பரிந்துரைகளை முன்வைப்பதே சாலப் பொருத்தமாக இருக்குமென்று நாம் நம்புகின்றோம்.

தமிழ் மக்களின் நீண்ட கால கோரிக்கையான தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரம், குறைந்த வேகத்திலாவது அசையத் தொடங்கியிருப்பது சிறந்த விடயமே. இந்த நற்கருமத்தை முழுமைப்படுத்துவதன் மூலம் அரசின் மீதான மக்களின் எதிர்பார்ப்பு ஈடேறும் என நம்பலாம்.

## நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களை ஆண்டு இறுதிக்குள் நிறைவுறுத்துக!

### பிரதமர் மஹிந்த பணிப்பு



அபிவிருத்தித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை மீண்டும் திறைசேரிக்கு அனுப்புவதற்கு பதிலாக ஆண்டு இறுதிக்குள் அபிவிருத்தித் திட்டங்களை நிறைவு செய்யுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் அதிகாரிகளுக்கு கடந்த வெள்ளிக்கிழமை அறிவுறுத்தினார்.

அலரி மாளிகையில் இடம்பெற்ற நகர அபிவிருத்தி, கழிவுப்பொருள்களை அகற்றுதல் மற்றும் சமுதாய துப்புரவேற்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் மூன்றாம் காலாண்டுக்கான முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தின் போது விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

திறைசேரியில் மிகுதியாகும் நிதித்கேற்ப முதலீடுகளின் ஊடாகத் திட்டங்களை செயற்படுத்துவது தொடர்பில் ஏற்கனவே கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சிறிநிமல் பெரேரா இதன்போது சுட்டிக்காட்டினார்.

கடந்த ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்ட நூறு நகர அபிவிருத்தித் திட்டங்கள் இதுவரை வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்த சிறிநிமல் பெரேரா, இவ்வாண்டு டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் குறித்த அபிவிருத்தித் திட்டங்களில் பெரும்பாலானவையை நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது எனவும் குறிப்பிட்டார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் உதய நாணயக்கார 2024 ஆம் ஆண்டுக்குள் 60 ஆயிரம் புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கான திட்டம் காணப்படுவதாகத் தெரிவித்தார்.

அதற்கமைய குறைந்த வருமானம் ஈட்டுவோருக்காக 40 ஆயிரம் வீடுகளும், நடுத்தர வகுப்பினர் மற்றும் பிற மட்டத்தினருக்கு 20 ஆயிரம் வீடுகளும் நிர்மாணிக்கப்படவுள்ளன எனவும் குறிப்பிட்டார். நூறு நகர திட்டத்துக்கமைய அந்த ஒவ்வொரு நகரிலும் 100 வீடுகள் என்ற அடிப்படையில் 10 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன எனவும் உதய நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் மாத்திரமன்றி கிராமப் பகுதிகளிலும் இந்த வீடமைப்புத் திட்டங்களை முன்னெடுங்கள் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

நடுத்தர வகுப்பினருக்காக கொழும்பில் 3 ஆயிரம் வீடுகளும், 2 ஆயிரம் வீடுகள் கொழும்பின் புறநகரிலும் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக இதன்போது தெரிவிக்கப்பட்டது.

நாடளாவிய ரீதியில் செயற்படுத்தப்பட்டு வரும் நடைபாதை நிர்மாணத்துக்கமைய அப்பாதைகளை அண்மித்ததாக கிராமிய உற்பத்தி பொருள் விற்பனை நிலையங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர குறிப்பிட்டார்.

கொழும்பு பெருநகர நகர்ப்புறத் திட்டம் மற்றும் மூலோபாய நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தின் நிறைவில் அமைச்சின் ஒவ்வொரு நிறுவனங்களிலும் செயற்படுத்தப்பட வேண்டிய நிதித் திட்டமிடல் மற்றும் மனிதவள முகாமைத்துவ மாதிரி பிரதமரால் நிறுவன தலைவர்களுக்கு வழங்கப்பட்டது.

# எரிபொருள்களின் விலைகள் 2 வாரங்களுக்கு அதிகரிக்காது

## அமைச்சர் கம்மன்பில உத்தரவாதம்



இலங்கைக்கு ஒரு வருடத்துக்குத் தேவையான எரிபொருளை கொள்வனவு செய்ய ஓமான் அரசாங்கத்திடம் கடன் உதவிகளை கேட்டுள்ளதாகவும், அதேபோல் நிதி அமைச்சின் மூலமாக இதற்கான நிவாரணங்களை எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கும் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில, அடுத்த இரண்டு வாரங்களுக்கு எரிபொருள் விலை அதிகரிக்காது எனவும் கூறியுள்ளார்.

திருகோணமலை எண்ணெய் குதங்களை இந்தியாவிடம் இருந்து பெற்றுக்கொள்ள இந்தியாவுடன் யுத்தம் செய்ய முடியாது எனவும் அவர் கூறுகின்றார்.

திருகோணமலை எண்ணெய் குதங்களை இந்தியாவிற்கு வழங்குவது தொடர்பான குற்றச்சாட்டுக் கள், எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைப் கூறியுள்ளார்,

அவர் மேலும் கூறுகையில் –

இந்திய–இலங்கை ஒப்பந்தத்தை நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டேன், ஆனால் இந்த ஒப்பந்தத்தை இந்தியா ஏற்றுக்கொள்கின்ற நிலையில் நாம் ஒன்றுமே செய்ய முடியாது.

இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில் மிகவும் தெளிவாக இந்த உடன்படிக்கை கூறப்பட்டுள்ளது. இணை அபிவிருத்தித் திட்டமாக இது முன்னெடுக்கப்படும் என கூறப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கையை செய்த வேளையில் ஒரு லட்சம் அமெரிக்க டொலர் அடிப்படையில் இந்த உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்ல இந்தியாவின் அழுத்தத்தில் இந்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது, ஒரு பக்கம் விடுதலைப் புலிகளை இந்தியாவால் பயிற்ச்சியளிக்கப்பட்டு, இலங்கை அரசாங்கத்தை அடி பணிய வைத்து பலாத்காரமாக இந்திய – இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதன் மூலமாக இந்தியாவிற்கு தேவையான நகர்வுகளை செய்துகொண்டுள்ளனர்.

அதில் சிக்குண்ட விடயமே திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் ஒப்பந்தம். இன்றும் அந்த சூழ்ச்சியில் நகர்த்தப்படுகின்றது. இந்தியாவிடம் இலங்கையை அடிமைப்படுத்தவே முயற்சித்தனர்.

இப்போதும் எமக்காக இந்த நிலத்தை மீளவும் பெற்றுக்கொள்ளவே நாம் முயற்சித்துக்கொண்டுளோம். எம்மிடம் இருக்கும் ஒரு நிலத்தை மீளவும் எமக்கு பெற்றுக்கொள்ள போராட வேண்டிய அவசியம் இல்லை.

ஆகவே, இந்தியாவின் ஆதிக்கம் இன்னும் திருகோணமலை எண்ணெய் குதங்களை நிர்வகிப்பதில் உள்ளது. அவ்வாறான நிலையில் இலங்கையை விடவும் இந்தியா சிறிய நாடென்றால் எம்மால் ஆதிக்கம் செலுத்த முடியும், ஆனால் இந்தியா மிகப் பெரிய பலம்பொருந்திய நாடு, அவர்களுடன் யுத்தம் செய்து எம்மால் எமது வளங்களை ஆக்கிரமிக்க முடியாது. இராஜதந்திர ரீதியிலேயே இவற்றை எம்மால் கைப்பற்ற முடியும்.

அதேபோல் எரிபொருள் விலை அதிகரிப்பு குறித்து பேசுபொருளாக மாறியுள்ளது, எரிபொருள் விலையை அதிகரிக்கக்கூடாது என்பதே எனது நிலைப்பாடு, ஆனால் நிதி அமைச்சர் இது தொடர்பாக மௌனம் காக்கின்றார், அமைச்சரவையில் இது தொடர்பில் பேசிய வேளையிலும் அவர் ஒரு வார்த்தையேனும் பேசவில்லை. இந்நிலையில் தான் ஓமானிடம் கடன் கேட்டுள்ளோம்.

ஒரு வருடத்துக்கான எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு இந்த கடந்த கேட்கப்பட்டுள்ளது, ஐந்து ஆண்டுகளுக்கு நிவாரணமும், அதன் பின்னர் 20 ஆண்டுகளில் கடன்களை செலுத்தி முடிப்பதை போன்று ஒரு பேச்சு முன்னெடுக்கப்பட்டுள்ளது, இந்த பேச்சு இன்னும் இறுதிப்படுத்தப்படவில்லை, அந்தக் கடன் கிடைத்தால் எரிபொருள் விலை அதிகரிக்காது. ஓமான் அரசின் கடன் கிடைக்காது போனால், திறைசேரியில் நிவாரணம் கிடைக்காது போனால் வேறு சில முயற்சிகளை முன்னெடுக்கின்றோம், அதிலும் தோல்வி கண்டால் எரிபொருவிலை அதிகரிக்கும், இன்னும் இரண்டு வாரங்களுக்கு எரிபொருள் விலை அதிகரிக்காது, அதேபோல் விலை அதிகரித்தாலும் அதிக விலையாக அது அமையாது, எனவே மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. – என்றார்.

## “நாளையை நோக்கிய இலங்கை” என்ற தேசிய நடவடிக்கை ஆரம்பம்


‘நாளையை நோக்கிய இலங்கை’ என்ற தேசிய நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மரபு ரீதியான சிந்தனைகளைக் கடந்து, எதிர்காலத்தை நோக்கிய புதிய சிந்தனைகளின் ஊடாக அறிவின் துணையோடு முன்னேற்றகரமான பொருளாதார முறையை கட்டியெழுப்புவதே இதன் நோக்கம் எனக் கூறப்படுகின்றது.பிரதமர் அலுவலகத்தின் வழிகாட்டலின் கீழ் இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சுடன் இணைந்து, இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகம் இந்த தேசிய நடவடிக்கையை செயற்படுத்து கின்றது.மேலும், கல்வித்துறையை தேசிய பொருளாதாரத்தின் முன்னேற்றத்துக்காக மிகவும் சாதகமான முறையில் பயன்படுத்துவதற்கு இதனூடாக எதிர்பார்க்கின்றமை குறிப்பிடத்தக்கது.


மணமகள் தேவை

யாழ். இந்து வேளாளர் குடும்பம், 1985 ஆம் ஆண்டு பிறந்த நற்குணமுள்ள உத்தரட்டாதி நட்சத்திரம் சூ/ செவ்.4இல், பாவம் 19 1/2 உள்ள, இலண்டனில் வசிக்கும் பட்டதாரி மணமகனுக்கு தகுதியான 1990 ஆம் ஆண்டிற்கு மேற்பட்ட மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு:- 0779147318
Viber - 0766688199





மாங்கல்யா
லக்ஷ்மி நாராயணா
இல:- 266 பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
திருமண சேவை
077 197 1667
077 316 4796

மணமகன் விவரம்

பிறந்த திகதி - 1981.05.24 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - உத்தராடம் 3
கி.பா - 25 செவ் - 2 இல்
தகைமை - B.sc
தொழில் - Company UK PR
எதிர்பார்ப்பு - Uk or ceylon மணமகள் தேவை

பிறந்த திகதி -1984.05.31 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - ரோகினி4
கி.பா - 48 செவ் - 5இல்
தகைமை - G.C.E. A/L தொழில் - UK PR
எதிர்பார்ப்பு - uk + ceylon மணமகள் தேவை

பிறந்த திகதி - 1992.01.23 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - பூரம் 3
கி.பா - 15 செவ் - 10 இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor Eng மணமகள் தேவை

பிறந்த திகதி - 1992.05.22 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - உத்தராடம் 4
கி.பா -37 செவ் - 1இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor பட்டதாரி அரச சேவை மணமகள் தேவை

பிறந்த திகதி - 1987.11.13 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - ஆயிலியம்
கி.பா - 21 செவ் - 8இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor பட்டதாரி அரச சேவை மணமகள்

பிறந்த திகதி - 1991.01.28 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - திருவாதிரை
கி.பா - 31 செவ் - 1 இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor Eng மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1991.03.18 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - ரேவதி
கி.பா - 10 செவ் - 4 இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor Eng மணமகள் தேவை

பிறந்த திகதி -1990.07.03 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - விசாகம் 2
கி.பா - 27 செவ் - 6இல்
தகைமை - M.B.V.S தொழில் - மிருக வைத்தியர்
எதிர்பார்ப்பு - Doctor பட்டதாரி மணமகள் தேவை

மணமகள் விவரம்

பிறந்த திகதி - 1994.01.01 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - மகம்
கி.பா - 19 செவ் / சூரி 6இல்
தகைமை - Accoutant
தொழில் - கிராம சேவையாளர் அரச சேவை
எதிர்பார்ப்பு - கிளிநொச்சி மாங்குளம் வேலை உள்ளவர்கள் தேவை

பிறந்த திகதி - 1994.01.01 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - மகம்
கி.பா - 56 செவ் சூரி - 7 இல்
தகைமை - H.N.D.A தொழில் - Management assistant
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன் யாழ் வேலை மணமகன்

பிறந்த திகதி - 1994.06.03 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - உத்தராட்டாதி 3
கி.பா - 16 செவ் - 9 இல்
தகைமை - B.Sc civil தொழில்-அரசசேவைகொழும்பு
எதிர்பார்ப்பு - Eng அரச சேவை கொழும்பில் தேவை

பிறந்த திகதி - 1992.08.17 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - உத்தராட்டாதி3
கி.பா - 12 செவ் -8 இல்
தகைமை - Bsc Agri தொழில் - விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு - Doctor eng பட்டதாரி

பிறந்த திகதி - 1991.03.05 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - சுவாதி
கி.பா - 18 செவ் - 7 இல்
தகைமை -Business management தொழில் - Bank officer
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச உயர் பதவி மணமகன்

பிறந்த திகதி - 1993.04.20 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - ரேவதி
கி.பா - 40 செவ் - 8இல்
தகைமை - Cima comblied
தொழில் - Bank accountant colombo
எதிர்பார்ப்பு - பட்டதாரி கொழும்பு வேலை மணமகன்

பிறந்த திகதி - 1995.12.06 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - ரோகினி
கி.பா - 10 செவ் -10இல்
தகைமை - Business management தொழில் - company
எதிர்பார்ப்பு - உள்நாடு + வெளிநாடு பட்டதாரி மணமகன்

பிறந்த திகதி - 1989.01.08 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - உத்தராடம் 2
கி.பா - 23 செவ் - 11இல்
தகைமை - கல்வியியல் கல்லூரி தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - அரச சேவை யாழ் வேலை மணமகன்



ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 163




**412.எந்த ஒரு நாடும் தனக்காகவோ, தமிழ் மக்களின் இனப்படுகொலைக்காகவோ தலையீடு செய்வது சாத்தியமில்லை என்றால் இனப்படுகொலை என நிரூபிக்க சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தான் ஒரே வழியா?**

ஒரு சர்வதேச கட்டுப்பாடு செய்யக்கூடிய தீர்ப்பு பெறுவதானால், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்தான் ஒரே வழி. எனினும் தமிழ் மக்கள் அதனிடம் நேரடியாக அணுகுதல் முடியாது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றை ஏற்று கொண்ட, எமக்கு ஆதரவு தரக்கூடிய நாடு ஒன்று தமிழ் மக்கள் மீதான அட்டூழியங்களை, அவர்களுக்காக முன்னெடுத்து செல்லவேண்டும். இதுவரையில் அப்படியான ஒரு நாடு முன்வரவில்லை.

அது தவிர்ந்தால் ஐ.நா. பாதுகாப்பு சபையோ, அன்றில் ஐ.நா. பொது சபையோ தமிழ் மக்கள் மீதான அட்டூழியங்களை விசாரிப்பதற்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்த வேண்டும். அதற்கு வழிமுறைகள் உண்டு. அதில் முதலாவதாக ஐ.நா. பாதுகாப்பு சபை அப்படியான தீர்மானம் மேற்கொள்ள வேண்டும். தற்பொழுது அத்தகைய தீர்மானம் எழுப்பப்பட்டால் ஸ்ரீலங்காவின் நேச நாடுகளான சீனா, ரஷ்யா போன்றவை அதனை முறியடிக்கலாம். அதிலிருந்து மேலெழுந்து போவதானால் அதற்குரிய காலம் சர்வதேச சூழலில் உருவாக வேண்டும்.

**413.அப்படியான காலம் ஒன்று உருவாகும் வரை பொறுப்பதானால் அது பூனை கடல் வற்றுமென்று காத்திருந்து உடல் வலித்து இறந்தது போலாகாதா?**

அப்படியான ஒரு நிலைக்குதான் தமிழ் மக்களின் தலைவர்கள் தமிழ் தேசியத்தை கொண்டு வந்து விட்டிருக்கிறார்கள். ஐ.நா. பாதுகாப்பு சபையின் கட்டமைப்புகளின் பிரகாரம் அவர்களின் தீர்மானம் நிறைவேற்றப்படாமல் சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு இனப்படுகொலைக் குற்றங்களையோ, போர் குற்றங்களையோ, மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களையோ ஆராய்வதற்குப் பாரப்படுத்தும் அதிகாரம் கிடையாது. அப்படியான தீர்மானம் எடுப்பதற்கு ஸ்ரீலங்கா ஒத்து கொள்வதில்லை, அது தங்களது உள்நாட்டு விவகாரம் என்றும், தங்களது இறைமையில் தலையீடு செய்வதாகும் என்றும் வாதிக்கிறார்கள். அந்த வாதத்தின் அடிப்படையில் சீனா, ரஷ்யா போன்ற வீட்டோ அதிகாரம் கொண்ட நாடுகள் அப்படியான பிரேரணை ஏதும் வந்தால் முடக்கும் என்ற நம்பிக்கை ஸ்ரீலங்காவுக்கு உண்டு. அதனால் தங்களது காய்களை அங்கு அவர்கள் மிகவும் தந்திரமாகவும் சாணக்கியமாகவும் இன்று வரை நகர்த்துகிறார்கள்.




நீங்கள் பூனை என்று சொல்லும்பொழுது இன்னுமொரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. பகிர்ந்து கொள்கிறேன். ஸ்ரீலங்கா நிலையில் இவை யதார்தமும் கூட. முள்ளிவாய்க்கால் யுத்தம் முடிந்த பின்னர் இந்தியாவின் முன்னணிப் பத்திரிகையான "தி ஹிந்து" வின் பிரதம ஆசிரியர் என்.ராம், இந்தியா - ஸ்ரீலங்கா நட்புறவுச் சங்கத்தின் அழைப்பின் பேரில் கொழும்பில் உரை ஒன்று நிகழ்த்தினார். அது 'இந்தியா - ஸ்ரீலங்காவின் வளரும் எதிர்காலம்" என்ற தலைப்பிலானது. அந்த உரையில் அவர் பின்வருமாறு கூறியிருந்தார்:-

1993இன் பின் எந்தக் கட்சிகள் ஆட்சிகளிலிருந்தாலும் எரிச்சலற்ற, நம்பிக்கையுள்ள, ஆக்க பூர்வமான, உறுதியான, பொருளாதார - கலாச்சார - மக்களுக்கும் மக்களுக்குமான - ஓர் உறவை வளர்ப்பதில் இரு நாடுகளும் கவனம் செலுத்தியுள்ளன.

★ அப்படியான கவனமாக முன்னெடுக்கப்பட்ட அரசியலுறவுகள் தமிழ் மக்களுக்கு எதிரான போர் நடவடிக்கைகளால் சஞ்சலத்துக்கு ஆளாகி முள்ளிவாய்க்காலில் 2008 - 2009 நடந்தவற்றால் இந்தியா நாட்டின் பிரிக்கும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று இந்தியாவில் சிலர் நிர்ப்பந்தித்து உறவை குழப்ப முயன்ற போதும் அந்த உறவுகள் அவற்றைத் தாண்டி நிலை கொண்டுள்ளன.

★ ஸ்ரீலங்காவின் இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு வேண்டும், வெளிநாடு தீர்வு பற்றிச் சொல்ல வேண்டியதில்லை, உள்நாட்டுக்குள்ளேயே தீர்வு தேடப்படவேண்டும் என்றெல்லாம் பேசப்படுகிறது. எப்படியோ இவ்வளவு புரையோடி, காலம் காலமாக இழுபறிப்படும் பிரச்சினைக்கு ஒரு தீர்வு வரவேண்டும்.

★ இந்தியா - இலங்கை ஒப்பந்தம் பிரிவினைக்கானது, சர்ச்சைகுரியதானது என பார்க்கப்பட்டாலும் அது ஒரு நேர்மையான அரசியல் தீர்வினைத் தந்திருக்கக்கூடிய அமைப்புகளை கொண்டிருந்தது. அவை இன்றும் எங்களுக்கு தரக்கூடிய பாடங்களையும் அனுபவங்களையும் தந்து கொண்டிருக்கின்றன. இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றை தருவதற்கான ஒரு செயற்திட்ட அடிப்படையாக அதனை இப்பொழுதும் பார்க்கலாம்.

★ நியாயமான, நிரந்திரமான அரசியல் தீர்வு பற்றி பேசும்போது சீனாவின் தலைவர் டெங்சியாபிங் குறிப்பிட்டவை கவனிக்கத்தக்கவை. 'அதாவது பூனை கறுப்பாக இருந்தாலென்ன வெள்ளையாக இருந்தாலென்ன எலியை பிடித்தால் சரிதானே" என்பதுதான் அது. தமிழ் மக்கள் இப்படி கறுப்பு, வெள்ளை பூனை என்ற நிற அடிப்படையைக் கொண்டே "சமஷ்டி" முறையில் தீர்வு என்கிறார்கள். இந்தியாவின் குடியரசு சட்டத்தை பார்த்தால் அங்கு மாநிலங்களுக்கிடையில் உறவுகள் சமஷ்டி அடிப்படையில் என்பது சேர்த்து கொள்ளப்படவில்லை. ஆனால் நடைமுறையில் எத்தனையோ மாநிலங்களின் மக்களும் தங்கள் அபிலாஷைகளை மத்திய அரசின் ஊடாக செயற்படுத்தி கொண்டுள்ளார்கள். ஆக பெயரல்ல, அதிகாரங்கள் அவற்றை நடைமுறைப்படுத்தும் மார்க்கங்கள் என்பவற்றிலேயே பெரும்பான்மைக் காட்சிகள் ஒத்துழைத்து முன்னேற வேண்டும். - என்ற கருத்து கூறப்பட்டது.

இந்த 12 வருடங்களில் சக்கரம் முற்றாகச் சுழன்று


'த ஹிந்து' ஆசிரியர் ராம்

அதிகாரப் பரவலென்ற பேச்சின்றி "ஒரு நாடு, ஒரு சட்டம், ஒரு மக்கள்" என்ற வெறியை அடைந்திருக்கிறது.

ஒத்துக் கொள்ளப்பட்ட அதிகாரப் பரவல்களும் இணைப்புக்களும் ஏற்றுக் கொள்ளபடாவிட்டால் அது நல்ல காலத்தின் தொடக்கமா என்பது தமிழ் மக்களின் அணுகுமுறையில் தங்கியுள்ளது. அப்படியான உதாசீனங்கள் ஏற்படும் நிலையில் சீனாவின் ஊடுருவலின் பின்னணியில் இந்தியாவே தனது ஆளுமையில் காரியமாற்ற சர்வதேசத்தாலோ, ஐ.நா. பாதுகாப்பு சபையாலோ தூண்டப்படும்.

(வளரும்)

# RADIANT DAWN

**A Sunday Supplement in English to Kalaikkathir**

**Page I** **Sunday the 17th of October 2021**



**We welcome students' articles in word for publication**

**-Editor-**


kalaikkathiredu@gmail.com


**A comprehension exercise for Grades 5 and 6.**

## BART SIMPSON



Hi kids!. My name is Bart Simpson and I am ten years old. I live in a beautiful city called Springfield, in U.S.A. My mother's name is Marge and she is a housewife. My father's name is Homer and he works in a power plant. Also , I have got two sisters, Liza and little Maggie.

Everyday I get up in the morning. I get dressed and have a delicious breakfast. Then I take the bus to school. Classes start at 8 O' clock and finishes at half past three so I have my lunch at the school canteen. My favourite school subject is Physical Education. We do some physical exercises and play sports. I hate Maths because I find it really boring.

When I arrive home , I have a quick nap. Then I do my homework and watch the cartoon show" Itchy and Scatchy." Later I have tea and walk the dog. It's name is Santa. After that I meet my friend. Milhouse is my friend . He has got glassy eyes and heavy eyebrows. We have fun together. We like playing video games, riding our bikes , surfing on the internet , reading comics and collecting wild flowers. I usually have dinner at half past eight. Then I brush my teeth and I go to bed at 9 O' clock because I am very sleepy at that time.

**SAY ' TRUE' OR ' FALSE'**

| | | |
|---|---|---|
| 01. Bart is eleven years old. | T | F |
| 02. He goes to school on foot. | T | F |
| 03. He doesn't like Maths. | T | F |
| 04. Physical Education is boring. | T | F |
| 05. His pet's name is Santa. | T | F |
| 06. Bart likes reading newspaper. | T | F |
| 07. Bart has got heavy eyebrows | T | F |
| 08. He has dinner at 8:30. | T | F |
| 09. Bart's mother is a housewife. | T | F |
| 10. Bart likes reading newspapers. | T | F |

**ANSWER THESE QUESTIONS**

1 How many sisters has Bart Simson?
2.Where does Bart live?
3.Does he get up late in the morning?
4.What does his mother do?
5.How does he go to school?
6. Where does ha have lunch?
7.Why does he hate Maths?
8.Who is Milhouse?
9. What does he do after school?
10Why does he go to bed at 9 ' O clock?



Milhouse

**A COMPREHENSION PASSAGE FOR GRADES 9 AND10**

## AMAZING SPIDERMAN

Orphanes as a baby,Peter was raised by his elderly uncle Ben and aunt May.Academically gifted Peter was a natural when it came to science; some say he was a nerd; others say he was a genius. Socially, however, he was not; he was painfully shy and always the butt of everyone's jokes at Midtown High School.

During a trip to the local Science Museum he was bitten on the hand by a radioactive spider, empowering Peter with arachnid's strength,agility and the ability to cling to almost any surface. Peter knew that with great power comes great responsibility; he had to use his new powers to help and protect the weak, vulnerable and the helpless citizens of New York City.




Peter decided that he had to disguise himself so that his enemies would not recognise him and hurt the ones he loved. The first enemy he had to face was the menacing green goblin, however, over the years Spiderman faced many enemies , such as the villainous Dr. Octopus and the terrifying venom.

**Answer these questions.**

01. Who raised Peter after his parents passed away ?
02. What was the name of the school Peter attended?
03. Where was Peter when he was bitten by a spider?
04.The word 'anachinid' is a scientific word for what?
05.Say what is meant by Accademically gifted.
06. What three words are used to describe Petre's character?
07. What powers did Peter gain after the spider bite?
08. Why did Peter decide to disguise himself?
09. What three words were used to describe Spiderman's enemies?
10.Write a sentence using at least two adjectives what you think of Spiderman?

## TIGERS



Who would win a fight a tiger or a lion? Well if size has anything to do with the matter the tiger would win.

Tigers are the largest of all cat species. They grow up to11 feet long and weigh as much as 670 pounds.This makes the tigers the third largest land " carnivore" . The only larger land " carnivore" are polar bears and brown bears. Tigers are not only large but also very fast. They can sprint as fast as 40 miles per hour for short distances and and leap as far as 30 feet horizontally. This makes an extremely dangerous pounce. Though large, fast and ferocious tigers are an endangered species. Despite all its strength tigers face a very high risk of extinction.

By the turn of the 20thcentury, it is estimated that the number of tigers has dwindled from 100,000 to just over 3000. Interestingly , the most serious threat the tigers face comes from a much more smaller species, one with an average weight of 140 pounds. That is man.Humans threat tigers in primarily two ways, hunting and destroying habitat.

Tigers are hunted for many reasons.People have long valued the famous striped skins. Though trading tiger skin is illegal in most part of the world, tiger pelts are worth around $10,000 on the black market. Though the fur would be incentive enough for poachers ," other parts of the tiger can also fetch a pretty price" . Some people in China and other Asian countries believe that various tiger parts have healing properties. Traditional Chinese medicine calls for bones, amongst other parts,in some prescriptions.

Tigers have also been hunted as game.People hunted tigers solely for the thrill and achievement of killing them. Though this practice is much less popular today, it has not ceased today. Man has done considerable damage to the world's tiger population through hunting but perhaps more damage has been caused through the destruction of their habitat. Over the past 100 years tigers have lost 93 % of their historic range. The tiger population is now isolated in small pockets of South and Southeastern Asia . This is because humans have drastically changed the environment.

**Give short answers**

1. How long does a tiger grow?
2. How much does a tiger weigh?
3. How fast can a tiger run?
4. How far can a tiger leap horizontally?
5. How many tigers were found in the 20th century?
6. What is the average weight of a man?
7. What two other carnivores are larger than tigers?
8. What is the present population of tigers?
9. In what two main ways do humans threaten tigers?
10 For what two things the humans hunt tigers ?

**He that loves reading has everything within his reach - William Godwin**

# The Killing of MP Sir David Amess a Terrorist Incident

Conservative MP Sir David Amess has died after being stabbed multiple times at his constituency surgery in Essex. Police said a 25-year-old man was arrested on suspicion of murder after the attack at a church in Leigh-on-Sea. They recovered a knife and are not looking for anyone else in connection with the incident. A counter-terrorism team will lead the investigation. Boris Johnson has spoken of his shock and sadness at the loss of "one of the kindest" people in politics.

Home Secretary Priti Patel has asked all police forces to review security arrangements for MPs "with immediate effect", a Home Office spokesman said. Sir David, 69, had been an MP since 1983 and was married with five children. He is the second serving MP to be killed in the past five years, following the murder of Labour MP Jo Cox in 2016. She was killed outside a library in Birstall, West Yorkshire, where she was due to hold a constituency surgery.

Sir David Amess was one of Parliament's characters: fun, friendly, unconventional and outspoken. His broad grin and boyish enthusiasm were fixtures in the House of Commons chamber for nearly 40 years. He never scaled the heights of government, choosing to dedicate his career to his beloved Essex and the causes he cared about most. The 69-year-old was one of those rare MPs who earned cross-party respect for the conviction he brought to his opinions and campaigns. They ranged from passionate support of Brexit to animal rights - and anything that brought Essex up in the world.

He was stabbed to death while in his constituency surgery in the seaside town of Leigh-on-Sea, an attack that has stunned his constituents and colleagues from across the political spectrum.

The SNP's Westminster leader Ian Blackford said he was "a thoroughly decent man". His loss will be felt keenly in his Southend West constituency. Trembling with emotion Father Jeff Woolnough, parish priest of St Peter's Catholic church in Eastwood Road North, Leigh-On-Sea, told the BBC Sir David was a "great, great man, a good Catholic and a friend to all".

He was one of those MPs who used Parliament to sponsor bills, to sit on committees, to form alliances, so that he could shape law from the backbenches. As an animal welfare specialist, he led campaigns to ban cages for game birds and end the transport of live animals for export - and was a patron of the Conservative Animal Welfare Foundation. Sir David was what they call an old school parliamentarian - the epitome of a constituency MP who died serving those he was so proud to represent.

The killing of Conservative MP Sir David Amess is being treated as a terrorist incident by police. Sir David was stabbed multiple times at his constituency surgery in Leigh-on-Sea in Essex on Friday. The Metropolitan Police said there was a potential link to Islamist extremism. A 25-year-old British man was arrested at the scene on suspicion of murder.

The Met said officers are carrying out searches at two addresses in the London area and are not seeking anyone else over the death. The force believes the man, who is in custody in Essex, acted alone but inquiries into the circumstances of the incident are continuing. Government sources



have told the BBC he is a British national who, from initial inquiries, appears to be of Somali heritage. Scotland Yard's decision that the killing of Sir David Amess was an act of terrorism confirms that, on the basis of what they know so far, the killer was motivated to use violence to further their cause.

Prime Minister Boris Johnson said he had an "outstanding record of passing laws to help the most vulnerable", adding "we've lost today a fine public servant and a much loved-friend and colleague". Boris Johnson said Sir David Amess was one of the "kindest, nicest, most gentle people in politics" Father Jeff Woolnough, parish priest at nearby St Peter's Catholic Church, led a mass on Friday evening in memory of Sir David, who he called "Mr Southend". He described him as a "great, great guy" and said faith communities had "lost their greatest supporter". Southend councillor John Lamb said Sir David was "a very good, hard working constituency MP who worked for everyone". And Labour leader Sir Keir Starmer said it was a "dark and shocking day", adding that the country had "been here before" with the death of Jo Cox.

# India and Lanka differ on full implementation of 13A

The media statement issued by the Indian High Commission at the conclusion he reiterated India's position on complete implementation of the provisions under the 13th Amendment to the Constitution, including devolution of powers and the holding of Provincial Council elections at the earliest".



The statement issued by the President's Media Division (PMD), however, pointed to a considerable gulf between New Delhi and Colombo regarding the "complete implementation" of the 13th Amendment. It noted that the President "pointed out the urgent need to understand the weaknesses as well as the strengths of the 13th Amendment and act accordingly". The Sri Lanka Podujana Peramuna (SLPP) led Government has always been steadfast in its insistence that 'complete implementation' of the 13th Amendment (13A), especially with regard to devolving land and police powers to the Provincial Councils (PCs), is not something it is prepared to do.

Tamil political parties had pressed for India to prevail on the Government to hold the PC elections and commit itself to the 'complete implementation' of 13A. Shringla held separate meetings with delegations of the northern-based Tamil National Alliance (TNA) led by the veteran MP for Trincomalee, R. Sampanthan and the more Colombo-based Tamil Progressive Alliance (TPA) led by Mano Ganesan.

Among them was also Ahila Ilankai Thamil Congress (AITC) leader Gajendrakumar Ponnambalam who was critical of the 13th Amendment and India's role during the final phases of the war. Mr Ponnambalam, however, stressed that "we will not give any space that would jeopardise the national security of India". This assurance came in the wake of the increasing presence of China in the North and East with road development works and other infrastructure development activities in recent times.

As other political leaders went on with the usual rhetoric of pressuring the Government for the full implementation of the 13A, going beyond i.e. 13+ to reach a lasting solution to the 'ethnic conflict' and the pending Provincial Council elections, Ponnambalam refrained from raising any issues related to 13A but highlighted another political development.

In the past, the AITC repeatedly maintained that it could not consider 13A as a solution to the ethnic conflict and had even rejected it outright. The party also refused to contest PC elections.

Delhi has found itself in a difficulty in devolving powers to the periphery, especially in the state of Kashmir where it revoked Article 370 of its own Constitution stripping the local politicians of the state autonomy. To promote devolution elsewhere while cramping it at home was to be accused of duplicity.

As Shringla was meeting the President, Public Services, Provincial Councils & Local Government Minister Janaka Bandara Tennakoon was telling Parliament that he did not personally believe that the prevailing environment was conducive towards holding PC elections. He said this in answer to a question raised by Samagi Jana Balawageya's (SJB) Anuradhapura District parliamentarian Rohana Bandara.

# Thiruketheeswaram Temple



Ketheeswaram temple Tirukkētīsvaram is an ancient Hindu temple in Mannar, Northern Province, Sri Lanka. Overlooking the ancient Tamil port towns of Manthai and Kudiramalai, the temple has lain in ruins, been restored, renovated and enlarged by various royals and devotees throughout its history. Tirukkētīsvaram is one of the Pancha Ishwarams dedicated to the Hindu deity Shiva and is venerated by Shaivas throughout the continent. Throughout its history, the temple has been administered and frequented by Sri Lankan Hindu Tamils. Its famous tank, the Palavi tank, is of ancient antiquity and was restored from the ruins. Tirukkētīsvaram is one of the 275 Paadal Petra Sthalams of Shiva glorified in the poems of the Tevaram.

Literary and inscriptional evidence of the post classical period (300BC-1500AD) attests to the upkeep of the temple during the ancient period by kings of the Pallava, Pandyan Dynasty and Chola dynasties who contributed to its development up to the late 16th century. In 1575, Tirukkētīsvaram was largely destroyed by Portuguese colonials, with Pujas terminating at the shrine in 1589. Following an appeal by Arumuka Navalar in 1872, the temple was rebuilt at its original site in 1903.

The exact date of the Ketheeswaram temple's birth is not universally agreed upon. According to historian Paul Peiris, Thirukketisvaram was one of the five recognized Eeswarams of Siva in Lanka long before the arrival of Vijaya in 600 B.C. The shrine is known to have existed for at least 2400 years, with inspirational and literary evidence of the postclassical era ( 600BC – 1500AD) attesting to the shrine's classical antiquity. The buried ancient Tamil trading port of Manthottam (Mantotai/ Manthai) in the Mannar District — where Ketheeswaram is located — has provided historians extant remains of the culture of the area during the ancient period.

This includes the vestiges of its ancient temple tank (the Palavi tank), and the ruins of a former Hindu city built of brick, described by J.W. Bennet in 1843. During the ancient period, Mathoddam was a centre of international trade, with Greeks, Romans, Phoenicians, Arabs, Ethiopians, Persians, Chinese, Japanese, Burmese and others vying with each other to monopolise the trade of North Ceylon with Tamil traders.

Mathoddam is currently viewed as the only port on the island that could be called a "buried city," with much of the ancient ruins under sand today. The existence of the Thiru-Ketheeswaram temple attests to the antiquity of the port. Mathoddam finds mention as "one of the greatest ports" on the seaboard between the island and Tamilakkam in the Tamil Sangam literature of the classical period (600 BCE – 300 CE). Hugh Nevill wrote in 1887 of the illustrious city of Mathoddam "A renowned shrine grew into repute there dedicated to one Supreme God symbolized by a single stone, and in later times restored by a Saivaite after lying long in ruins. The temple was dedicated as 'Tiru-Kethes-Waram.'"

One of the five ancient Iswarams of Lord Shiva on the island, Ketheeswaram joins Koneswaram (Trincomalee), Naguleswaram (Keerimalai), Tenavaram (Tevan Thurai) and Munneswaram (Puttalam) as a renowned and highly frequented pilgrimage site from before 600 BCE. In the 6th–9th century CE, the temple was glorified in the Tevaram canon, becoming one of 275 Paadal Petra Sthalams, the holiest Shiva temples on the continent. The only other Paadal Petra Sthalam from Eela Nādu (the country of the temple as named in the Tamil literature) is Koneswaram.

# THE HERMIT KINGDOM

Some call it " The Hermit Kingdom" .It is a 46,000 square mile nation off he coast of China.It is one of the poorest nation in the world and it is armed with nuclear weapons. It is North Korea.

Immediately next to the South lies a nation with one of the world's richest economies. About one third of all phones and televisions are made here. The people of this nation are among the world's most educated . Unemployment is low , job security is high, and workers in this nation enjoy the highest salaries in Asia. It is South Korea. The people of this nation share origins with their Southern neighbour, but they have since grown apart.

Korea known to Westerners as North Korea - was founded in 1945 after World War II. Their neighbour at the end of the Korean Peninsula , South Korea or the Republic of Korea was established at the same time. These two nations have an unusual history. For one thing, they have technologically been at war since 1950.

Though North Korea and South Korea were born at the same time they had different parents. The Unites States supported South Korea in its infancy. China and Soviet Russia supported North Korea. The Soviet Union and the United States may have ended World War II as allies,but they had different ways of organising their societies.



The United States is a capitalist country. That means that some people are rich and some people are poor. Resources are distributed unevenly. Businesses are owned by private entities. The Soviet Union claimed to have a communist system. That means everybody supposedly gets same. Resources are distributed more evenly. Businesses are owned in 'common' by the government. These two Super Power nations raised North and South Korea in their own images.

North Korea and South Korea share a border. Since they are locked in a state of prepetual war, it's not a regular border with a single check point. The border they share is known as a " Demilitarised Zone" It is supposed to be free from military installations. Yet, the Korean " Demilitarised Zone is the most Heavily Militarised border in the world . Both nations have their biggest guns lined up on the divide and pointed at each other's side. It is literally the opposite of what the pharase " Demilitarised Zone" implies.

But when the Soviet Union fell apart in the 1980s and became separate capitalist ,countries of which Russia is the largest. Without the Soviet contribution North Korea entered a long period of famine that lasted through the 1990s . Food was hard to come by and some estimate that millions of people starved to death. Still,the country persisted when much of the world thought it would fall apart. Not only did they survive , they managed to build a nuclear arsenal during this time.

Some day Korea would be unified again . It seems unlikely now, but stranger things have happened.Yet if they did unify, how could these two different societies acclimate to one another ? They have grown in different directions. One country is among the richest, the other among poorest.The average North Korean male is estimated to be five inches shorter than a South Korean. Some suspect because of malnutrition. With such big differences,will they be ever able to see eye to eye?








Chennai Super Kings win their fourth Title

Chennai Super Kings beat Kolkata Knight Riders by 27 runs in the IPL 2021 final to win their fourth title. KKR were off to a great start in their high pressure chase as openers Venkatesh Iyer (50) and Shubman Gill (51) put on 91 for the first wicket but Shardul Thakur picked up two wickets in an over to bring CSK back in the match. From then on it was one way traffic as all KKR batters perished one after another in their pursuit of the big target of 193 runs.

# Country Floating Like a Ship Without a Captain – Ganesan

As a result of illogical and imprudent policies of the Government, which came to power riding on the trust of the new floating votes, Sri Lanka too is now floating like a ship without a captain, leader of the Tamil Progressive Alliance (TPA) MP Mano Ganesan said. Addressing a Media briefing in Colombo Ganesan said, "Today the country is without an active Government, without a leader and guide. The country is struggling with no direction and both people and rulers do not know what to do. The people of this country are burdened by the rising cost of goods but the Government's only excuse is that the country's economy has been affected due to the pandemic.

It is true that coronavirus has spread globally including South Asian countries such as India and Bangladesh. But, the economies of these countries have not crashed in this manner. Neither has the price of goods in these countries increased by such huge margins as in Sri Lanka. The people's income has not been affected as badly as in our country either. How did countries like India and Bangladesh protect and develop their economies to a level that they are able to grant us loans?" He alleged the Government is responsible for thousands



of COVID deaths for failing to take accurate actions in time.

Therefore, the Government cannot play the coronavirus card as an excuse for the economic crisis in the country, he said and opined that the current administration should hand over the country to those who know how to run it and resign. Speaking further, Ganesan noted that even the fertiliser imported to the country has been found unsuitable by the National Plant Quarantine Services (NPQS). "However, the Chinese Embassy has rejected this report. They claim their fertiliser is of good standards and have released their own report on tests carried out by our authorities. What is this? The directors of the NPQS in this country should respond to these claims," he said.

# Away with Price Control

These were not the only headaches for the Government. Attempts to strong-arm importers and big-name traders through a state of emergency failed to prevent shortages of essential items, and the Government's weakness in the face of business was exposed. That was not a good thing for any Government. First, it caved into the so-called 'rice mafia' by reversing the Gazette notification setting out a maximum retail price for rice. This week, President Rajapaksa had to chair a special Cabinet meeting on Thursday to decide whether to allow price increases in domestic gas, milk powder, wheat flour and cement, all of which have been in short supply.

In the end, the Cabinet decided to remove price controls imposed on the items, essentially acknowledging that the price controls mechanisms actually contributed to shortages of consumer items. State Minister of Co-operative Services, Marketing Development and Consumer Protection Lasantha Alagiyawanna told the media that the President had instructed the authorities to ensure that prices of these items were not raised to unjustifiable amounts, whatever that was meant to mean. With the state food cooperative Sathosa reeking in corruption, what was meant to be the safety net for the poor consumer has been taken away as the CID conducts investigations into a whistleblowers allegation that rackets run into the billions.

One item that has been sorely lacking for weeks now is milk powder. Container-loads of milk powder had remained stuck at the Colombo Port awaiting clearance for want of foreign currency to issue to importers to pay foreign banks and settle their Letters of Credit. Importers had also refrained from ordering fresh stocks without a substantial price increase on the grounds that they could not sustain the losses that arose from selling milk powder at current prices owing to the sharp depreciation of the rupee. Nightly television news has carried daily segments of people queuing up for hours outside the few milk powder distribution centres where limited stocks are available. Things have even got ugly at times, with fights breaking out among those jostling to buy milk powder. Many who are forced to endure such hardships have been scathing in their criticism of the Government over the shortages.

These segments would no doubt have been seen by the highest authorities of the land and probably stung them into taking Thursday's decision to remove price controls.

# Oman to Get Two Blocks in Mannar Basin

The Sri Lankan Government is to secure a US$ 3.6 billion loan, from the Government of Oman, to finance Sri Lanka's oil procurements.

Ceylon Today learns that the loan facility of US$ 3.6 billion for petroleum procurement by the Ceylon Petroleum Corporation (CPC) and the oil exploration move has been discussed between Shumookh International Executive Director Abdullah Al Bulushi, and Minister of Energy Udaya Gammanpila and senior officials. This decision has been reached due to the direct involvement of Minister Gammanpila, Ministry sources said.

The CPC said the loan interest would be four per cent for the USD 3.6 billion and the petroleum products and crude oil will be priced at the monthly average of Singapore PLATTS.

The Omani business delegation visited Sri Lanka in August and met the President, the Prime Minister, Finance Minister and



the Central Bank Governor, State Minister of Solar, Wind and Hydro Power Generation Projects Development, among many others to discuss potential investments in Sri Lanka.

According to the conditions placed by the CPC in the Cabinet proposal, the CPC had accepted the request of two oil wells for Oman on conditions that the loan borrower will be the CPC and the product specifications deliverable dates and places will be determined by the CPC.

Also, the CPC said that they would 'offer Block CB 034 to CB42 (formerly known as Block C2) in Cauvery Basin and Block MB001 to MB011 (Formerly known as Block M3), on the oil exploration map, for joint studies for a period of five years, as the collateral addition to the sovereign guarantee.

The CPC also placed a condition that if the two oil blocks are found to be of no use, several blocks of a similar extent will be provided for the joint studies within the said period of five years.

The Omani investor has said a separate fee of 2.25% would be deducted for the loan and the CPC has said such a deduction should be made from the loan (USD 3.6 billion).

# எழில் கதிர்





## முகம் ஜொலிக்க வீட்டிலேயே எளிமையான இயற்கை வழி

பெண்கள் முகத்தை அழகுபடுத்தி கொள்வதற்கு பியூட்டி பார்லர் போவதை வழக்கமாக வைத்துக் கொள்வார்கள். பியூட்டி பார்லர் சென்று முகத்தை அழகுபடுத்தி கொள்வதனை பெண்கள் பெரிதும் விரும்புவார்கள். பார்லரில் இரசாயனம் கலந்த பொருள்களை பயன்படுத்தி சருமத்தில் பூசுவதால் சரும அழகானது நாளடைவில் சுருக்கம், முகத்தில் பருக்கள், கரும்புள்ளிகள் போன்ற ஏராளமான பிரச்சினைகளை சந்திப்பதற்கு 100% வாய்ப்புள்ளது.

எனவே வீட்டிலுள்ள இயற்கை பொருளே நமது முகத்திற்கு பேரழகை கொடுக்கும்.

முகத்தை ஜொலிக்க வைக்க தேவையான பொருள்:-

**முள்ளங்கி - 1/2**
**தயிர் - 1 தேக்கரண்டி**
**சிவப்பு சந்தன பவுடர் - 1 தேக்கரண்டி**
**உருளைக்கிழங்கு - 1**

**செய்முறை விளக்கம்**:

* முதலில் தட்டை வடிவில் கொண்ட பலகையினை எடுத்துக்கொள்ளவும்.

* அந்தப்பலகையில் உருளைக்கிழங்கை இரண்டு பாதியாக வெட்டி ஒருதுண்டை எடுத்துக்கொள்ளவும். அந்த ஒரு துண்டை சிறிய சிறிய துண்டுகளாக நறுக்கி வைத்துக் கொள்ளவும்.

* அடுத்ததாக அரை முள்ளங்கியினை தோல் சீவி எடுத்து சிறிய சிறிய துண்டாக நறுக்கி எடுத்துக்கொள்ளவும்.

* அதன் பிறகு மிக்ஸியில் நறுக்கி வைத்துள்ள உருளை மற்றும் முள்ளங்கியினை சேர்த்து நன்றாக அரைத்துக்கொள்ளவும்.

* அடுத்து தனியாக ஒரு கிண்ணத்தில் அரைத்து வைத்துள்ளதை வைத்துக்கொள்ளவும். இவற்றில் 1 தேக்கரண்டி அளவிற்கு தயிரை சேர்த்துக்கொள்ளவும்.

* தயிர் சேர்த்த பிறகு சிவப்பு சந்தன பவுடர் 1 தேக்கரண்டி அளவிற்கு சேர்க்கவும். இப்போது மூன்றையும் நன்றாக கலக்கவும்.

* முக சருமத்தை பாதுகாக்கும் கலவை இப்போது தயார். இதனை முகத்தில் அப்படியே பூசவும்.

* முகத்தில் தடவி 5 நிமிடம் வரை வைக்க வேண்டும். 5 நிமிடம் ஆன பிறகு முகத்தில் உள்ளதை கழுவிக் கொள்ளலாம். இந்த முறையை கண்டிப்பாக முயற்சி பண்ணிப் பாருங்கள் . கருமையான சருமம் நல்ல மாற்றத்தை கொடுக்கும்.



## இளநரையைத் தடுக்கும் நெல்லிக்காய்

நெல்லிக்காயிற்கு இயற்கையாகவே இளநரையை போக்கும் தன்மை உள்ளது. அதாவது நெல்லிக்காயில் உள்ள விற்றமின் சி மற்றும் ஆன்டி ஆக்சிடண்ட் தலைமுடிக்கு நல்ல போஷாக்கினை அளித்து, தலைமுடியை நன்கு நீளமாக வளரச் செய்கின்றது. குறிப்பாக இளம் வயதிலேயே சிலருக்கு நரைமுடி தோன்றும், அந்த நரை முடி கருமையாக நெல்லிக்காய் ஒரு சிறந்த பொருளாக விளங்குகிறது.

நெல்லிக்காயில் ஏராளமான ஊட்டச்சத்துக்கள் நிறைந்துள்ளன. நெல்லிக்காயை அதிகளவு சாப்பிடுவதினால் உடலில் ஆரோக்கியம் மேம்படும்.

நெல்லிக்காய் எண்ணெய் தயார் செய்வது எப்படி எனில்
தேங்காய் எண்ணெய் - 250 கிராம்
காய்ந்த நெல்லிக்காய் - 25 கிராம்

அடுப்பில் ஒரு இரும்புச் சட்டியினை வைத்து அதில் சிறிதளவு தேங்காய் எண்ணெயினை ஊற்றவும்.

பின் 25 கிராம் காய்ந்த நெல்லிக்காயினை சேர்த்து நன்றாக கருகி வரும் அளவிற்கு வறுத்தெடுக்க வேண்டும்.

நெல்லிக்காயை வறுக்கும் போது அவ்வப்போது சிறிதளவு தேங்காய் எண்ணெயை ஊற்றி வதக்குங்கள்.

நெல்லிக்காய் நன்கு வறுபட்டதும் அடுப்பில் இருந்து இறக்கி நெல்லிக்காயை நன்கு ஆறவிடவேண்டும்.

பின் நெல்லிக்காய் நன்கு ஆறியதும் 250 கிராம் தேங்காய் எண்ணெயை அதில் ஊற்றி 4 அல்லது 5 மணி நேரம் ஊறவைக்க வேண்டும்.

இவ்வாறு ஊறவைப்பதினால் நெல்லிக்காயில் உள்ள சத்துக்கள் அனைத்தும் தேங்காய் எண்ணெயில் சேர்க்கப்படுகிறது.

நெல்லிக்காய் 4 மணி நேரம் நன்கு ஊறியதும் நெல்லிக்காய் எண்ணெயை வடிகட்டி காற்றுப்புகாத ஒரு சுத்தமான போத்தலில் ஊற்றி வாரத்தில் 3 முறை அல்லது தினமும் தலை முடிக்கு பயன்படுத்துங்கள்.

நெல்லிக்காய் எண்ணெய் பயன்கள்:

இந்த நெல்லிக்காய் எண்ணெய் தலை முடியை அடர்த்தியாக வளர செய்யும்.

நரைமுடி மற்றும் செம்பட்டை முடியினை கருமையாக மாற்றும் தன்மை கொண்டது.



## முகத்தில் உள்ள கரும்புள்ளி மறைய

**உருளைக்கிழங்கு - 1 (தோல் சீவியது)**
**கற்றாழை ஜெல் - 1 தேக்கரண்டி**
**உருளைக்கிழங்கு சாறு - 1 தேக்கரண்டி**

* ஒரு உருளைக்கிழங்கை எடுத்து மேல் உள்ள தோள்களை சீவி எடுத்து கொள்ள வேண்டும்.
* பின் தோல் சீவியதை சிறிய சிறிய துண்டுகளாக நறுக்கி எடுத்துக்கொள்ளவும்.
* துண்டுகளாக நறுக்கிய உருளைக்கிழங்கை உரலில் போட்டு நன்றாக இடித்து கொள்ளவும்.
* அடுத்து தனியாக ஒரு கிண்ணத்தில் கற்றாழை சாறை 1தேக்கரண்டி சேர்த்துக்கொள்ளவும்.
* கற்றாழை சாறுடன் மசித்த உருளைக்கிழங்கு கலவையை சேர்க்கவும். இப்போது நன்றாக கலந்து கொள்ளவும்.
* இதை தினமும் முகத்திற்கு தடவி வரவேண்டும். இந்த உருளைக்கிழங்கு சாறானது முகத்தில் இருக்கும் கரும்புள்ளிகள், சருமத்திலுள்ள கறைகளை நீக்கும் தன்மை உடையது.
* உருளைக்கிழங்கு சாற்றில் அதிகமாக அமிலத்தன்மை கொண்டுள்ளது. இதனால் நமது உடல் தோல் வெண்மையாக இருக்கும். கற்றாழை சாறு பொதுவாகவே முக சருமத்தை பாதுகாக்கக் கூடிய ஒன்றாகும். கற்றாழை சாறு உங்கள் தோல் மற்றும் சருமத்தை எப்போதும் மென்மையாகவும், மிருதுவான தன்மையாகவும் வைத்திருக்கும்.
* முகத்தில் சிலருக்கு எப்போதும் எண்ணெய் பசை இருந்து கொண்டே இருக்கும். அந்த எண்ணெய்பசையை நீக்கும் தன்மைக்கு உருளைக் கிழங்கு நல்லது .
* கிருமிகள் மற்றும் பாற்றீரியாக்கள் போன்ற நோய்களிலிருந்தும் உங்கள் சருமத்தை பாதுகாத்து வைத்திருக்கும்.
* இந்த சாறானது உடலில் இருக்கும் இறந்த செல்களை நீக்கி தோல் மற்றும் சருமத்தை பிரகாசமாக வைத்திருக்கும்.
* சருமத்தில் ஏற்படும் வறட்சித் தன்மை, முக சுருக்கம் இது போன்ற பிரச்சினைகளை நீக்கி விடும்.
* அடுத்து உங்கள் உடலில் கொலாஜென் வளர்ச்சியை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், தோல் இளமையாகவும் இருக்கும்.
* முகத்தில் கரும்புள்ளி உள்ளவர்கள் இனி கவலைப் படத் தேவையில்லை. இந்த டிப்ஸை பயன்படுத்தி முகத்தில் உள்ள கரும்புள்ளியை நீக்கி ஆரோக்கியமாக இருங்கள்.





# விருந்துக்கதிர்




## உடலுக்கு உகந்த வாய்க்கு கசந்த பாகற்காய்



# இராசவள்ளி கிழங்கின் மருத்துவம்

இராசவள்ளி கிழங்குகள் பொதுவாக மினசோட்டாவில், இந்தியா, சீனா, வியட்நாம் மரக்கறிக் கடைகளில் பிந்திய பனிமாதங்களாகிய மாசி, பங்குனியில் கிடைக்கும். இது ஊதாக் கிழங்கு அல்லது பெர்பிள் யாம் (Purple Yam) என்றழைக்கப்படும் கிழங்கு, நமது தமிழ்ப் பிரதேசங்களில் மார்கழி, தைதொட்டு நிலத்தில் இருந்து கிண்டி எடுக்கப்படும் சுவையான ஊதாநிறக் கிழங்கு. இது வெவ்வேறு வள்ளிக்கிழங்கு வகைகளிலேயே இராச வம்சமாம்.

இராசவள்ளியானது நிலத்திலும் கம்புத்தடிப் பந்தல்களிலும் படரும் கொடித்தாவரத்தின் மண்ணின் அடியில் காணப்படும் கிழங்கு ஆகும். இதன் இலைகள் தாம்பூல வெற்றிலை போன்று அகன்றவை. இலையின் தண்டு செவ்வூதா நிறத்தில் இருக்கும். இத்தாவரத்தின் தாவரவியப் பெயர் இலத்தீன் மொழியில் Dioscorea alata. இந்தக் கொடித்தாவரம் தனது ஊட்டச் சத்துக்களையும் (nutrients), மாப்பொருள் (carbohydrates),மற்றும் தண்ணீரையும் வறண்டகாலங்களைத் தாண்ட தனது கிழங்கில் சேகரிக்கும்.

### இராசவள்ளி கிழங்குகளில் காணப்படும் ஊட்டச்சத்துக்கள்

மாபொருள், புரதம், தயமின், உயிர்ச்சத்து C, இன்னும் பிற சத்துக்கள்.

## இராசவள்ளிக் களி செய்முறை



**தேவையானவை:**

**500 கிராம் வெட்டிக் கழுவி நறுக்கிய இராசவள்ளிக் கிழங்கு**
**தேவையான அளவு தண்ணீர்**
**1/2 கோப்பை தடித்த தேங்காய்ப்பால்**
**1/2 கோப்பை சர்க்கரை அல்லது கரும்புச் சீனி**
**1/4 தேக்கரண்டி உப்பு**
**1/4 வனிலா இரசம் (விரும்பினால்)**

**தயாரிப்பு முறை -**

இராசவள்ளிக் கிழங்குத்துண்டுகளை நன்கு கழுவி எடுக்கவும். ஒரு ஆழமான பாத்திரத்தில் கிழங்குத்துண்டுகள் மூழ்கும் அளவு தண்ணீர் விட்டு கிழங்கு மென்மையாகும் வரை அவிக்கவும். பின்னர் கிழங்கை ஒரு பாத்திரத்தில் வைத்து களியாகும் வரை பிசையவும். இதை ஓரளவு சூடாகச் செய்வதே நல்லது. தொடர்ந்து தேங்காய்ப் பால், சர்க்கரை, உப்புச் சேர்த்து கலந்து அதே சமயம் அடுப்பு எரிவதையும் குறைக்கவும். அதன் பின் விரும்பினால் வனிலா இரசம் தூவிக் கலந்து சிறிய ஏதனங்களில் பரிமாறலாம். களியாக இல்லாமல் கஞ்சியாக வேண்டின் இன்னும் 1/2 கோப்பை தடித்த தேங்காய்ப்பால் 1/2 கோப்பைத் தண்ணீர் சேர்த்துக் கொள்ளலாம்.

சுவையான ஆரோக்கியமான அதிக ஊட்டச்சத்துக்கள் நிறைந்த இராசவள்ளிக்கிழங்கு கழி மிகுந்த ஆரோக்கியமான உணவாகும்.



பாகற்காய் பெரும்பாலும் உடலுக்கு நல்லது என்று எல்லோருக்கும் தெரியும். ஆனால் அதன் கசப்புச் சுவைக்காக பலர் அதனை விரும்புவதில்லை.

அவ்வாறு இல்லாமல், அறுசுவைகளில் நமது உடலுக்கு நல்லதைத் தரும் இந்த கசப்புச் சுவையிலான பாகற்காயை வாரத்தில் ஒரு முறையாவது உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது.

பொதுவாக பாகற்காய் உடலுக்கு உஷ்ணத்தைக் கொடுக்கும். பாகற்காயில் இரண்டு வகைகள் உண்டு. சிறியதாக இருக்கும் பாகற்காயை மிதி பாகற்காய் என்றும், நன்கு பெரிதாக நீளமாக இருப்பதை கொம்பு பாகற்காய் என்றும் அழைக்கிறார்கள்.

பாகற்காயை நாம் எப்படி வேண்டுமானாலும் சமைத்து சாப்பிடலாம். புளியுடன் சேர்த்து பாகற்காயை சமைப்பது சிறந்தது என்று சொல்லப்படுகிறது.

நீரிழிவு வியாதி உள்ளவர்கள் பாகற்காய் சாப்பிட்டால் மிகவும் நல்லது. அவர்கள் மட்டுமல்லாமல் காய்சல், இருமல், மூலம், வயிற்றில் பூச்சித் தொல்லை இருப்பவர்களும் பாகற்காயை உண்ணலாம்.

இந்தப் பிரச்சினைகள் இருப்பவர்கள் மட்டும்தான் பாகற்காய் சாப்பிட வேண்டும் என்ற அவசியமில்லை. இதுபோன்ற பிரச்சினைகள் வர வேண்டாம் என்றால் எல்லோருமே சாப்பிடலாம்.

பாகற்காய் நமது நாவிக்குத்தான் கசப்பே தவிர உடலுக்கு இனிப்பானது.

பாகற்காயை விட பாகற்காயின் இலையில் அதிக மருத்துவக் குணங்கள் உள்ளன. அதன் சாறு பல நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுகிறது.

பாகற்காயின் இலைகளை அரைத்து உடல் முழுவதும் பத்துப்போட்டால் சிரங்கு ஒழிந்துவிடும்.

இதேபோல பாகற்சாறும் உடலுக்கு மிகவும் ஏற்றது. ஒவ்வொரு நோய்க்கும் ஒவ்வொரு விதத்தில் பாகற்காய் இலையின் சாறைக் குடிக்க நோய் கட்டுப்படும்.

சிறுநீரகப் பை, கல்லீரலை சுத்தம் செய்து ஆரோக்கியமாக வைத்துக்கொள்ளும். குடல் ஆரோக்கியத்திற்கும் பாகற்காய் நல்லது.

பாகற்காய் இரத்தத்தில் சர்க்கரை அளவை சமன் செய்து குளுக்கோஸ் அளவை சீராக வைத்துக்கொள்ள உதவும்.

# பாகற்காய் குழம்பு

### தேவையான பொருள்கள்

**நல்லெண்ணெய் - 4 தேக்கரண்டி**
**பாகற்காய் - 300 கிராம்**
**கடுகு - 1/2 தேக்கரண்டி**
**வெந்தயம் - 1/2 தேக்கரண்டி**
**உளுத்தம் பருப்பு - 1/2 தேக்கரண்டி**
**சீரகம் - 1/2 தேக்கரண்டி**
**மிளகு - 1/4 தேக்கரண்டி**
**பூண்டு - 4**
**வெங்காயம் - 1**
**கறிவேப்பிலை - 1 கொத்து**
**தக்காளி - 2**
**மல்லி தூள் - 1 தேக்கரண்டி**
**மிளகாய் தூள் - 1 தேக்கரண்டி**
**மஞ்சள் தூள் - 1/4 தேக்கரண்டி**
**குழம்பு மிளகாய் தூள் - 2 தேக்கரண்டி**
**புளி - எலுமிச்சை அளவு**
**உப்பு - தேவையான அளவு**

### செய்முறை :-

தாச்சியில் எண்ணெய் விட்டு நறுக்கிய பாகற்காய்களை போட்டு சிவக்க வதக்கி எடுத்துக்கொள்ளுங்கள்.

பின் அதே எண்ணெயில் கடுகு, வெந்தயம், சீரகம், மிளகு, உளுத்தம் பருப்பு சேர்த்து தாளித்துக்கொள்ளுங்கள்.

பின் கறிவேப்பிலை, வெங்காயம் சேர்த்து வதக்குங்கள். வதங்கியதும் தக்காளி சேர்த்து வதக்குங்கள்.

தக்காளியில் எண்ணெய் பிரிந்து வரும் வரை வதக்கவும். பின் அனைத்து தூள்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

அடுத்ததாக புளிக்கரைசல் தண்ணீர் சேர்த்துக் கொள்ளுங்கள். உப்பு சேர்த்து சுவை பார்த்துக்கொள்ளுங்கள்.

சுவையான பாகற்காய் குழம்பு தயார் .






# வாழ்வில் நாம் ஆரோக்கியமாக இருக்க கடைப்பிடிக்க வேண்டியவை?



1. 4 மணி நேரத்திற்கு ஒருமுறை கட்டாயம் சிறுநீர் கழியுங்கள். கோடை காலத்திலும் கட்டாயம் நான்கு மணி நேரத்திற்கு ஒருமுறை கழித்தாக வேண்டும்.

2. காலையிலும், இரவு உணவுக்கு முன்பும் கட்டாயம். மலம் கழிக்க வேண்டும். கண்ட நேரத்தில் கழிப்பது மலச்சிக்கலுக்கு வழிவகுக்கும்.

(காலை, மாலை இருவேளை குளிக்கவும். மழைக் காலங்களில் காலையில் குளித்தால் போதும்.)

3. உள்ளாடைகள் கிழியாவிட்டாலும் 6 மாதத்திற்கு ஒருமுறை மாற்றுங்கள். ஒருநாள் பயன்படுத்திய பிறகு கட்டாயம் துவைத்துக் காயப்போடுங்கள்.

4. சிறுவர்கள் 1 ஸ்பூன், பெரியவர்கள் 2 ஸ்பூன் ஊறவைத்த வெந்தயத்தை, வெறும் வயிற்றில் மென்று விழுங்க வேண்டும், சர்க்கரையும், இரத்தக் கொதிப்பு வராமல் தடுக்கப்படும். வந்தால் கட்டுக்குள் இருக்கும்.

5. காலை உணவுக்கு அரை மணி நேரத்திற்கு முன் தோல் நீக்கிய இஞ்சித் துண்டைச் சாப்பிடுங்கள். கொழுப்பைக் குறைக்கும். தொப்பையைக் கரைக்கும்.

உணவை நன்றாக மென்று, பொறுமையாக உண்ணுங்கள்.

6. சுட்ட எண்ணெயை மீண்டும் பயன்படுத்திச் செய்யப்பட்ட பண்டங்களைச் சாப்பிடக் கூடாது. அதனால் கெட்ட கொழுப்பு அதிகரிக்கும் புற்றுநோயை உருவாக்கும்.

7. மைதா பரோட்டா வேண்டவே வேண்டாம், வாழ்நாளைக் குறைக்கும். குளிர்பானம், பாக்கெட் தீனிகள் வேண்டாம்.

8. பிராய்லர் கோழிக்கறி வேண்டாம். மீன் அல்லது ஆட்டுக்கறி, நாட்டுக் கோழி மட்டும் சாப்பிடுங்கள். மது, புகை கூடவே கூடாது.

9. மதியம் சாப்பாட்டுக்கு ஒரு மணி நேரம் முன்பு சுக்குக் காபி சாப்பிடுவது மிகவும் நல்லது. உண்ட உணவு முழுமையாகச் செரிக்கும் முன்பு அடுத்த திட உணவு கூடாது.

10. பாதாம், முந்திரி, உலர்பழம், பழங்கள், கீரைகள், டார்க் சாக்லட், கிரின் டீ, கடலை மிட்டாய், எள் உருண்டை, பனைவெல்லம், சோற்றுக்கற்றாழை (ஏழு முறை சுத்தம் செய்து தேன் கலந்து) நாள்தோறும் சாப்பிடவும்.

11. பயோட்டின் (எச் வைட்டமின்) என்ற வைட்டமின் குறைவால், தலைமுடி உதிர்தல், நகங்கள் உடைதல், தோல் நோய், எடை குறைவு, தசைவலி, கொழுப்பு அடைப்பு, மன அழுத்தம் ஏற்படும். இவற்றைத் தவிர்க்க, வேர்க்கடலை, முந்திரி, மீன், முட்டை, வாழைப்பழம், பப்பாளி, தக்காளி, கோவா, காளான், மோர் சாப்பிட வேண்டும்.

உங்கள் மனைவியின் ஆரோக்கியத்தின் மீது அதிக அக்கறை கொண்டவரா நீங்கள்???

தயவு செய்து மண் சட்டியும்,இரும்புக்கடாயும்,மரச் செக்கு எண்ணெய்யும் வாங்கிக்கொடுக்கவும்!

தினமும் 5பேரிச்சம்பழம் குறைந்த பட்சம் சாப்பிடக் கட்டாயப்படுத்துங்கள்! கறுப்பு அரிசி,கறுப்பு எள்,கறுப் பட்டி, கறுப்பு உளுந்து,மண் பானை தண்ணீர் சாப்பிட வலியுறுத்துங்கள்!

உங்கள் கணவர் மீது அதிக அக்கறை கொண்ட மனைவியா நீங்கள்??? தயவு செய்து பிரிட்ஜில் வைத்த குழம்பு வகை,மாவு வகைகளை கொடுக்காதீர்.

சீரகத்தண்ணீர்,சோம்புத்தண்ணீர் குடிக்கக் கொடுக்கவும்! நம் முன்னோர்கள் பயன்படுத்திய உணவுப்பழக்கங்களை முடிந்த அளவிற்கு பயன்படுத்துவோம். இரவு 10,00 மணி முதல் காலை 5,00 மணி வரை கட்டாயம் உறங்க வேண்டும்.

இழந்த ஆரோக்கியத்தை முழுமையாக மீட்டெடுக்க முடியாது என்றாலும் 50% ஆரோக்கியத்தை மீட்டெடுக்க நாம் நம் முன்னோர்களின் பயன்பாட்டில் இருந்த உணவுப் பழக்கத்தை நாம் நம் நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்துவன் மூலம் சாத்தியமாகும்.

# மன அழுத்தம் என்பது ஒரு பெரிய பிரச்சினை



மன அழுத்தம் என்பது நம்மை எந்நேரத்திலும் தாக்கலாம். நம்மை சுற்றி நிலவும் சுழல்கள் மற்றும் சமூக அமைப்புகள் அடிக்கடி நமக்கு தரும் பரிசு மன அழுத்தம். மன அழுத்தம் என்பது ஒரு பெரிய பிரச்சினை, மன உளைச்சல் என்பது மனது அளவில் மட்டும் அல்லாமல் உடல் அளவிலும் பல பாதிப்பினை ஏற்படுத்துகிறது.

இத்தகு மன உளச்சல்களை நமது வழக்கமான செயல்களில் மேற்கொள்ளும் சில மாற்றங்கள் மூலம் கையாளலாம். அதற்கான 5 எளிய வழிமுறைகள்

**நடைப்பயிற்சி**:- அலுவலகங்களில்,பணியிடங்களில் ஏற்படும் மன உளைச்சல்களை குறைக்க ஒரு எளிய வழி நடைப்பயிற்சி தான். ஆன்ம சுதந்திரத்தை பாழாக்கும் மனஅழுத்தத்தினை ஒரு தனிமையான நடைப்பயிற்சி போக்கிவிடும். அதேவேளையில் நெருங்கிய நண்பர் துணையுடன் செல்லும் நடைப்பயிற்சியும் புத்துணர்ச்சியை அளிக்கும் என்பதனை மறுத்துவிட முடியாது.

அழுத்தம் உண்டாக்கும் தின்பண்டங்களை கைவிடுங்கள் : நாம் உண்ணும் உணவு கூட நமக்கு மன அழுத்தத்தினை உண்டாக்கும் ,60 கலோரிக்கு குறைவாக இருக்கும் உணவுப் பொருள்களை உண்டால் அது மன அழுத்தம் உண்டாகலாம். அதாவது நீங்கள் உண்ணும் நொறுக்கு தீனிகள் இனிமையாக இருந்தால் அது அழுத்தத்தினை உண்டாக்கும், அதேப்போல் உப்புத்தன்மை அதிகமாக இருக்கும் பொருள்களை உண்டால் அது அழுத்தத்தினை குறைக்கும் என தெரிவிக்கிறது ஒரு ஆய்வு.

**உடற்பயிற்சி** : மனநிலை சோர்வாக இருந்தால், மனம் மட்டும் அல்ல உடலும் சோர்ந்துவிடும் அதற்காக படுக்கையிலேயே ஓய்ந்து விடாதீர்கள். வெளியே வந்து தூய்மையான காற்றில் ஆசுவாசப்படுங்கள். குறிப்பாக புத்துணர்சி தரும் உடற்பயிற்சியினை தொடர்ந்து செய்து வந்தால் புத்துணர்வின் அளவு 360 டிகிரியினையும் தாண்டிச் செல்லும் உடற்பயிற்சி என்பது உங்கள் உடலுக்கான புத்துயிர் ஆகும்.

**யோகா ஒரு சிறந்த நண்பன்**: மனதொய்வில் இருந்து விடுபட அற்புதமான வழி யோகா ஆகும். மன ஊக்கத்திற்கு மட்டும் அல்லாமல் உடல் ஊக்கத்திற்கு யோகா வழிவகுக்கிறது. ஒரே நேரத்தில் உங்கள் மன மற்றும் உடல் ஆரோக்கியத்தை பார்த்துக்கொள்வதோடு ஒரு அமர்வுக்குப் பிறகு நிம்மதி அளிக்கும் பெருமை யோகாவிற்கு உண்டு.

**சிறு இடைவெளி** : தொடர்ந்து ஓடிக்கொண்டு இருக்கும் இயந்திர வாழ்க்கைக்கு ஒரு இடைவெளி கொடுங்கள் இது வரவிருக்கும் மனஅழுத்தத்தினை குறைக்கும். மேற்கூறிய காரணங்களால் மன அழுத்தம் ஏற்படலாம், அதனை புரிந்துக்கொண்டு நடந்துகொள்வது எவ்வளவு முக்கியமோ, அந்த அளவு முன்னெச்சரிக்கையாக செயல்படுவதும் முக்கியம். எனவே பிரச்சினை வருவதற்கு முன்னதாகவே அதில் இருந்து விடுபடுவதே சிறந்தது.

எல்லா உடல், மன நோய்களுக்கு காரணமாக அமைவது மன அழுத்தம், மனக்கவலைதான். மன அழுத்தத்தினால் பிட்யூட்டரி சுரப்பி, பீனியல் சுரப்பி, தைமஸ் சுரப்பி ஒழுங்காக சுரக்காமல் பலவித நோய்கள் வருகின்றன. மனதில் அழுத்தம் இல்லாமல் கவலையில்லாமல் இருந்தால் தான் நமது உடலில் உள்ள நாள மில்லா சுரப்பிகள் நன்கு இயங்கும்.

மனதில் அமைதியைத் தருவது நம் கைகளிலேயே இருக்கின்றது. ஆம் அதுதான் முத்திரையாகும். பலவிதமான முத்திரைகள் உள்ளன. அதில் மன அமைதியைத் தரும் தன்னம்பிக்கையை கொடுக்கும் முத்திரைத்தான் தியான முத்திரையாகும்.

இன்றைய பரப்பரப்பான சூழலில் பதட்டம், டென்ன் இல்லாமல் முழுக்க முழுக்க வாழ முடியாது. டென்ஷன், பதற்றம், கவலையினால் ஏற்பட்ட உடல் பாதிப்பு இந்த முத்திரை செய்தவுடன் சரியாகிவிடும்

**தியான முத்திரை எப்படி செய்வது**

விரிப்பில் நேராக அமரவும். வயதானவர்கள் ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டு பயிற்சி செய்யலாம். மெதுவாக மூச்சை உள் இழுத்து மிக மெதுவாக மூச்சை வெளிவிடவும். பத்துமுறை இவ்வாறு செய்யவும். பின் இடது கையை கீழே வைத்து அதன் மேல் வலது கையை வைத்து இரண்டு கட்டை விரல் நுனியும் தொட்டுக் கொண்டிருக்கட்டும் பின் மெதுவாக கண்களை திறக்கவும்.

காலை, மதியம், மாலை சாப்பிடும் முன் இரண்டு நிமிடங்கள் செய்யவும். சாப்பிட்டு இருந்தால் இரண்டு மணி நேரம் கழித்து செய்யவும்.

நமது இரு கட்டைவிரலும் நெருப்பு மூலகம், நமது உடலில் உள்ள நெருப்பை கட்டுப்படுத்துகின்றது. மனக்கவலை, பதற்றம், டென்ஷனால் உடலில் உஷ்ணம் அதிகமாகின்றது. அந்த உஷ்ணத்தை இந்த முத்திரை சமப்படுத்துகின்றது. உடல் மனதில் ஒரு அமைதியை தருகின்றது.

**தியான முத்திரையின் இதர பலன்கள்**

மன அழுத்தம் நீங்கும், மனக் கவலை நீங்கும், ரத்த அழுத்தம் நீங்கும், இதயம் பாதுகாக்கப்படும், இதயவலி, இதய வால்வில் அடைப்பு வராது, சுறுசுறுப்புடன் திகழலாம், பய உணர்வு நீங்கும், தன்னம்பிக்கை பிறக்கும், நரம்பு தளர்ச்சி நீங்கும், ஒற்றைத் தலைவலி நீங்கும்.

இவ்வாறு பலன்கள் தரும் இந்த முத்திரையை ஒவ்வொருவரும் தினமும் பயிற்சி செய்யுங்கள்.

# மருத்துவக் கதிர்

## தடுப்பூசி செலுத்துவதில் அச்சம் வேண்டாம் தாமதமின்றி ஏற்றிக் கொள்ளவும்




'ஊரோடினால் ஒத்தோடு' எனும் கருத்திற்கிணங்க தடுப்பூசி போட்டுக் கொள்வதில் தாமதம் செலுத்தாமல் விரைவாக தடுப்பூசியினைச் செலுத்திக் கொள்வதனால் கொரோனாத் தொற்றிலிருந்து மீள முடியும் என்பது, மடு சுகாதார வைத்திய அதிகாரியான எஸ்.பி.லெம்பேட் என்பவரின் கருத்தாகும். இந்த வகையில் கொவிட்-19 தொடர்பான பல விழிப்புணர்வுகள் அரசினாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வகையில் மடு சுகாதார வைத்திய அதிகாரியான வைத்தியர் எஸ்.பி.லெம்பேட் வழங்கிய செவ்வியின் முழு விவரம் பின்வருமாறு,

**கேள்வி:-** கொரோனாத் தடுப்பூசிகளை மக்கள் முன்வந்து ஏற்றிக் கொள்கின்றனரா?

**பதில்:-** ஆம், ஆரம்ப காலங்களில் மக்கள் மத்தியில் தடுப்பூசி தொடர்பான அச்சம் காணப்பட்ட போதிலும் தற்போதைய காலப் பகுதியில் அச்சமானது தெளிவடைந்து தடுப்பூசியினை மனமுவந்து போட்டுக் கொள்கின்றனர்.

**கேள்வி:-** சீனாவினால் அறிமுகப்படுத்தப்பட்ட சினோபோர்ம் கொரோனாத் தடுப்பூசியினை பெரும்பாலான மக்கள் பயமின்றி ஏற்றிக் கொள்கின்றனரா?

**பதில்:-** ஆம், கொரோனா உருவாகிய ஆரம்பத்தில் கொரோனா சீனாவிலிருந்து பரப்பப்பட்டது எனும் கருத்து நிலவியதனாலும் கொரோனாவைத் தடுப்பதற்கான தடுப்பூசிகள் பல வகை (6 வகை) உருவாகியமையாலும் மக்கள் மத்தியில் பீதியேற்பட்டதால் சினோபோர்ம் தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ள ஆரம்பத்தில் பயந்தனர். ஆனால் தற்போது தாமாகவே முன்வந்து ஏற்றிக் கொள்கின்றனர்.

**கேள்வி:-** எமது மடு பிரதேசத்தில் 20 - 30 வயதிற்கு இடைப்பட்டவர்களுக்கு சினோபோர்ம் தடுப்பூசி வழங்கப்படுகின்றது. அதில் எத்தனை சதவீதமானோர் ஏற்றிக் கொண்டனர்?

**பதில்:-** 60சதவீதத்திற்கு மேற்படோர்.

**கேள்வி:-** சினோபோர்ம் தடுப்பூசி தொடர்பில் மக்கள் மனங்களில் அச்சம் ஏற்பட்டுள்ளது. அது தொடர்பில் உங்களது கருத்து என்ன?

**பதில்:-** ஊடகங்கள் சிலவற்றின் போலியான தவறான கருத்துக்களால் மக்கள் பீதியடைந்தமை உண்மையாகும். ஆனால் தற்போது அதன் உண்மைத் தன்மை நிலவரத்தினை ஓரளவிற்கு அறிந்து சினோபோர்ம் தடுப்பூசியினை ஏற்றிக் கொள்கின்றனர்.

**கேள்வி:-** சினோபோர்ம் தடுப்பூசி ஏற்றிக் கொண்டால் குறிப்பிட்ட சில நாடுகளுக்குச் செல்ல முடியாது எனும் கருத்து சமூக மட்டத்தில் நிலவுகின்றது. அது தொடர்பிலான உண்மைத் தன்மை யாது?

**பதில்:-** அவ்வாறான கருத்து நிலவியது உண்மையாகும். இதற்கு காரணம் ஊடகங்களில்வெளியான செய்தியாகும். ஆனால் உண்மையாதெனில் உலக சுகாதார மையத்தினால் (WHO) உறுதிப்படுத்தப்பட்டு வழங்கிய தடுப்பூசியினைப் பெற்றுக் கொண்ட எவரும் வெளிநாடுகளுக்குச் செல்ல முடியும். இந்த வகையில் சினோபோர்ம் தடுப்பூசிக்கும் உலக சுகாதார மையத்தினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**கேள்வி:-** சினோபோர்ம் தடுப்பூசிகளை ஏற்றிக் கொள்வதனால் யாதேனும் பக்க விளைவுகள் ஏற்பட வாய்ப்புள்ளனவா?

**பதில்:-** இது வரையில் சினோபோர்ம் தடுப்பூசியினைப் பெற்றுக் கொண்ட எவரும் எங்களிடம் பக்க விளைவுகள் தொடர்பில் முறையிடவில்லை.

**கேள்வி:-** தடுப்பூசி ஏற்றிக் கொண்ட அன்று குளிக்கக் கூடாது எனக் கூறுவதற்கான காரணம் யாது?

**பதில்:-** இதனை உளவியல் சார்ந்து தான் பார்க்க வேண்டும். தடுப்பூசியினைப் பெற்றுக் கொண்டதன் பின்பு குளிக்கும் போது இயல்பாகவே வேறொரு காரணத்தினால் அவருக்கு அசாதாரண சூழ்நிலையேற்படும் பொழுது தடுப்பூசி பெற்றவர் எண்ணக் கூடும் தடுப்பூசி பெற்றதனால் தான் தனக்கு இந்நிலையேற்பட்டுள்ளது என்று. எனவே தடுப்பூசி பெற்றதன் பின்பு குளிக்கக் கூடாது எனக் கூறுவதற்கு மருத்துவ ரீதியான எவ்வித காரணங்களும் இல்லை.

**கேள்வி:-** தடுப்பூசி பெற்றுக் கொண்டதன் பின்னர் அற்கோல் எடுக்கக் கூடாது எனக் கூறுவதற்கான காரணம் யாது?

**பதில்:-** அற்ககோலுக்கு இயற்கையாகவே நோயெதிர்ப்புத் தன்மையைக் குறைக்கும் தன்மையுள்ளது. எனவே தடுப்பூசியினைப் பெற்றதன் பின்பு அற்ககோலை உடனே அருந்தும் போது தடுப்பூசியின் தொழிற்பாட்டினை இது பாதிக்கக் கூடும். இதனால் தான் தடுப்பூசியினைப் போட்டவுடன் குறிப்பிட்ட சில நாள்களுக்கு அற்ககோலை எடுக்க வேண்டாமெனக் குறிப்பிடப்படுகின்றது.

**கேள்வி:-** 20 - 30 வயதிற்கிடைப்பட்ட இளைஞர்கள் பயமின்றி தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வதற்காக யாதேனும் விழிப்புணர்வு விடயங்கள் பிரதேச ரீதியாக மேற்கொள்ளப்பட்டுள்ளனவா?

**பதில்:-** குறிப்பிட்ட வயதுப் பிரிவினர்களுக்கு என்றில்லாமல் பொதுவாக தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை, துண்டுப் பிரசுரங்கள், வாயிலாகவும் பல அறிவிப்புக்கள் ஊடாகவும் விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**கேள்வி:-** இன்னும் தடுப்பூசிகளை ஏற்றிக் கொள்ளாது மறைந்து இருப்பவர்களால் சமூகத் தொற்று திரும்பவும் ஏற்பட வாய்ப்புள்ளதா?

**பதில்:-** இவ்வாறான நபர்களுக்குத் தொற்று இருந்தால் இவர்களால் கொரோனாவைப் பரப்ப முடியும். தடுப்பூசி பெற்று ஆரம்ப நிலையில் உள்ளவர்களுக்கு கொரோஜுனாத் தொற்று நோய் ஏற்பட்டாலும் இந்நோய் நிலைமையின் வீரியம் குறைவாகவே காணப்படும். அதேவேளை தடுப்பூசியைப் பெற்று நீண்ட நாள்கள் சென்றவர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட நேரிடும் போது கொரோனா கிருமியானது அவர்களது உடலில் இருந்து அழிந்து போகும். ஆனால் தடுப்பூசியினைப் பெறாமல் இருப்பவர்களுக்கு கொரோனாத் தொற்று வந்தால் அவர்களே பெரும் பாதிப்பிற்கு உள்ளாகுவர்.

சில நேரங்களில் அசாதாரண சூழ்நிலை ஏற்படும் போது இறக்கவும் கூடும்.

**கேள்வி:-** கொரோனாத் தடுப்பூசி தொடர்பான போலித் தகவல்கள் பல பரப்பப்பட்டு வருகின்றன. அதனைத் தடுக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் எவை?

**பதில்:-** போலித் தகவல்கள் பற்றி அரசாங்கத்திற்குத் தெரிய வரும் போது அதனைத் தீவிரமான விசாரணைக்கு உட்படுத்தி சரியான தகவலை ஊடகங்கள் வாயிலாக அரசாங்கம் அறியத்தருகின்றது. இதில் சுகாதார அரச பணியகம் முக்கிய பங்காற்றி வருகின்றது.

**கேள்வி:-** சினோபோர்ம் தடுப்பூசியும் ஏனைய தடுப்பூசிகளைப் போன்று தானா தொழிற்படுகின்றது?

**பதில்:-** ஆம், ஒவ்வொரு தடுப்பூசியும் உருவாக்கப்பட்ட விதங்கள் வேறுபடும்.

**கேள்வி:-** பல மக்களின் கருத்து பைஸர் தடுப்பூசி தான் சிறந்தது என்றும் சினோபோர்ம் சிறந்ததில்லை என்றும், இது தொடர்பிலான தங்களது கருத்து என்ன?

**பதில்:-** ஆரம்பத்தில் மக்கள் மத்தியில் இவ்வாறான கருத்து நிலவி வந்தாலும் அது தற்போது படிப்படியாக மாறி வருகின்றது.

**கேள்வி:-** இறுதியாக கொரோனாத் தடுப்பூசி தொடர்பில் குழப்பமடைந்துள்ள மக்களுக்குத் தாங்கள் கூற விரும்பும் செய்தி யாது?

**பதில்:-** ஊரோடினால் ஒத்தோடு.

வி.அனித்தா
நான்காம் வருடம்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,



# கலைக் கதிர்



## இலக்கிய உலகை விட்டு விடை பெற்ற சிறுகதையாளர் – நந்தினி சேவியர்

நந்தினி சேவியர் என்றவுடன் தமிழ் பாடப் புத்தகத்தில் வந்த சிறுகதையாளர் என்றே நினைவிற்கு வரும். அந்தவகையில் சேவியர் என்ற இயற்பெயருடைய சிறுகதையாளர், நந்தினி சேவியர் யாழ்ப்பாணத்தில் மட்டுவில் சாவகச்சேரியில் 1949 - 5 -25இல் பிறந்தார். திருகோணமலையை வசிப்பிடமாகக் கொண்ட இவர் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக இலக்கியமே மூச்சு, வாசிப்பு, எழுத்துரைப்பு, கலந்துரையாடல் என்று நெறிப்படுத்தி வாழ்ந்து கொண்டிருந்தவர்.

இளமைக் காலத்திலிருந்து பொதுவுடமைக் கொள்கைகளையும் கருத்துக்களையும் காண்பித்து மானிட நேயம் மிக்க மாக்ஸிசவாதியாக வாழ்ந்து கொண்டிருக்கும் நந்தினி சிறுகதை, நாவல், ஆய்வு, அறிமுகக் கட்டுரை, விமர்சனம் ஆகிய பல முயற்சிகளிலும் ஈடுபட்ட இவர் சகல துறைகளிலும் பாண்டித்தியம் மிக்க பண்பாட்டு எழுத்தாளராவார்.

சாதியத்தை கடுமையாக எதிர்ப்போரில் இவரும் ஒருவர். அதனால் சாதி பார்த்துப் பழகுபவர் யாராக இருப்பினும் அவர்களையெல்லாம் முற்றாக வெறுத்தார். அனைத்து மனிதர்களையும் சமமாக மதிக்க வேண்டும் என்றும் சாதியைச் சொல்லி யாரையும் அடிமைப்படுத்தக் கூடாது என்ற கொள்கையில் உறுதியாக இருந்தார்.

1967இல் சுதந்திரன் பத்திரிகையில் எழுதத் தொடங்கியவர் தொடர்ந்து தாயகம், சிந்தாமணி, மல்லிகை, வீரகேசரி, தினகரன், தினக்குரல், வாகை, தொழிலாளி, அலை, புதுசு, ஈழமுரசு, இதயம், ஈழநாடு, ஒளி, சுட்டும் விழி, தூண்டி, கலை ஓசை போன்ற பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் தனது ஆளுமையை நிலை நாட்டியவர். இறக்கும் வரை இவர் தனது முகப்புத்தகத்திலும் சமூக அவலங்களையும், அரசியல் ஊழல்களையும் மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் எழுதி வந்தார்.

இவரது சிறுகதைத் தொகுதியானது, அயற்கிராமத்தை சேர்ந்தவர்கள் (1993), நெல்லிமரப் பள்ளிக்கூடம் ஆகிய இரண்டு சிறுகதைப் புத்தகங்களையுமே இதுவரையில் வெளியிட்டிருக்கிறார். காரணம் கேட்டபோது நான் வாழ்நாள் முழுவதும் வாசகராகவே வாழ விரும்புகிறேன் எனப் பதிலளித்தார். இரண்டு நாவல்களை எழுதியிருக்கிறார். ஈழநாடு எனும் பத்திரிகையில் 10ஆவது ஆண்டு நிறைவையொட்டி அகில இலங்கை ரீதியில் நடத்திய நாவல் போட்டியில் ஒரு நாவல் 2 ஆம் பரிசு பெற்றது. மற்றும் இரண்டு குறுநாவல்களையும் எழுதிய இவரது குறுநாவல்களில் ஒன்று பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் தனது 50ஆவது ஆண்டு நிறைவையொட்டிய நாவல் போட்டியில் தங்கப் பதக்கத்தை முதற் பரிசாகப் பெற்றது.

இவர் தனது சிறுகதையில் வாழ்கைக் கோலங்களையும், அதில் இடம்பெறும் சில துன்ப நிகழ்வுகளின் சில பகுதிகளையும், தான் அனுபவித்த சில இன்னல்களையும் அனுபவித்து எழுதிய இவரது சிறுகதைகள் உயிரோட்டமும், கருத்தாழமும், வாசிக்கும் போது ஆர்வத்தை தூண்டும் எழுத்தாளுகையும் மிகச் சிறப்பாகவே சிறுகதைக்குள்ள தன்மையினை நிலை நாட்டியுள்ளன.

அயல் கிராமத்தைச் சேர்ந்தவர் என்ற சிறுகதை 1994இல் சுதந்திர இலக்கிய விருதும், தமிழின்பக் கண்காட்சி விருதும் பெற்றது. நெல்லிமரப் பள்ளிக்கூடம் என்ற சிறுகதை கொடகே தேசிய சாகித்திய விருதும் (2012), அரச இலக்கிய விருதும் (2012), வடமாகாண சிறந்த நூல் விருதும் (2012) பெற்றவர். இவ்விருதுகளோடு மட்டும் நின்று விடாது தேசிய வாசிப்பு மாத 2008 எழுத்தாளர் கௌரவ விருது, கிழக்கு மாகாண முதலமைச்சர் விருது (2011), தமிழ் விழா 2013 கௌரவ விருது (யாவர்க்குமாம் தமிழ் 2013), கலாபூசணம் 2013 அரச விருது போன்ற பற்பல விருதுகளையும் பெற்று சாதாரண மனிதராகத் திகழும் நந்தினி சேவியர் என்ற தற்பெருமையற்ற எழுத்தாளரை ஈழம், எழுத்துலகின் கொடையாக எமக்குத் தந்திருக்கின்றது.

ஒரு எழுத்தாளரையும் தாண்டி வாசகனாகவும், பாடசாலைகளில் தன்னை அழைக்கும் போது மகிழ்ச்சியோடு வந்து மாணவர்களை ஊக்கப்படுத்தி அவர்களுக்கு வழிகாட்டாலையும் வழங்கி எழுத்துலகில் இட்டுச் சென்ற திருகோணமலையின் 72 வருட கால அனுபவ முதுசமாகத் திகழும் நந்தினி சேவியர் ஐயாவைப் பற்றி எழுதுவதில், நானும் எனது எழுத்துக்களும் பெருமையடைகிறது.

**க.மங்களேஸ்வரி**
**திருகோணமலை**

## கவிஞர்கள் உண்மையாகவே இறக்கிறார்கள்

**‘கவிஞர்கள் இறப்பார்கள்
அவர்கள் சொற்கள் இறப்பதில்லை’
என்ற கட்டுக்கதையை நம்பி
இன்னும் எத்தனை கவிஞர்கள்
அகாலத்தில் இறப்பார்கள்?**

**அப்படி
நம்ப வைக்காதீர்கள்
நான் இறக்கும்போது
என்னுள் ததும்பும்
என் சொற்கள் இறக்கின்றன
என் காதல் இறக்கிறது
என் நினைவுகள் இறக்கின்றன
என் ருசிகள் இறக்கின்றன
என் இச்சைகள் இறக்கின்றன
என் இரவுகளும் பகல்களும் இறக்கின்றன
என் அகந்தை இறக்கிறது
என் கண்ணீர் இறக்கிறது
என் பதற்றங்கள் இறக்கின்றன
என் குழந்தைகளை அணைத்துக்கொள்ளும்
என் கைகள் இறக்கின்றன
என் வேலைகள் இறக்கின்றன
என் மூளை இறக்கிறது
என் பயங்கள் இறக்கின்றன**

**நம்புங்கள்
ஒரு கவிஞன் இறக்கும்போது
அவன் வேறு எவரையும்போலவே
முழுமையாக இறக்கிறான்**



**கவிஞர் மனுஷ்ய புத்திரன் - இந்தியா**



## காலம்அப்படித்தான்!

**என் வீட்டு
அடுக்குமாடிக் குடியிருப்பில்
அத்துமீறிக் குடியேறுகின்றனர்
வேற்றுக்கிரகவாசிகள்...**

**எதிர்த்துத் தடுக்க
எந்த முயற்சியும் எடுக்கவில்லை எந்தக் காவற்துறையும்...**

**ஏன் எதற்கென்று
கேள்வி கேட்க எவருக்கும்
தோன்றவில்லை இப்போது
காலம் அப்படித்தான்...**

**என்றோ ஒரு நாள்
வேற்றுக்கிரக வாசிகளோடு
நாம் வாழப்போபவர்கள் என்பதை
இன்றே உணர்ந்தது மனிதம்...**

**இன்னுமோர் கிரகத்தில்
நாம் அனுமதியின்றி
ஆராயும்போது
அவர்கள் எம்மைத் தடுத்தார்களா என்ன...**

**காலம் இப்படித்தான்
கட்டுக்கடங்காமல்
கரைபுரண்டு ஓடுகையில்
காட்டு ஜீவன்களும்
வேற்று உயிரிகளும் நாட்டுக்குள் நடைபோடும்.**

**சுமித்திரா ஜீவகுமார் - பிரான்ஸ்**




# இயற்கை விவசாயம் செய்வோம் வாருங்கள்



காய்கறிகள் நமது அன்றாட வாழ்விற்கு மிகவும் முக்கியமானதாகும். அதுவும் குறிப்பாக சைவ உணவு உண்பவர்களுக்கு மிகவும் அவசியம். இவை உணவின் ஊட்டச்சத்தை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், உணவை ருசியாக்குகின்றன. ஊட்டச்சத்து வல்லுனர்களின் பரிந்துரைப்படி, ஒரு வயது வந்த நபர், சீரான திட்ட உணவிற்கு ஒரு நாளைக்கு 85 கிராம் பழங்களையும் 300 கிராம் காய்கறிகளையும் உண்ண வேண்டும். ஆனால் தற்போதைய காய்கறி உற்பத்தியை கணக்கிட்டு பார்க்கும் பொழுது ஒரு நபர் ஒரு நாளுக்கு 120 கிராம் காய்கறிகளையே பெற முடிகிறது.

நாம் நமது அன்றாட வாழ்விற்கு தேவையான காய்கறிகளை வீட்டுக் காய்கறி தோட்டத்தில், நம்மிடம் உள்ள சுத்தமான தண்ணீர், சமயலறை மற்றும் குளியலறை கழிவு நீரைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யலாம். இதன் மூலம், உபயோகமில்லாத தண்ணீர் தேங்கி நிற்பதையும், இதனால் ஏற்படும் சுகாதார கேட்டையும், சுற்றுச் சூழல் மாசுபாட்டையும் தடுக்க முடிகிறது. பயனுள்ள வகையில் காய்கறி உற்பத்தியை மேற்கொள்ளமுடிகிறது. மிகக் குறைவான இடத்தில் செய்கை செய்யப்படுவதால், மிக எளிதான முறையில் நோய் மற்றும் பூச்சிக்கட்டுப்பாட்டை மேற்கொள்ள முடிகிறது. மேலும் பூச்சிக்கொல்லி மருந்துகள்



பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை. நோய் மற்றும் பூச்சி தாக்கிய பகுதிகளை செடிகளில் இருந்து அகற்றினால் போதுமானதாகும். இதனால் காய்கறிகளில் நச்சு இரசாயனங்கள் படிவதை தவிர்க்க முடிகிறது.

வீட்டின் பின்புறத்தில் அல்லது முன்புறத்தில் இருக்கும் இடத்தை தேர்வு செய்யலாம். ஏனெனில் குடும்ப நபர்களை கொண்டு முறையாக பராமரிக்கவும், வீட்டின் சமயலறை மற்றும் குளியலறை கழிவு நீரை பயன்படுத்திக் கொள்ளவும் இது சுலபமாக இருக்கும். வெறுமனே இருக்கும் இடத்தைப் பொறுத்தும், எத்தனை நபருக்கு காய்கறி தேவைப்படும் என்பதை பொறுத்தும் காய்கறி தோட்டத்தின் அளவை நிர்ணயம் செய்ய வேண்டும். காய்கறித் தோட்டத்தை எந்த வடிவத்தில் வேண்டுமானாலும் அமைத்துக் கொள்ளலாம். ஆனால் முடிந்தவரை சதுரவடிவத்தைவிட செவ்வக வடிவ வீட்டுக்காய்கறி தோட்டத்தை தேர்வு செய்யலாம். ஊடுபயிர் செய்கை மற்றும் தொடர் செய்கை முறையை மேற்கொள்ள வேண்டும். நான்கு அல்லது ஐந்து நபர்கள் உள்ள ஒரு சராசரி குடும்பத்திற்கு தேவைப்படும் காய்கறியை உற்பத்தி செய்ய ஒரு சிறிய இடம் இருந்தால் போதுமானதாகும்.

## நிலம் தயார் செய்தல்

நிலத்தை 30 - 40 செ.மீ. ஆழத்திற்கு மண்வெட்டி கொண்டு கிளறிவிட வேண்டும். கற்கள், புதர்கள், களைகள் ஆகியவற்றை அகற்ற வேண்டும். 100 கிலோ நன்கு மக்கிய மாட்டெரு உரம் அல்லது மண்புழு எருவை இட்டு நன்கு கலக்கி விட வேண்டும். தேவைக்கேற்ப 45 செ .மீ. 60 செ. மீ. என்ற இடைவெளியில் பாத்தி அமைக்க வேண்டும். தேவைப்பட்டால் படுக்கை முறையிலும் செய்யலாம்.

நேரடி விதைப்பு பயிர்களான வெண்டி , கொத்தவரை மற்றும் தட்டைப்பயறு போன்றவற்றை ஒரு புறத்தில் 30 செ.மீ. இடைவெளியில் நட வேண்டும். முழு செடியாக பிடுங்கப்படும் அல்லது அறுவடை செய்யப்படும் தண்டுக்கீரை, சிறுகீரை ஆகியவற்றை, 1 பகுதி விதை 20 பகுதி மணல் என்ற விகிதத்தில் கலந்து கை விதைப்பு செய்யவேண்டும். சின்ன வெங்காயம், புதினா, கொத்தமல்லி போன்றவற்றை வரப்பின் ஓரத்தில் நட வேண்டும்.

நாற்று நட செய்யும் பயிர்களான தக்காளி, கத்தரி, மிளகாய் போன்றவற்றை நாற்றங்கால் படுக்கைகளில் அல்லது தொட்டிகளில் ஒரு மாதத்திற்கு முன்பே விதைக்க வேண்டும். விதைப்பு முடிந்து மண்ணை மூடியவுடன், எறும்பு வருவதை தடுக்க 250 கிராம் வேப்பம் புண்ணாக்கை தூவவேண்டும். விதைத்து 30 நாள்கள் கழித்து தக்காளியையும், 40 - 45 நாள்கள் கழித்து கத்தரி, மிளகாய், சிறு வெங்காயம் ஆகியவற்றையும் நாற்றங்களில் இருந்து எடுத்து நட வேண்டும். தக்காளி, கத்தரி, மிளகாய் ஆகியவற்றிற்கு 30 - 45 செ.மீ. என்ற இடைவெளியில் ஒரு பக்கத்திலும், சின்ன வெங்காயத்திற்கு 10 செ.மீ. இடைவெளியில் இரு பக்கமும் நட வேண்டும்.

நட முதல் தண்ணீரும் நட்ட மூன்றாம் நாள் மறு தண்ணீரும் பாய்ச்ச வேண்டும். நாற்றுகளுக்கு இளம் பருவங்களில் இரு நாள்களுக்கு ஒரு முறையும், பிற்பருவங்களில் நான்கு நாள்களுக்கு ஒரு முறையும் நீர் பாய்ச்ச வேண்டும்.

ஒரு வருடத்திற்கு, வீட்டுச்செலவுக்கு தேவைப்படும் காய்கறிகளை தொடர்ச்சியாக உற்பத்தி செய்வதே வீட்டு காய்கறி தோட்டத்தின் முக்கிய நோக்கம் ஆகும். சில முக்கிய வழிமுறைகளை கையாண்டு இந்த நோக்கத்தை பூர்த்தி செய்து கொள்ளலாம்.

பல பருவத் தாவரங்களை மற்ற பயிர்களில் நிழல் படியாதவாறும், ஊட்டச்சத்திற்கு போட்டி ஏற்படாதவாறும் தோட்டத்தின் மூலையில் நடவேண்டும். தோட்டத்தின் நடுவில் உள்ள நடைபாதை மற்றும் ஏனைய நடைபாதையின் அருகிலும் குறுகிய கால பயிர்களான கொத்த மல்லி, புதினா, பொன்னாங்கன்னி, போன்றவற்றை நட வேண்டும். ஊடுபயிராக தண்டுக்கீரை, சிறுகீரை பயிர் செய்யலாம்.

# வீட்டுத் தோட்டத்தில் அதிக பலன் கொடுக்கும் பந்தல் காய்கறிகள்



**புடலங்காய், பீர்க்கங்காய், பாகற்காய், அவரை உள்ளிட்ட பந்தல் காய்கறிவகைகள் வெட்டு தோட்டத்துக்கு அதிக அளவில் பயன்கொடுப்பவை. கொடி வகையான பீர்க்கங்காய்க்கு பந்தல் அமைப்பது அவசியம். குறைந்த முதலீட்டில் பீர்க்கங்காய் பயிரிட்டு, அதிகளவு விளைவை பெறலாம். பொதுவாக மண் பாங்கான, தண்ணீர் தேங்காத மண் வகைகள் இதற்கு ஏற்றதாகும்.**

**கோடைகாலம், மழைக்காலம் என இரு காலங்களிலும் பயிர் செய்யலாம். எனினும், வெப்பம் குறைவாக இருப்பது நல்லது. ஜீலை, ஜனவரி மாதங்களில் நாற்று படரும்.**

**தகுந்த இடைவெளியில் குழிகள் தோண்டி, குழிக்கு மூன்று என்ற அளவில் விதை விதைக்க வேண்டும். முளைவந்த பிறகு, ஆரோக்கியமான இரண்டு நாற்றுகளை விட்டுவிட்டு, மற்ற நாற்றுகளை அகற்ற வேண்டும். முளைவந்த 15 நாள்களுக்குப் பிறகு, குழிக்கு 2 நாற்றுகள் நட வேண்டும். களையைக் கட்டுப்படுத்த மண்வெட்டி கொண்டு மூன்று முறை களையெடுக்க வேண்டும். 2 மீற்றர் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள பந்தலை அடைய, தாவரத்துக்கு தாங்கிகளை அமைக்க வேண்டும்.**

**விதை ஊன்றிய 50 முதல் 60 நாள்களில் விளைவை பெறலாம். தொடர்ந்து, ஒரு வார இடைவெளியில் 10 முறை அறுவடை செய்யலாம். விவசாயிகள் இந்த முறையைக் கடைப்பிடித்தால் நல்ல பயனடையலாம்.**





# வாழ்க்கை

## ஒரு முடிவில்லா போராட்டம்

ப்ரியமதா பயஸ்

நீங்கள் உயிரையே வைத்திருக்கும் ஆண்/ பெண் என்றாவது ஒரு நாள் நான் உன்னை காதலிக்கவில்லை என்று உங்களிடமே சொல்வர்.

தாய், தந்தை, உடன்பிறப்பு, நல்ல நண்பர்கள் தவிர வேறு யாரும் உங்களைப் பற்றி கவலை படப்போவதில்லை. ஆம், அனைவரும் சுய நல வாதிகள். உங்களுடன் சிரித்து பழகும் அனைவரும் உங்கள் நன்பர் அல்ல.

ஏறக்குறைய எல்லோரும் உங்களை உங்களின் தோற்றம் மற்றும் வருமானத்தை வைத்து எடை போடுவார்கள்.

யாருடைய வாழ்க்கையிலுருந்தும் நீங்கள் எளிதாக மாற்றப்படலாம்.

அனைத்தும் தற்காலிகமானது. எந்த ஒரு பொருளோ அல்லது உடமையுடனோ உங்களை அதிகம் இணைத்துக் கொள்ள வேண்டாம்.

உங்கள் திட்டங்கள் உங்களை கைவிடும். மாற்று திட்டங்களை உருவாக்கி கடினமாக உழைக்கவும்.

சமூக வலைதளங்களில் தங்களை மகிழ்ச்சியாக காட்டி கொள்பவர்கள் நிஜ வாழ்வில் மகிழ்ச்சியாக இருப்பதில்லை.

உங்களின் திட்டங்களை யாரிடமும் வெளிப்படுத்தாதீர்கள். அவர்கள் உங்களை புகழலாம். ஆனால் உங்கள் திட்டங்களை வெளிப்படுத்திய நீங்கள் அவர்களுக்கு ஒன்றுமே இல்லை.

நீங்கள் ஒரு நாள் கண்டிப்பாக மரணிக்க போகிறீர்கள். நீங்கள் பெருமைப்படக்கூடிய வாழ்க்கையை வாழ்வது நல்லது.

நம்பிக்கை என்பது ஆபத்தான விடயம்.

புகைப் பிடிப்பதை விட எதிர்பார்த்தலும், ஒப்பிடுதலும் அதிக உயிர்களை கொல்கின்றன.

பள்ளிக் கல்லூரிகள் பெரும்பாலும் உங்களை அடுத்தவரின் கனவுகளை உருவாக்க/நினைவாக்க ஆயத்தப்படுத்துகின்றன.

எல்லோரும் உங்களை விரும்பினால் பெருமைப்பட வேண்டாம், மலிவான பொருள்களை வாங்க கூட்டம் அலை மோதும்.

நீங்கள் சந்திக்கும் சிலர் முட்டாள்தனமாக இருப்பார்கள். அவற்றைப் புறக்கணிக்க முயற்சி செய்யுங்கள்.

நீங்கள் யாராக இருந்தாலும்/ என்னவாக இருந்தாலும் மக்கள் உங்கள் பின்னால் கிசுகிசுப்பார்கள்.

மற்றவர் உங்களை மதிக்கும் படி நடக்க செய்ய நெடும் நாள் ஆகும். ஆனால் அதை மாற்றுவது மிகவும் எளிதானது.

உங்களைப் பின்தொடரும் அனைவரும் உங்கள் ரசிகர் அல்ல.

மக்கள் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டியது அடிப்படை சட்டத்தை பற்றி ஏதேனும் பிரச்சினை வரும்போதே நாம் காவல் நிலையத்தையும், நீதிமன்றத்தையும் தேடிப் போகிறோம். அப்படி போகும்போது, தன் தரப்பு நியாயத்தை மட்டுமே பார்க்கும் நாம் அது , பொது நியாயத்தில் வருமா என கவனிக்க தவறுகிறோம். இதனால் தான் பல சுற்று வழக்காடலுக்கு பிறகும் நம் கட்சி தோற்றுப்போகிறது. அது ஏற்றுக்கொள்ளப்படாத வாதம் என்று முன்னரே நமக்கு தெரிந்திருந்தால் அத்தனை கால விரயம், பொருள் விரயம் செய்திருப்போமா?

நல்ல மக்களுக்கு, பொறுப்பாக நடந்து கொள்வது எப்படி என்று சொல்ல சட்டம் தேவையில்லை. ஆனால் மோசமான மக்களுக்கு அதை வளைக்கும் வழி தெரியும் என்கிறார் ஓசோ .

ஒரு வழிப்பாதையின் எதிர்திசையில் வேகமாக வண்டியோட்டி வருபவர்களை பார்த்திருக்கிறோம் தானே?

அதைக் கூட விடுங்கள்..நடந்து போய்க் கொண்டிருக்கும் மக்களின் மீது வண்டியை ஏற்றி கொன்றுவிட்டு, வாளாது இருப்போரையும் தான் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

இத்தனைக்கும் தன் மகன் தேரில் அடிபட்டு ஒரு கன்று இறந்தது என்று தன் மகனையே பலியிட்ட மனுநீதி சோழன் ஆண்டதும் இந்த உலகில் தான்.

அதிகாரத்தை கொண்டு ஒருவன் என்ன செய்கிறான் என்பதைக் கொண்டே அவனில் உள்ள மனிதத்தன்மையை அறிந்துகொள்ள முடியும்.

வலியை உணர்ந்தால் உயிருடன் உள்ளோம் என்று அறியலாம். மற்றவரின் வலியை உணர்ந்தாலோ மனிதனாக இருக்கிறோம் என்று லியோ டால்ஸ்டாய் சொல்கிறார்.

சொல்றவன் சொல்லிக்கிட்டு இருக்கட்டும், என்று பணமும் அதிகாரமும் இருந்தால் சட்டத்தை வளைத்து விடலாம் தான் ஆனால்

வேதாளம் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே – மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரம் சொன்னார் மனை என்று

எச்சரிக்கிறாள் அவவை.

வழக்காடு மன்றத்தில் (கோர்ட்) பொய் சாட்சி சொல்பவர் வீடு ஒருவருக்கும் பயன்படாமல் போகும், அந்த வீட்டில் வேதாளம் குடிபுகும், வெள்ளை எருக்கம் பூ பூக்கும், பாதாள மூலி என்னும் கொடிய விஷம் உள்ள கொடி வளரும், மூதேவி போய் வாழ்வாள், பாம்பு குடியேறும். ஆதலால் நியாய அநியாயங்களை அலசி ஒருவரின் பிரச்சினையை தீர்க்க உதவும் வழக்காடு மன்றத்தில் நாம் பொய் சாட்சி சொல்லக்கூடாது.

இங்குள்ள பிரச்சினையே புத்திசாலிகள் எல்லாம் ஏகப்பட்ட சந்தேகங்களுடன் இருக்க, அறிவிலிகள் மட்டும் மிகுந்த தன்னம்பிக்கையுடன் இருப்பது தான்.

ஏதோ ஒரு வகையில் அது சட்டத்துக்கு புறம்பனது ஆனாலும் வாழ்க்கையில் ஜெயிப்பவனிடன் பேச தான் ஆசைப்படுகிறார்கள். தோற்றுப் போனவனிடம் பேச யாருக்கும் நேரமில்லை. அவன் நேர்மையான வழியில் போய் தோற்றாலும் கூட.

வரலாறு முழுதும் பார்த்திருக்கிறீர்களா ?

யார் செயல் புரிந்திருக்க வேண்டுமோ அவர்கள் செய்யாமல் விட்டதும், நன்றாக தெரிந்து அறிந்திருக்க வேண்டியவர்களே அதை விட்டொழித்ததும், எப்போது அதிக தேவையோ, அப்போது நீதி ஊமையாகிப்போனதும், இவையெல்லாம் தான் அரக்கர்கள் வெற்றி கொள்ள உதவியது.

பீஷ்மர் எவ்வளவோ அறிந்திருந்தும் , நடக்கும் அநீதி தெரிந்தும் வாளாயிருந்ததால் தானே பழிக்கு ஆளானார்!

ஆனாலும் எந்த தவறும் செய்யாதிருப்பினும் சிலருக்கு காராக்கிரகம் போகும் சூழல் வரும்..

‘நதியின் பிழை அன்று நறும்புனல் இன்மை என்று கம்பர் பாடவில்லையா?

நீதிமன்றங்கள் தன் கதவை தட்டுபவருக்கு நீதி வழங்க தயாராகத் தான் இருக்கிறது!

நமக்கு தான் தெரிய வேண்டும். நம் உரிமைகளை பற்றி மட்டுமல்ல.. கடமைகளையும்!!

எனக்கு அதெல்லாம் தெரியாது, தெரிய வேண்டிய தேவையும் இல்லை என்று கர்மாவின் சட்டத்திற்கு முன் சொல்ல முடியாதே.

## ஒருவர் தினமும் கடைப்பிடிக்க வேண்டிய சில ஆரோக்கியமான பழக்கங்கள் என்ன?

1. காலையில் எழும் போது கடவுள் நம்பிக்கையுடையவர்கள், கடவுளிடமோ நம்பிக்கையற்றவர்கள் இயற்கையிடமோ இன்றைய என்னுடைய நாள் முழுவதும் இனிமையாக அமையவேண்டும் என்று வணங்க வேண்டும். இரவு நித்திரைக்குச் செல்லும் போது இன்றைய நாளை இனிமையாகத் தந்ததற்கு நன்றி கூற வேண்டும், இன்று ஏற்பட்ட சஞ்சலங்கள் நாளை ஏற்படாமல் காக்க வேண்டும் என வேண்டிக் கொண்டு அமைதியான மனநிலையுடன் நித்திரை கொள்ள வேண்டும்.

2. நாம் அனைவரும் காலையில் எழுந்ததும் பல் துலக்குவோம். ஆனால் இரவில் சாப்பிட்டவுடன் நித்திரைக்குச் செல்வது தான் நம் பலரின் வாடிக்கையே. அதனால் இரவில் பல் துலக்கும் பழக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். பல் துலக்கி விட்டு முகத்தையும் கொஞ்சம் கழுவிவிட்டு நித்திரைக்குச் செல்ல வேண்டும். இப்படிக் கொஞ்ச நாள்கள் செய்து வந்தாலே காணும். ஒரு நாள் இரவில் பல்துலக்காது விட்டாலே ஒருவித அருவருப்பு வாய்க்குள் உண்டாவது போல இருக்கும். பிறகு மறந்தும் பல்துலக்காமல் நித்திரைக்குச் செல்லமாட்டோம்.

3. இரவில் பல் துலக்கி விட்டு உப்பு நீரைக் கொண்டு வாயைக் கொப்பளித்தால் இன்னும் ஆரோக்கியம்.

4. காலையில் பல் துலக்கி விட்டு ஒரு குவளை நீரேனும் அருந்த வேண்டும். இது மலச்சிக்கலையும் போக்கும்.

5. வீட்டை எப்போதும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். குறிப்பாக நமக்காக ஒதுக்கப்பட்டுள்ள அறையைக் கண்ணிற்குக் குளிர்ச்சியாக மாற்ற வேண்டும். என்னுடைய அறை சுத்தமாக இல்லாவிட்டால் என்னால் அங்கே இருந்து படிக்கவோ, நிம்மதியாக நித்திரை கொள்ளவோ, பிறரை என் அறைக்குள் அழைத்து வரவோ, பிற விடயங்களைச் செய்யவோ சங்கடமாய் இருப்பதாய் உணர வேண்டும்.

6. மலசலகூடம் சென்று வந்த பின் கைகளை நன்றாகச் சவர்க்காரமிட்டோ வேறு சுத்தம் செய்யும் நல்ல திரவங்கள் கொண்டு கழுவுவதுடன் கால்களையும் நீரால் கழுவ வேண்டும்.

7. வீட்டைச் சுற்றியுள்ள மரங்களையோ தோட்டத்திலுள்ள காய்கறிச் செடி கொடிகளையோ ஒரு 5 நிமிடங்களேனும் கண்களால் இரசித்து கைகளால் தொட்டுணர்ந்து விருப்பினால் அவற்றுடன் கதைக்கலாம். உண்மையில் இச் செயல் மகிழ்ச்சியைத் தரும்.

8. தினமும் அணிகின்ற ஆடைகளைத் துவைத்த பின்னரே அணிய வேண்டும். குறிப்பாக உள்ளாடைகளை நன்றாகத் துவைத்து உலர்த்திய பின்னரே அணிய வேண்டும்.

9. சிலருக்குக் குளித்தாலும் மூக்கு மற்றும் நகங்களிலுள்ள அழுக்குகள் போவதில்லை. எனவே அவற்றின் மீது தனிக் கவனமெடுத்துத் தினமும் சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். இதனால் நம்முடன் பழகும் பிறருக்கும் சங்கடங்கள் இல்லாமல் இருக்கும்.



10. யாரேனும் நம் உறவுகள் நேரிலோ/ தொலைபேசியிலோ எம்முடன் உரையாட விரும்பினால் அவர்களை அலட்சியப்படுத்தாது சிறிது நேரமேனும் அவர்களுக்காக ஒதுக்க வேண்டும். இது அவர்களின் மனநிலையை மட்டுமன்றி நம்முடைய மனநிலையையும் கொஞ்சம் இலகுபடுத்தும்.

மேலே குறிப்பிட்ட விடயங்கள் அனைத்தையும் நீங்கள் கடைப்பிடிக்கிறீர்களா என்று கேட்டால், கிட்டத்தட்ட 8 விடயங்கள் வரை கடைப்பிடிப்பதில்லை என்று தான் கூறலாம், இவற்றைக் கடைப்பிடித்தால் உடல் ஆரோக்கியம் மட்டுமன்றி உள ஆரோக்கியமும் மேம்படும்.

காலைக்கதிர் Kalaikkathir

# கூட்டு ஒருமித்த இயக்கம் என்ற தலைப்பில் வத்திக்கானில் உலக ஆயர்கள் மாமன்றம்

2023 ஆம் ஆண்டில் உலகெங்கும் தலத்திரு அவைகளில் துவங்கவிருக்கும் கூட்டு ஒருமித்த இயக்கம் என்ற உலக ஆயர்கள் மாமன்றம் பற்றி திருத்தந்தை பிரான்சிஸ் தனது உரோம் மறைமாவட்டத்தின் ஏறத்தாழ நான்காயிரம் விசுவாசிகளை வத்திக்கானின் புனித 6ஆம் பவுல் அரங்கில் சந்தித்து கூட்டு ஒருமித்த இயக்க உலக ஆயர்கள் மாமன்றம் பற்றிய தன் விரிவான எண்ணங்களை எடுத்துரைத்தார்.

கூட்டு ஒருமித்த இயக்கம் பற்றிய உலக ஆயர்கள் மாமன்றத் தயாரிப்புக்கள் 2021ஆம் ஆண்டுக்கும் 2023 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் மூன்று கட்டங்களாக இடம்பெறுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்றுரைத்த திருத்தந்தை இத்தயாரிப்புக்கள் திரு அவையில் அனைத்து நிலைகளில் உள்ளவர்களை உள்ளடக்கியதாக இருக்கும் என்றார்.

இத்தயாரிப்புக்களில் அனைத்து விசுவாசிகளின் கருத்துக்களைச் சேகரிப்பது என்பதோடு தூய ஆவியாரின் குரலுக்குச் செவிமடுப்பது மிகவும் முக்கியம் என்பதை வலியுறுத்திக் கூறியத் திருத்தந்தை முதல் கட்டத் தயாரிப்புக்கள் 2021 ஆம் ஆண்டு ஒக்ரோபர் முதல் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் வரை நடைபெறும் என்றார்.


கூட்டு ஒருமித்த இயக்கம் என்பதன் பொருளை விளக்கிய திருத்தந்தை பிரான்சிஸ் இது திருஅவை பற்றிய ஆய்வுக்கட்டுரையின் ஒரு பிரிவு அல்ல மாறாக இது திருஅவையின் இயல்பு, அதன் வடிவம், அதன் வாழ்க்கைமுறை, அதன் மறைப்பணி போன்றவற்றை வெளிப்படுத்துவதாகும் என்றார்.

கூட்டு ஒருமித்த இயக்கத் திருஅவை என்று நாம் பேசும்போது மாற்றுச் சிந்தனைகளோடு சிந்திக்கும் ஒரு முறை என்று தான் கருதுவதாகத் தெரிவித்த திருத்தந்தை மாமன்றம் என்பது ஒன்று சேர்ந்து நடத்தல் என்று கூறி அதற்கு விவிலியத்திலிருந்து பல்வேறு மேற்கொள்களையும் குறிப்பிட்டார்.

உலக ஆயர்கள் மாமன்றத்திற்கென நடைபெறும் தயாரிப்புக்கள் மறைமாவட்ட அளவில் நடைபெறுவது மிகவும் முக்கியம். ஏனெனில் இது திருமுழுக்குப் பெற்ற அனைவரின் குரலுக்குச் செவிமடுப்பதாக உள்ளது எனவும், இறைவனின் வாக்குறுதிகளைப் பெற்றுள்ள மிகப்பெரும் மக்களின் ஓர் அங்கம் என உணர்வது அவசியம் எனவும் உரைத்த திருத்தந்தை இறைமக்கள் என்ற சொல்லாடல் பற்றியும் விளக்கினார்.

இத் தயாரிப்புப் பாதையில் செவிமடுத்தல் என்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்றும், இத்தயாரிப்பில் ஊக்கப்படுத்தவே இன்று உங்களைச் சந்தித்தேன் என்றும் உரைத்த திருத்தந்தை தூய ஆவியாருக்குச் செவிகொடுங்கள், எவரையும் புறக்கணியாதீர்கள், அவ்வாறு இருப்பது உரோம் மறைமாவட்டத்திற்கும் உலகளாவிய திருஅவைக்கும் நல்லது என்றார்.

உரோம் பல்வேறு மக்களையும் பல்வேறு நிலையில் உள்ளவர்களையும் கொண்ட மாநகரம். இந்த




பெருந்தொற்று காலத்தில் நலிந்தவர்களைப் பாரமரிக்கும் திருஅவையாகச் செயல்பட உங்களை ஆண்டவர் அழைக்கின்றார் என்று திருத்தந்தை பிரான்சிஸ் தன் உரோம் மறைமாவட்ட விசுவாசிகளிடம் கூறி தன் நீண்ட உரையை நிறைவு செய்தார்.

## கூட்டு ஒருமித்த இயக்கம் பற்றிய ஆயர்கள் மாமன்ற தயாரிப்பு ஏடு

கூட்டு ஒருமித்த இயக்கம் என்ற தலைப்பில் 2023 ஆம் ஆண்டு வத்திக்கானில் நடைபெறவிருக்கும் உலக ஆயர்கள் மாமன்றத்திற்கு தலத்திருஅவைகளின் தயாரிப்புக்கு உதவும் ஓர் ஏட்டுடன் வழிகாட்டி நூல் ஒன்றையும் உலக ஆயர்கள் மாமன்றத்தின் தலைமைப் பொதுச்செயலகம் வெளியிட்டுள்ளது.

விசுவாசிகள் தங்களின் கருத்துக்களைத் துணிச்சலோடு எடுத்துரைக்கவும், அவற்றுக்கு முற்சார்பற்ற மனநிலையோடு செவிமடுக்கவும், திருஅவை சமுதாயம் மற்ற கிறிஸ்தவ சபைகள் ஆகியவற்றோடு கலந்துரையாடல் நடத்தவும், இந்த தயாரிப்பு ஏடு உதவும் எனவும் கூறப்பட்டுள்ளது.

**ஒன்றிணைந்த பயணத்திற்கு பத்து பரிந்துரைகள்**

தலத்திருஅவைகளில் ஒன்றிணைந்த பயணம் எவ்வாறு நடைபெறுகிறது என்பதையும் சிந்தித்துப் பார்ப்பதற்கு அழைப்பு விடுக்கும் இவ்வேடு ஒன்றிணைந்த பயணத்திற்கு பத்து பரிந்துரைகளையும் முன்வைத்துள்ளது. நமது திருஅவை நம்மோடு இருப்பவர்கள் குறிப்பாக புறக்கணிக்கப்பட்டவர்கள் மற்றும் திருஅவைக்குத் தொலைவில் உள்ளவர்களோடு பயணித்தல் போன்ற பதங்களுக்குப் பொருளைக் கண்டு கொள்ளுதல், இளையோர், பெண்கள், துறவியர், ஒதுக்கப்பட்டோர் ஆகியோருக்குச் செவிமடுத்தல், ஒன்றிணைந்து பயணிப்பதற்கு இறைவேண்டல் உதவும் முறை போன்ற பல பரிந்துரைகள் இந்த ஏட்டில் தரப்பட்டுள்ளன.

## ஆயர்கள் மாமன்றத்தை இயக்குகின்றவர் தூய ஆவியார் என திருத்தந்தை விளக்கம்

ஒருங்கிணைப்பு பங்கேற்பு மற்றும் மறைப்பணி ஆகியவை வழியாக திருஅவையின் ஒருங்கிணைந்த பயணத்தை எவ்வாறு அடையலாம் என விளக்கிய திருத்தந்தை பிரான்சிஸ் இந்தப் பயணத்தில் எதிர்கொள்ளப்படும் ஆபத்துக்கள் பற்றி எச்சரிக்கை விடுத்ததோடு இப்பயணம் வழங்கும் வாய்ப்புக்களையும் எடுத்துரைத்தார்.

ஒன்றிப்பு எனும் கொடையைப் பெற்று வாழ்கின்ற மற்றும் தூய ஆவியாரின் குரலுக்குத் திறந்த மனதுடன் செவிமடுக்கின்ற ஒரு திருஅவையை நாம் அனுபவிக்கும் வண்ணம் ஒரே இறைவனின் மக்கள் என்ற உணர்வில் ஒன்றிணைந்து பயணிப்போம் என்று கேட்டுக் கொண்ட திருத்தந்தை மாமன்றம் என்பதன் பொருளையும் விளக்கினார்.

மாமன்றம் என்பது ஒரு பாராளுமன்றமோ அல்லது கருத்துக்களைப் பலனாய்வுசெய்யும் ஓர் அமைப்போ அல்ல. மாறாக அது ஒரு திருஅவை நிகழ்வு. அதை இயக்குபவர் தூய ஆவியார். அவரின்றி மாமன்றம் என்பதே கிடையாது என்பதை வலியுறுத்திக் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

எல்லோரும் பங்கேற்க அழைப்பு

திருமுழுக்கு பெற்ற அனைவரும் திருஅவையின் வாழ்விலும் பணியிலும் பங்கேற்க அழைக்கப்பட்டுள்ளனர். மறைமாவட்ட மற்றும் பங்குத் தளங்களிலுள்ள ஆலோசனை அவைகளின் உறுப்பினர்கள் மற்றும் மேய்ப்புப்பணியாளர்கள் பலர் அதிருப்தி அடைந்துள்ளமையை ஏற்கிறேன் என உரைத்த திருத்தந்தை, இத்தயாரிப்புப் பணியில் எல்லோரையும் பங்கேற்கவைப்பது திருஅவையின் கடமை என்றார்.

**ஆபத்துக்கள்**

இத்தயாரிப்புப்பணிகளை வெறும் ஒரு நிகழ்வாக நோக்காமல் அவை உண்மையான ஆன்மீகத் தெளிந்து தேர்தலில் நடைபெற வேண்டும். இவை அறிவுசார்ந்தவையாக மாறி



விடக்கூடாது என்று கேட்டுக்கொண்ட திருத்தந்தை வழக்கமாக இப்படித் தான்செய்வோம் என்ற அணுகுமுறை தவிர்க்கப்படவேண்டும் என்றார்.

மற்றுமொரு திருஅவைக்காக அல்ல மாறுபட்ட திருஅவையை உருவாக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அதற்கு தூய ஆவியாரின் மூச்சுக்காற்று புதிதாக நமக்குத் தேவைப்படுகின்றது. அவரே நம்மை அனைத்து தன்னலக் கட்டுகளிலிருந்து விடுதலை செய்கிறார் என்றார்.

## மற்றவர்களை நோக்கிக் கரங்களை விரித்த வண்ணம் நாம் செல்வோம்!

பிரேஷில் நாட்டின் றியோடி ஜெனிறோ கொக்கோவாடோ மலையில் விரிந்த கரங்களுடன் மீட்பர் யேசு திருவுருவச் சிலை அமைக்கப்பட்டதன் 90ஆவது ஆண்டு நிறைவையொட்டி அந்நாட்டு தலத்திருஅவைக்கு சிறப்புச் செய்தியொன்றை அனுப்பியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கரங்களை விரித்த வண்ணம் மலைமேல் நிற்கும் யேசு மீட்பரின் திருஉருவச் சிலை சொல்லித்தரும் பாடம் நாமும் மற்றவர்களை நோக்கி கரங்களை விரித்த வண்ணம் செல்லவேண்டுமேயொழிய கரங்களை இறுக்கக் கட்டியவர்களாக அல்ல என தன் செய்தியில் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

திருப்பீடச்செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்களால் பிரேஷில் நாட்டு தலத்திருஅவைக்கு குறிப்பாக றியோடி ஜெனிறோ நகர் மக்களுக்கென அனுப்பப்பட்டுள்ள திருத்தந்தையின் திருச்செய்தி ஒப்புரவு மற்றும் உடன்பிறந்த நிலையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதாக உள்ளது.

எவரும் கைவிடப்பட்டவர்களாக புறக்கணிக்கப்பட்டவர்களாக மறக்கப்பட்டவர்களாக உணரப்படாத நீதியான ஒரு சமூகத்தை ஒவ்வொரு நகரிலும் உலகம் முழுவதும் கட்டியெழுப்ப விரிந்த கரங்களுடன் யேசு உடன்பிறந்த நிலைக்கு அழைப்பு விடுக்கிறார் என உரைக்கிறது திருத்தந்தையின் செய்தி.

ஒவ்வொருவரும் தாங்கள் எந்த நிலையில் இருந்தாலும் உடன்பிறந்த நிலையைக் கட்டியெழுப்ப முன்வர வேண்டும் என அழைப்பு விடுக்கும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கரங்களைக் கட்டியவராக அல்ல, மாறாக ஒவ்வொருவரையும் நோக்கி கரங்களை விரித்தவர்களாக செயல்பட வேண்டும் என்ற விண்ணப்பத்தையும் முன்வைத்தார்.

உடன் பிறந்த நிலையை கட்டியெழுப்புவதற்கு முதலில் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்கள் தேவை என்பதையும் வலியுறுத்திக் கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன்னலம் நிரம்பிய பாராமுகம் மற்றும் வன்முறை எதிர்ப்புகளையும் தாண்டி மக்களிடையேயும் தலைமுறைகளுக்கிடையேயும் உரையாடல்களை ஊக்குவிப்போம் எனவும் விண்ணப்பித்துள்ளார். யேசுவோடு நெருக்கமாக இருக்கும்போது அது மற்றவர்களுடன் நாம் நெருக்கமாக இருக்க உதவுகிறது எனக்கூறி அன்னை மரியாவின் பரிந்துரைகளை வேண்டி தன் செய்தியை நிறைவு செய்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.








# காலத்தை வென்ற கவியரசர் கண்ணதாசன்!

## இன்று கவியரசர் கண்ணதாசன் நினைவு தினம் அதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

காலத்தை வென்றவன், காவியம் ஆனவன், வேதனை தீர்ப்பவன், வெற்றித்திருமகன் எனப் பல வித முகங்களில் கண்ணதாசனை நான் பார்க்கின்றேன். சிறுகூடல் பட்டி என்னும் சிறிய கிராமத்தில் பிறந்து, சிந்தனைகளின் ஊற்றாக புறப்பட்டவர்தான் கவி அரசர். முத்தையா - கண்ணதாசன் ஆனதே ஒரு முக்கிய சம்பவம்தான். 'முத்தைத்தரு' என்று அருணகிரியாரைப்பாடவைத்து-அவரதுவாழ்க்கையையே மாற்றியது ஆண்டவனது அனுக்கிரகம். முத்தையா என்று தந்தை வைத்த பெயரும் அவரைச் சமூகத்தில் ஒரு முத்தாகவே மிளிரச்செய்தது. கண்ணதாசன் என்னும் பெயரும் அவருக்கு உலகில் பெரும் புகழைத் தேடித்தந்தது. இவையாவும் ஆண்டவனின் அனுக்கிரகத்தால் ஆகியிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. அருணகிரியார் முருகன் அருள் பெற்றதால் மடை திறந்த வெள்ளமெனச் சந்தப்பாடல்கள் வந்து குவிந்தன. எங்கள் கவியரசரும் ஆண்டவனின் வரம்பெற்று வந்தவராகையால் கம்பனுக்குப் பிறகு சந்தத்தை தமிழில் கையாண்ட பெருமைக்கு உரியவர் ஆகின்றார்.

நெற்றியில் விபூதியும், வாயிலே முருகனது நாமத்தையும் துணையென எண்ணி இருந்தவர் கண்ணதாசன். சேரக்கூடாத கூடாரத்துக்குள் சேர்ந்ததால் அவரின் பேச்சும் போக்கும், ஏன் எழுத்தும் கூட மாறியது. ஆனால் அவரின் அடிமனத்தில் ஆழமாகப் பதிந்து நின்ற ஆண்டவன் நினைப்பு மட்டும் அப்படியேதான் அடங்கிக் கிடந்தது. காலமும் கனிந்துவரக் கடவுள் நம்பிக்கை கண்ணதாசனிடம் மேலோங்கத் தொடங்கியது.

நாத்திகம் பேசி நாத்தழும் பேற்றியும், கடவுள் கண்டனம் செய்தும் நின்ற கண்ணதாசன் கடவுளே கதியென்னும் நிலைக்கு வந்து விட்டதை அவர் வாயிலாகவே நாங்கள் அறிந்து கொள்ளமுடிகிறது. "நாத்திகனாக இருந்தது இரண்டு, மூன்று ஆண்டுகளே கந்த புராணம், பெரியபுராணம். கம்பராமாயணம், திருவாசகம், திருப்பாவை, நாலாயிரம் திவ்ய பிரபந்தம், வில்லிபாரதம் இவற்றை எல்லாம் கண்டனம் பண்ணப் படித்தேன். ஆனால் அவற்றைப் படிக்கப் படிக்க என்மனம் அவற்றில் ஆழ்ந்து விட்டது" என்று அவரே சொல்லுகின்றார்.

நாத்திக வாதம் என்பது அரசியல் நோக்கங் கொண்டது என்பதையும், உள்மனத்தின் உண்மையான உணர்வல்ல என்பதையும் உணர்ந்தேன் என்பது கண்ணதாசனின் வாக்குமூலமாகும்.

கண்ணதாசன் அடிக்கடி விரும்பிக் கேட்கும் பாடல் என்ன தெரியுமா ? 'திருப்பாற் கடலில் பள்ளி கொண்டாயே ஸ்ரீமன் நாராயணா' என்பதாகும். அவரின் படுக்கை அறையில் வைத்திருந்த ஒரே படம் கிருஷ்ணர் படமாகும்.

இந்தியாவிலே கடவுளை நம்பாதவர்கள் ஒரு கட்சியாகக் கூட இருந்தாலும், அவர்கள் எல்லோரும் சேர்ந்து கடவுளைக் கண்டனம் செய்தாலும், அதனால் கடவுளுக்கு எந்தவித வருத்தமும் இல்லை. அதேவேளை கடவுள் நம்பிக்கையும் இல்லாமற் போய்விடவும் இல்லை. இதில் கண்ணதாசன் மிகவும் நம்பிக்கை உடையவராக இருந்த படியால்தான் படித்தவர்களும் போற்றுகிறார்கள், பாமரரும் போற்றுகிறார்கள் என எண்ணத் தோன்றுகிறது.

**கடவுளைப்பற்றி சந்தேகம்**
**வருபவர்களுக்கு**
**தெய்வம் என்றால் அது தெய்வம்**
**வெறும் சிலை என்றால் அது**
**சிலைதான்**
**உண்டென்றால் அது உண்டு**

இல்லை என்றால் அது இல்லை - என்று சொல்லும் விளக்கத்தைவிட வேறு எப்படிச் சொல்லமுடியும்? இதுதான் கண்ணதாசன்.

சினிமாவுக்கு என்று எழுதப்பட்டாலும் உள்ளத்தில் இருப்பதுதானே வரமுடியும்.

**பூஜ்ஜியத்துக் குள்ளே ஒரு ராஜ்ஜியத்தை**
**ஆண்டு கொண்டு புரியாமலே இருப்பான்**
**ஒருவன்**
**அவனைப் புரிந்து கொண்டால் அவன்தான் இறைவன்**

- பாமரரும் புரியும்படி கடவுள் தத்துவத்தைக் காட்டுவது அவரின் தனித்துவம்தானே.

ஆண்டவனின் அருள் அவருள் உறைந்து கிடந்தமையால்த்தான் அவரின் வார்த்தைகளில் அத்வைதம் இருந்தது. துவைதம் இருந்தது. விசிட்டாத்வைதமும் இருந்தது. வேதாந்தமும் சைவ சித்தாந்தமும் கூட இருந்தன எனலாம். சரஸ்வதி அவரது நாவிலே சம்மாணம் போட்டே இருந்தாள். மேலே காட்டிய தத்துவங்களை எவ்வாறு நாசூக்காகக் கண்ணதாசன் காட்டுகிறார் பாருங்கள்.....

**தெளிவாகத் தெரிந்தாலே சித்தாந்தம்**
**அது தெரியாமல் போனாலே வேதாந்தம்**
**மண்ணைத்தோண்டி கண்ணீர் தேடும் அன்புத்தங்கச்சி**
**என்னைத் தோண்டி ஞானம் கண்டேன் இதுதான் என்**
**கட்சி**
**உண்மை என்ன பொய்மை என்ன**
**இதில் தேன் என்ன**
**கடிக்கும் தேள் என்ன ஞானப் பெண்ணே**

**தெய்வம் தந்த வீடு வீதி இருக்கு**
**இந்த ஊரென்ன**
**சொந்த வீடென்ன ஞானப் பெண்ணே**
**வாழ்வின் பொருளென்ன**
**நீ வந்த கதை என்ன**

சகலவித தத்துவங்களும் இங்கே பாமரரரும் புரியச் சொல்லி நிற்கின்றார் கண்ணதாசன். இதனால் வெற்றித்திருமகன் தானே!



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர், மெல்பேண், ஆஸ்திரேலியா

கவிஞன் என்பவன் ஒரு குறுகிய வட்டத்துக்குள் சிந்திக்கக் கூடாது. அவன் சொல்லும் கருத்துக்கள் உலகம் தழுவ வேண்டும். வள்ளுவர் குறள் அப்படிப் பட்டதுதான். வள்ளுவரின் பரந்து விரிந்த நோக்கால் அவரின் திருக்குறள் உலகம் தழுவியதாக இருக்கிறது. நமது கவிஞரும் அப்படியான ஒரு மனநிலையில்த்தான் செயற்பட நினைக்கின்றார். வள்ளுவர் - அறம், பொருள், இன்பம் பற்றியெல்லாம் பாடினார். கண்ணதாசனும் அறத்தை, இன்பத்தை, பொருளை எல்லாம் பாடினார். அத்தோடு அருளையும் தமது பாட்டுக்களால் தந்தும் நின்றார்.

சங்கரமடத்தைச் சரண் அடைந்தார். ஒரு காலத்தில் காவி கட்டியவர்களையும் சங்கரமடத்தாரையுமே சாடியவர். பின்பு தானாகவே சரண் புகுந்தார். இது அவரிடம் ஏற்பட்ட மடை மாற்றமாகும். அதே கண்ணதாசனே யேசுகாவியத்தை பாடி மீண்டும் தனது நோக்கை விரிவாக்கிக் கொள்கின்றார். புத்தரைப் பாடுகிறார். நபிகளைப் பாடுகிறார். சத்தியம், நேர்மை, சமத்துவம் யாவற்றையும் போற்றிப்பாடுகின்றார்.

**'புத்தன் யேசு காந்தி பிறந்தது**
**பூமியில் எதற்காக தோழா**
**பூமியில் எதற்காக .... ?** - என்று கேள்வி எழுப்பி தனது நிலை எமக்கெல்லாம் காட்டி நிற்கின்றார் கவியரசர் அவர்கள்.

இறையுணர்வு ஊறிவிட்டால் யாவும் சிறந்த கருத்துக்களாகவே வந்து நிற்கும். அதில் பல தத்துவங்கள் வந்து விடும். வேதத்திலும், உபநிடதத்திலும், உன்னை அறிதல் என்பது பெரிய அரிய பெரிய தத்துவமாகும். தத்துவம் அஸி, அஹம் பிரம்மாஸி உபநிடதத்தின் உயிநாடியாகக் கருதப்படுகிறது. ரமண மகரிஷியும் முதலில் நீ யார் என்பதை அறி" என்றுதான் சொல்லுகிறார். இப்படியான உயர்தத்துவக் கருத்தை கண்ணதாசன் மிகவும் எளிதாக்கி எமக்குத் தரும் விதம் அவரின் உயராற்றலைத்தான் வெளிப்படுத்துகிறது.

**உன்னை அறிந்தால் நீ உன்னை அறிந்தால்**
**உலகத்தில் போராடலாம்**
**வாழ்ந்தாலும் தாழ்ந்தாலும் தலை வணங்காமல்**
**நீ வாழலாம்**

வாழ்ந்தாலும், தாழ்ந்தாலும், வாழுவோம் என்பது எல்லோரிடத்தும் எளிதாக வரக்கூடியதல்ல. அதற்கு ஒரு மனப்பக்குவம் தேவை. நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' என்னும் நாவுக்கரசர் அஞ்சாவார்த்தை தலை வணங்காமல் வாழுதலில் தெரிகிறதல்லவா?

மனமானது சமநிலைக்கு வந்து விட்டால் எதற்கும் அது ஆயத்தமாகிவிடும். இது ஒரு யோக நிலையாகும். இதனைக் கவிஞர் எப்படிச்சொல்கிறார் பாருங்கள்.

நான் - கடலளவே பெற்றாலும் மயங்கமாட்டேன் - அது

(22ஆம் பக்கம் பார்க்க)

## செவிநுகரக் கவிதந்த கவியரசன் நீயன்றோ!

கண்ணதாசன் கவிதைக்கு கற்கண்டே தோற்றுவிடும்
அவ்வளவு சுவையினையும் அவனளித்து நின்றானே
காதலினைப் பாடிவிடின் காமனுமே வந்திடுவான்
தேமமதுரத் தமிழாலே திசைநுகரக் கவிதந்தான்

பாவாணர் மத்தியிலே பக்குவமாய்க் கவிதந்தான்
பாரதிரக் கவிதந்த பாரதிக்கு மகனானான்
ஓவியமாய்க் கவிதந்தான் உயிர்ப்புடனும் கவிதந்தான்
சேமமுற வாழ்வதற்கும் சீராகக் கவிதந்தான்

நாத்தீகம் பேசிநின்ற நாட்களை நாமொதிக்கிவிடின்
ஆத்திகம் தானவனை அனைவர்க்கும் காட்டியது
சிறுகூடல் பட்டியிலே சிரித்து விளையாடியவன்
சிந்தனைக்குக் கவிதைதரும் சிறப்பினையே பெற்றுவிட்டான்

வேதக் கருத்தையெல்லாம் விளக்கியே கவிதந்தான்
சாதலுக்கும் விளக்கம்தந்து தத்துவமாய் கவியளித்தான்
நோதலுக்கும் ஒத்தடமாய் நுட்பமாய்க் கவிதந்தான்
போதிக்கும் அவன்கவிதை புதுக்கருத்தாய் மிளிர்ந்ததுவே

சொத்துக் குவிப்பதனை சுகமாகக் கொள்ளாமல்
வித்தகனாய் இருப்பதையே விருப்பமா யவன்கொண்டான்
வர்த்தகச் சினிமாவில் மாட்டாமல் இருந்திருப்பின்
வைகத்தை வாழ்விக்க வந்திருப்பான் கம்பனைப்போல்

அரசியலை எறிந்துவிட்டு ஆன்மீகம் நாடியதால்
அவனின்று சமூகத்தின் அரவணைப்பில் நிற்கின்றான்
அர்தமுள்ள இந்துமதம் அவன்தந்த மருந்தாகும்
அத்தனையும் எங்களுக்கு அருளுள்ள விருந்தாகும்

கவியரசு கண்ணதாசா காலமெலாம் வாழுகிறாய்
தமிழுலகில் உன்கவிதை தானுரமாய் நிற்குமையா
செவிநுகரக் கவிதந்த கவியரசன் நீயன்றோ
புவிமுழுதும் உன்கவிதை புகழோடு திகழுமையா

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர், மெல்பேண், ஆஸ்திரேலியா

பஸ்றி ஸீ.ஹனியா
LL.B (Jaffna)

"விவாகரத்தும் மறுமணமும் சமூகத்தால் பிழையாகப் பார்க்கப்படும் வரை குடும்ப வன்முறைகளும் வன்கொடுமைகளும் துஷ்பிரயோகங்களும் முற்றுப்பெறாதவை என்பது நிச்சயம்."



# விவாக ரத்து



ஒரு சமூகத்தின் அடிப்படை அலகு குடும்பமாகும். அவ்வாறான குடும்பம் ஒன்று உருவாக திருமணம் என்பது வாழ்க்கையில் மிக முக்கியமான ஓர் அம்சமாகும்.

சில பேருக்குத் திருமணம் குறிக்கோளாகவே இருக்கின்றது. திருமணம் ஒன்று நடப்பது என்றால் எத்தனையோ பொருத்தங்களைப் பார்த்து விடுகின்றோம். அத்தனை பொருத்தங்களையும் பார்த்துச் செய்யப்படும் திருமணம் பல காலங்களுக்கு நீடித்து விடுகின்றது. சிலரது திருமணம் இடையிலே நின்று விடுகின்றது.

திருமண முறிவு என்றாலே வாழத் தெரியாதவர்கள், பொருத்தமற்றவர்கள், விட்டுக் கொடுக்காதவர்கள், சகிப்புத்தன்மை இல்லாதவர்கள் என்று பல பெயர்களைச் சமூகம் கொடுத்து வருகின்றது.

மேலும் திருமணம் இடையில் நின்றுவிட்டால் வாழ்க்கையே அழிந்து விட்டது போலும், வாழ்க்கையே நாசமாகி விட்டது போன்ற எண்ணக்கருக்கள் காணப்படுகின்றன. இருந்தபோதிலும் இருவரால் தமது பிரத்தியேக வாழ்க்கை பற்றிய முடிவை அவர்கள் இருவரும் எடுக்கும்போது அதில் மூன்றாவது நபர் பாதிக்கப்படாத வரைக்கும் அவ்வாறான முடிவு ஒவ்வொருவரதும் சுய விருப்பம். இதில் சமூகம் நின்று சரி – பிழை கூறத் தேவையில்லை.

ஒவ்வொருவருக்கும் திருமணம் செய்வதற்கு எந்தளவுக்கு உரிமை இருக்கின்றதோ அதே அளவுக்குத் விவாகரத்துச் செய்வதற்கும் உரிமை இருக்கின்றது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஒருவரது விவாகரத்தானது அவரது திருமண முறிவு தவிர வாழ்க்கையின் அழிவு கிடையாது. விவாகரத்தை அவரது நன்னடத்தைகள் மற்றும் குணாதிசயங்களை ஒப்பிட்டு அவரைப் பிழையாக விமர்சித்தல் என்பது சமூகம் இன்றைக்கு வரைக்கும் செய்து கொண்டிருக்கும் ஒரு மனச்சாட்சியற்ற விடயமாகும்.

பிறரது வாழ்க்கையில் நாம் குறை கூறத் தயாராக இருக்கின்றோம் என்றால் எமது வாழ்க்கையிலும் குறை கூறுவர். அதையும் கேட்கத் தயாராக இருக்க வேண்டும். இதனை விட்டுவிட்டு அவரவர் குடும்பங்களைப் பார்க்கும்போது சமூகத்துக்கு இந்தக் குறைகூறும் வேலையே இருக்காதே.

இருந்தபோதிலும் எமது சட்டமானது யாராவது ஒருவரைக் குறை கூறிய பின்னரே விவாகரத்து வழங்கும் என்ற விடயத்தில் மிகவும் உறுதியாக இன்றைக்கு வரைக்கும் இருக்கின்றது.

ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாட்டிலிருந்து மாறுபட்டு இற்றைக்கு வாழ்க்கையைக் கொண்டு போவதற்கான சௌகரியத்தின் அடிப்படையிலேயே போக வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தால் பொருத்தமாக இருக்கும்.

ஒவ்வொரு வாழ்க்கைத்துணையும் அவர்களது வாழ்க்கைக்கு ஏற்ப எடுத்துக் கொள்ளும் முடிவாகும். ஆனாலும், சட்டரீதியாக ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திருமண உறவு சட்ட ரீதியாகவே முடிவுக்கு வர வேண்டும். அப்போதுதான் திருமணம் முடிவுக்குப் பின்வனரும் ஏற்படக்கூடிய பல பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்கும் நிலைப்பாட்டை நீதிமன்றங்கள் கொண்டிருக்கின்றன.

17ஆம் நூற்றாண்டு வரை பிரிட்டன் நீதிமன்றங்களுக்குக்கூட திருமண பந்தத்தைப் பிரிப்பதற்கு (விவாகரத்து ஆணை வழங்குவதற்கு) அதிகாரம் காணப்படவில்லை. அதன்பின்னர் நவீன நாகரிக வளர்ச்சியாலும், வியப்புறும் தொழில்நுட்பத் தோற்றத்தாலும், தனிமனித சுதந்திரம் எனும் பரந்துபட்ட எண்ணக்கரு நலன்புரி அரசுகளிடையே ஏற்படுத்திய தாக்கத்தாலும் மிக வரையறுக்கப்பட்ட சில சந்தர்ப்பங்களில் மட்டும் விவாகரத்து வழங்குவதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

இதன் முக்கிய காரணம் அன்று சட்டமும் சமயமும் ஒன்றாகவே சமூகளவில் நோக்கப்பட்டது.


இலங்கையில் பல்லின, பல மதங்களைக் கொண்டவர்கள் வாழ்கின்றனர். அவர்களின் கலாசாரத்துக்கு அமைவாக விவாக, விவாகரத்துச் சட்டங்கள் இருக்கின்றன. அதாவது கண்டிய சிங்கள மக்களுக்கு கரையோர சிங்கள மக்களிலிருந்து வேறுபட்ட சட்டமும், முஸ்லிம்களுக்கு அவர்களின் மதம் சார்ந்த இஸ்லாமிய சட்டமும் இருப்பதுடன் எல்லோருக்கும் பொதுவான சட்டமாக பொதுத் திருமணச் சட்டமும் உண்டு.

விவாகரத்தும் மறுமணமும் சமூகத்தால் பிழையாகப் பார்க்கப்படும் வரை குடும்ப வன்முறைகளும் வன்கொடுமைகளும் துஷ்பிரயோகங்களும் முற்றுப்பெறாதவை என்பது நிச்சயம்.

கிடைத்த வாழ்க்கையை வாழ்ந்தே ஆக வேண்டும் என்று இங்கு எவருக்கும் தலையெழுத்து கிடையாது. துஷ்பிரயோகங்களை அனுபவிப்பதற்குப் பதிலாக விவாக முறிவு என்பது சிறந்ததாக அமையலாம்.

விவாகரத்து என்பது விருப்பம் சம்பந்தப்பட்ட விடயமாகும். இதில் முடிவெடுக்க வேண்டியது ஒவ்வொரு தனிமனிதனுமே தவிர சமூகமோ அல்லது உறவினர்களோ கிடையாது.





# பொது அறிவு வாராந்த ஒரு பரீட்சை

இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம்.

பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் இப்பகுதியில் பத்து பொதுஅறிவு வினாக்கள் இடம்பெறும். கேள்விக்குரிய உங்கள் பதில்கள் அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமை பிரசுமாகும்.

சனிக்கிழமை காலை 8 மணிக்கு முதல் **Kalaikkathiredu@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு உங்கள் விடைகளை அனுப்பி வையுங்கள்.

தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியான பதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.

உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகிய வற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

**1. 2021 ஐ.பி.எல். கிண்ணத்தைக் கைப்பற்றிய அணி எது?**
**2. ஒரு கடிகாரம் ஒவ்வொரு மணி நேரத்திற்கும் 05 நிமிடம் பிந்தும் இன்று கலை 10 மணிக்கு சரியான நேரம் காட்டுகிறது நாளை காலை 10 மணிக்கு கடிகாரம் என்ன நேரத்தைக் காட்டும்?**
**3. 70, 68, 64, 58, 50,.... என்ற எண் தொடரின் அடுத்துவரும் இரு எண்களும் எவை?**
**4. கண்ணதாசனின் நினைவுதினம் எப்போது?**
**5. வானொலியைக் கண்டு பிடித்தவர் யார்?**
**6. உலகில் உள்ள நாடுகளில் ஐ.நாவில் அங்கம் வகிக்காத நாடுகள் எத்தனை?**
**7. இலங்கையில் ஒரே ஆண்டில் இரு நாடாளுமன்றத் தேர்தல்கள் நடைபெற்றன அது எத்தனையாம் ஆண்டு?**
**8. ரஷ்யாவினால் தயாரிக்கப்படும் கொரோனா தடுப்பூசியின் பெயர் என்ன?**
**9. இதுவரை அதிக தடவை ஐ.பி.எல். கிண்ணத்தைக் கைப்பற்றிய அணி எது?**
**10. இலங்கையின் பரப்பளவு யாது?**

பெயர் :- ..........................................
முகவரி :- ..........................................
தொலைபேசி இலக்கம்:- ....................
அடையாள அட்டை:- .........................
மின்னஞ்சல் முகவரி:- .......................

## 10.10.2021ஆம் திகதி பிரசுரமான பொது அறிவு வினாக்களுக்கான விடைகள்

01. 60
02. 120, 82
03. மும்பை, ஹைதராபாத்
04. அலெக்சாண்டர் கிரகம்பெல்
05. ஒக்ரோபர் 9
06. 7cm
07. 195
08. வில்லியம் கோபல்லாவ
09. ஜீவன் தியாகராஜா
10. 86,400 செக்கன்கள்

## சரியான பதிலளித்தவர்கள் விவரம் -

| | | |
|---|---|---|
| 01. எஸ். கருணாநிதி | யாழ்ப்பாணம் | 09 |
| 02. வி.வினோதினி | மட்டக்களப்பு | 10 |
| 03. கே.அனுஷன் | ஏழாலை | 10 |
| 04. வி.வினோத்குமார் | மட்டக்களப்பு | 10 |
| 05. கே. ஸ்ரீதரன் | கொழும்பு | 10 |
| 06. ஜெ.வினோஜன் | குடத்தனை | 09 |

# சாய்ந்தமருதில் யானைகள் அட்டகாசம் பெருமளவிலான சொத்துக்கள் சேதம்

சாய்ந்தமருது 03 ஆம் பிரிவில் உள்ள பிரதேசங்களில் புகுந்த யானையால் அங்கு பயிர்நிலங்கள், பயிர்கள், மரங்கள் முற்றாக சேதமாகியுள்ளன. அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களில் யானைகள் ஊடுருவுவதால் மக்கள் பாதிக்கப்படுகின்றமையுடன் உடைமைகளும் சேதமாக்கப்படுகின்றமை தொடர்கதையாகிறது.

இந்த சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை இரண்டு மணியளவில் இடம்பெற்றதாகவும். சாய்ந்தமருதில் சுற்றுமதில்களை அடித்து நொறுக்கியிருப்பதாகவும் இந்த யானை அரிசி ஆலையொன்றினுள் புகுந்து அங்கிருந்த நெல் மூடைகளையும் சாப்பிட்டு விட்டு சென்றுள்ளதாகவும் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த நிலைமையால் பாரியளவு பொருளாதார நஷ்டம் ஏற்பட்டுள்ளதோடு, இரவு வேளையில் பெரும் அச்சத்துடன் இருக்கிறோம் எனவும் அந்த மக்கள் மேலும் குறிப்பிடுகின்றனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அரசியல்வாதிகள் தலையிட்டு உடனடித் தீர்வைப் பெற்றுத் தருமாறு பாதிக்கப்பட்ட பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.




மணமகள் தேவை

**பிறந்த தேதி** : 1987/09/12
**மதம்:** இந்து
**ஜாதி:** வேளாளர்
**நட்சத்திரம்:** பரணி 1ம் பாதம்
**செவ்:** சூ/செவ்3ல்
**தகைமை:** AL
**தொழில்:** சொந்த தொழில்
**எதிர்பார்ப்பு:** உள்ளூர் சாதாரண பெண்

**பிறந்த திகதி** : 1985/10/28
**மதம்:** இந்து
**ஜாதி:** வேளாளர்
**நட்சத்திரம்:** கேட்டை
**தொழில்:** கனடா சொந்த தொழில்
**எதிர்பார்ப்பு:** இலங்கை அழகிய பெண்

**பிறந்த திகதி:** 1984/08/24
**நட்சத்திரம்:** புனர்பூசம்04ம் பாதம்
**தகைமை:** AL
**தொழில் :** பொலிஸ் உத்தியோகத்தர்
**எதிர்பார்ப்பு:** உள்ளூர் பெண்

**பிறந்த திகதி:** 1982/06/05
**மதம்** : இந்து
**ஜாதி:** வேளாளர்
**நட்சத்திரம்:** அனுஷம்
**தகைமை:** B.B.M
**தொழில்:** Accountant
**எதிர்பார்ப்பு:** உத்தியோக பெண்

**பிறந்த திகதி:** 1986/09/05

**மதம்:** இந்து
**ஜாதி:** வேளாளர்
**நட்சத்திரம்:** உத்திரம்
**செவ்:** 8ல்
**தகைமை:** Computer Engineer
**தொழில் :** Australia Not PR
**எதிர்பார்ப்பு:** Autralia & Canada

**பிறந்த திகதி:** 1990/08/11
**மதம்:** இந்து
**ஜாதி:** குருகுலம்
**நட்சத்திரம்:**ரேவதி
**செவ்:**7ல்
**தகைமை:** M.B.B.S
**தொழில் :** Doctor
**எதிர்பார்ப்பு :** மருத்துவம் படித்த பெண்

**பிறந்த திகதி** : 1991/09/04
**மதம்:** இந்து
**ஜாதி:** நளவர்
**நட்சத்திரம்:** புனர்பூசம்
**செவ்:** 8ல்
**தகைமை:** AL
**தொழில்:** அரச தொழில்(சாரதி)
**எதிர்பார்ப்பு:** படித்த பெண்

**பிறந்த திகதி** : 50 வயது
**மதம்:** இந்து
**ஜாதி:** வேளாளர்
**நட்சத்திரம்:** அஸ்தம்
விவாகரத்தான மணமகன்
**எதிர்பார்ப்பு:** யாழ்ப்பாணப் பெண்

0776505097
0778876969

தலைமை அலுவலகம் :
கனடா
0014166661855

# சிறுவர்கள் இருவர் நீரில் மூழ்கிச் சாவு!

தம்பகல்ல பொலிஸ் பிரிவின், உடுமுல்ல பிரதேசத்தின் கஹடபிடிய வாவியில் நீராடச் சென்ற சிறுவர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

சிறுவர்கள் இருவரும் மீட்கப்பட்டு மடுல்ல பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனர்.

14 வயதுடைய கொல்லாதெணிய, தம்பகல்ல பிரதேசத்தைச் சேர்ந்த சிறுவர்கள் இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

சடலங்கள் மடுல்ல பிரதேச வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், தம்பல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மாணவர்களுக்கு தடுப்பூசி ஏற்றுவதில் அதிபர், ஆசிரியர்கள் பெரும் பங்களிப்பு

கொழும்பு மாவட்டத்தில் உள்ள பல கல்வி வலயங்களில், உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு கொவிட் தடுப்பூசி வழங்கும் நிகழ்வு வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டதாக சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் ரஞ்சித் பட்டுவன்துடாவ தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற கொவிட் வைரஸ் தொற்று தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

கொழும்பு மாவட்டத்திலுள்ள, கொழும்பு மாநகர சபை மற்றும் குடும்ப சுகாதாரப் பணியகத்தின் பாடசாலை சுகாதார அலுவலகங்களின் ஊடாகவும் இந்தத்தடுப்பூசி வேலைத்திட்டம் இடம்பெறுகின்றது. கொழும்பு மாவட்டத்தின் ஏனைய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களுக்குட்பட்ட பிரதேசங்களின் சில பாடசாலைகளில் நேற்றும் தடுப்பூசிகள் வழங்கப்பட்டன.

நேற்று காலை தர்ஸ்டன் கல்லூரியில் உள்ள தடுப்பூசி மையத்தை பார்வையிட்டேன் என தெரிவித்த அவர், 'அங்கு பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களால் மிக நேர்த்தியாகவும், தெளிவாகவும் மற்றும் வெற்றிகரமாகவும் தடுப்பூசிக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது' என்றும் தெரிவித்தார்

இதற்கமைய, அடுத்த சில நாள்களில், இலங்கையில் 18 முதல் 19 வயதுக்குட்பட்ட அனைத்து மாணவர்களுக்கும், அதாவது 2020 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மற்றும் 2021 இல் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்ற இருக்கின்ற மாணவர்களுக்கும் தடுப்பூசிகளை வழங்க எதிர்பார்த்திருக்கின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# போரில் உயிரிழந்த மாணவர்களின் நினைவாக இரத்ததான முகாம்!



சிறுவர் தினத்தை முன்னிட்டு போரின் போது உயிரிழந்த மாணவர்களின் நினைவாக கிளிநொச்சி மகாவித்தியாலய 2015 உயர்தர மாணவ அணியினரின் ஒழுங்கு படுத்தலில் குருதிக்கொடை முகாம் இடம் பெற்றது.

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தில் இந்த இரத்த தான முகாம் 8 ஆவது வருடமாக நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சத்தியமூர்த்தி, கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் இரத்த வங்கியின் பொறுப்பதிகாரி வைத்தியர் எஸ். கருணதீபா, வைத்தியர்கள், கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தின் கணக்காளர் நவீன், கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் முன்னாள் அதிபர்கள் ஆசிரியர்கள் பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# மாகாண சபைத் தேர்தல் தேவையற்ற ஒன்றாகும்

## அப்துல் மஜீத் கூறுகிறார்

மாகாண சபைத் தேர்தல் தேவையற்ற ஒன்றாகும். அதன் மூலம் இனவாதம், பிரதேசவாத, குழுவாத, பிரச்சினைகள் தொடர்ந்தும் உருவாகி வருகின்றன என ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மௌலவி முபாரக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

கட்சியின் கல்குடா தொகுதி பொறுப்பாளரும், பிரதித் தலைவருமான சல்மான் வஹாப் மற்றும் கல்குடா தொகுதி ஆலோசகர் முஹம்மத் ஹக்கீம் ஆகியோர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வை தொடர்ந்து கட்சியின் தலைமையகத்தில் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலையே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

நாங்கள் எப்போதும் உண்மைகளை மட்டுமே மக்கள் மத்தியில் கூறிவருகிறோம். மயிலாக இருந்தாலும் சரி மரமாக இருந்தாலும் சரி கடந்த காலங்களில் கடுமையாக மஹிந்த அரசை விமர்சனம் செய்தார்கள். இப்போது அவர்கள் எல்லோரும் ராஜபக்ஷ அரசுக்கு சார்பானவர்களாக இருப்பதை வரவேற்கிறோம்.

அவர்கள் அரசுக்கு சார்பானவர்களாக இருந்தால் தான், எமது சிறுபான்மை சமூகத்துக்கும் ஏதாவது நன்மை கிடைக்கும். சிறிய சமூகமாக வாழும் நாம் பெரும்பான்மை இன மலைகளுடன் மோத முடியாது. கடந்த காலங்களில் அஷ்ரப்பும் எதிரணி அரசியலிலும் ஜனாதிபதி பிரேமதாஸாவை ஆதரித்து புதிய பரிணாமத்தைக் காட்டினார்.

20 இற்கு ஆதரவளித்த முஸ்லிம் கட்சிகளின் எம்.பிக்களுக்கு அரசால் அபிவிருத்தித்திட்டங்கள், தொழில்வாய்ப்புக்கள் கிடைத்துள்ளமையுடன் முஸ்லிம்களின் சமூகம் சார்ந்த பிரச்சினைகளை பேசும் வாய்ப்பும் கிட்டியுள்ளது.

கடந்த காலங்களிலும் இவ்வாறான சலுகைகளை பெற்ற ஹக்கீம், ரிஷாத் போன்றோர்கள் பின்னர் வந்த நாள்களில் கொப்புத் தாவினர். இந்த சம்பவங்கள் இனியும் தொடரக்கூடாது.

மு.கா. தலைவரின் நடவடிக்கைகள் முஸ்லிம் சமூகத்திற்கு பிழையானவை என்பதை உணர்ந்த மக்கள் அக்கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமை பகிரங்கமாக துரோகியென விமர்சிக்கின்றனர்.

அவரது துரோகத் தனங்களை நாங்கள் எப்போதோ பட்டியலிட்டு விட்டோம். இப்போது தான் மக்களுக்கு அது விளங்கியுள்ளது. முஸ்லிம் கட்சியின் தலைவர் படை பட்டாளங்களுடன் வரவேண்டிய காலம் மலையேறி இப்போது கோழித் திருடன் போல கிழக்குக்கு வந்து செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஹக்கீம் போன்றவர்கள் மக்கள் தங்களுக்கு வழங்கிய அமானிதத்திற்கு துரோகம் செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொள்வதுடன் மக்களும் இவ்வாறான ஏமாற்று தலைமைகளை நிராகரித்து நிதானமான அரசியல் கலாசாரத்தை உண்டாக்க வேண்டும்.

மாகாண சபைத் தேர்தல் தேவையற்ற ஒன்றாகும். அதன்மூலம் இனவாதம், பிரதேசவாத, குழுவாத, பிரச்சினைகள் தொடர்ந்தும் உருவாகி வருகின்றன. இப்போதே கிழக்கு முதலமைச்சர் யார் எனும் போட்டி ஆரம்பித்து விட்டது.

முதல்வர் சிங்களவரா? தமிழரா? முஸ்லிமா? முதலமைச்சு அம்பாறைக்கா? மட்டக்களப்புக்கா? அல்லது திருகோணமலைக்கா ? எனும் போர் ஆரம்பித்து கதையாடல்கள் ஆரம்பித்துவிட்டன. இவைகள் எமது நாட்டுக்குப் பொருத்தமற்றவை.

நாட்டின் பொருளாதாரம் கொரோனாவால் கடுமையாக வீழ்ந்துள்ளதுடன் வெளிநாட்டு இறக்குமதிகள் இல்லாமையால் விலைவாசியும் கடுமையாக எகிறியுள்ளது.

இதனை நுணுக்கமாகவும், நுட்பமாகவும் அரசியல், பொருளாதார திட்டமிடலை செய்யும் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ விரைவில் சீர்செய்து நிரந்தரத் தீர்வை கொண்டுவருவார் என்று நம்புகிறோம். - என்றார்.

# காலத்தை வென்ற ..........

(19ஆம் பக்கத் தொடர்ச்சி)

குழப்பங்கள் வருவது மனித வாழ்வில் தடுக்க முடியாத ஒன்று. ஆனால் அந்தக் குழப்பத்தையும் நாம் விளங்கி மனதைக் கலங்க விடக்கூடாது என்கின்றார் கவிஞர்.

**மயக்கமா தயக்கமா மனதிலே குழப்பமா**
**வாழ்க்கையில் நடுக்கமா**
**வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்**
**வாசல் தோறும் வேதனை இருக்கும்**

- வாழ்க்கையில் குழப்பம் வந்தால் தயக்கம்வரும் அதே நேரம் நடுக்கமும் வந்தே சேரும். அரசன் முதல் ஆண்டி வரை அனைவருக்கும் இந்த நிலை வெவ்வேறு உருவத்தில் - வெவ்வேறு விதமாக - வரும். எல்லார் வீட்டுக்கும் வாசற்படி இருபது போல வேதனைகளும் வீடுதோறும் இருக்கவே செய்யும். இது எத்தனை அனுபவமான ஒரு மிகப் பெரிய கருத்து. யாருமே வேதனைகளில் இருந்து தப்பித்துக் கொள்ளவே முடியாது

எனவே -

'கலங்காதிரு மனமே உன்கனவெல்லாம் நனவாகும் ஒரு தினமே' என ஆறுதலும் கூறுகின்றார் கண்ணதாசன் அவர்கள்.

**அதே வேளை -**
**வந்த துன்பம் எது என்றாலும்**
**வாடி நின்றால் ஓடுவதில்லை**
**எதையும் தாங்கும் இதயமிருந்தால்**
**இறுதிவரைக்கும் அமைதியிருக்கும்**
**நாளைப் பொழுதை இறைவனுக்களித்து**
**நடக்கும் வாழ்வில் அமைதியைத் தேடு**

- என்று புத்தியும் கூறுகின்றார். அதோடு நின்றுவிடாமல் மிகவும் முக்கியமாக ஒன்றையும் சொல்லி நிற்கின்றார்.

**உனக்குக் கீழே உள்ளவர் கோடி**
**நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு**
**எப்பொழுதும் நாங்கள் அனைவருமே**
**எங்களின் நிலையை மட்டுமே தினமும்**

பார்த்துப் பார்த்து எனக்கு மட்டும் ஏன் இப்படி? அவன் நல்லாய் இருகிறானே! என்று அல்லும் பகலும் மற்றவர்களைப் பார்த்து எமக்குக் கிடைத்தவற்றையும் வீணடித்து விடுவோம். காலுக்குச் செருப்பில்லை என்பவனுக்கும் கவலை. அதே நேரம் காலே இல்லை என்பவனுக்கும் கவலை. கஞ்சிக்கு உப்பில்லை என்பவனுக்கும் கவலை. குடிக்கக் கஞ்சி இல்லையே என்பவனுக்கும் கவலை. இதில் எது முக்கியம் என்பதை உணராமல் இருப்பதே பெரிய கவலை என்பதை யாவரும் உணர்தல் வேண்டும் என்பதை கவிஞர் சொல்லுவதை விட யாராலும் இவ்வளவு எளிமையாகச் சொல்லி விட முடியாதல்லவா? எத்தனையோ பேர் எம்மை விடவும் மோசமாக இருக்கிறார்கள் என்பதை ஓர் கணம் நினைத்தால் நாங்கள் படும் துன்பம் பெரிதாகவே தெரியாமல் போய் விடும் என்பதைக் கண்ணதாசன் சொல்லும் இடத்தால் அவர் உயர்ந்த கவிஞன் ஆகி நிற்கிறார் எனலாம்.

வாழ்க்கையில் அவர் அனுபவிக்காத இன்பங்களும் இல்லை. துன்பங்களும் இல்லை எனலாம். அவற்றையெல்லாம் அவர் எங்களுக்குத் தனது கவிதைகள் வாயிலாகத் தரவும் மறக்கவில்லை.

**எங்கே வாழ்க்கை தொடங்கும் - அது**
**எங்கே எவ்விதம் முடியும்**
**இதுதான் பாதை இதுதான் பயணம்**
**என்பது எவருக்கும் தெரியாது** - இது பெரிய தத்துவம்தான். ஆனால் இதில் கவிஞரின் ஒரு பங்கும் காணப்படுகிறது. சிறு கூடல்பட்டியில் இருந்து சென்னை வந்து படுக்க இடமில்லாமல் கடற்கரை ஓரத்தில் படுக்க அங்கும் படுக்க முடியாமல் பொலிஸ்காரர்களால் கண்ணாதாசன் போக்கிடம் இல்லாமல் விரட்டி அடிக்கப்படுகிறார். அப்பொழுது அவரது வாழ்க்கைப் பயணம் எப்படி அமையப் போகிறது, எங்கே முடியப்போகிறது என்பது அவருக்கே புரியாத ஒன்றாக இருந்திருக்கலாம் அல்லவா?

இதுவும் ஒருகருத்தாயும் இருக்கலாம். அதேவேளை மனித வாழ்வை நாங்கள் தீர்மானிக்கவும் முடியாதிருக்கும் என்பதும் கூட கருத்தாகலாம் தானே!

சுத்திச்சுத்தி கடவுளிடம்தான் கண்ணதாசன் வருகின்றார்.எதைச் சொல்லுவதானாலும் கடவுளையும் கூடவே வைத்திருப்பார்.

**நல்லவர்க் கெல்லாம் சாட்சிகள் ரெண்டு**
**ஒன்று மனட்சாட்சி**
**ஒன்று தெய்வத்தின் சாட்சியம்மா**
**நம்பிக்கை வைத்து கல்லையும் பார்த்தால் தெய்வத்தின் காட்சியம்மா**
**அதுதான் உள்ளத்தின் சாட்சியம்மா -**
**அதுதான் உண்மையின் சாட்சியம்மா**

- மனிதர்களே மனச்சாட்சிக்கு மதிப்பளியுங்கள். அல்லது தெய்வத்தை நம்புங்கள். இப்படி செய்யாது விட்டால் அது உங்களுக்கு ஏற்றதல்ல, அது நல்ல வாழ்வுக்கும் வழி வகுக்காது என்று சொல்லி எமக்கு நற்சிந்தனை வழங்குகின்றார் கண்ணதாசன் அவர்கள்.

அவரின் பாடல்கள் அழியாப்புகழ் பெற்றன என்பதில் எள்ளளவும் எந்தவித ஐயமும் இல்லை. ஆனால் கண்ணதாசன் வாழ்கின்றார் என்றால் அவரின் அர்த்தமுள்ள இந்துமதம் பெருங்காரணம் என்பதை எவருமே மறுக்க முடியாது. முப்பத்தெட்டு வருடங்கள் கவியரசனாகப் புவியையாண்டவன் கண்ணதாசன். எழுத்தாலும்,பேச்சாலும் எம்மைக்கட்டிப்போட்டவன். வாழநினைத்தால் வாழலாம் என்று தைரியம் கூறிய தமிழ்க் கவிஞன். ஆகவே அவன் காலத்தை வென்று, காவியமாக வெற்றித் திருமகனாகவே நிற்கிறான்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.10.2021 இல் வெளியிடப்பெற்றது.